**ANGLO ASIAN MINI MART**

*513 HIGH ROAD*
*WEMBLEY*
*MIDDX*
*HAO 4AG*
*0181 - 900 2451*

தரமான இலங்கை Groceries கடலுணவு வகைகள் மரக்கறி வகைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.



Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 5 04 – 10 பெப்ரவரி 1999 முழக்கம்: 212



**Sakthy** *Video*

*Video Filming for Wedding's B'day's & any other Occasion's*
**By 3 CCD CAMERA'S**

Please Cont:- 0181 -6956822
Mob: 0961313436

K.R.S.
33 Lee High Road, Lewisham Se -13
Tel: 0181-2979432


தென்தமிழீழம்:

# இராணுவம் மீது புலிகளின் பாரிய அதிரடிகள்

## * முன்னணி காவலரண்கள் தகர்ப்பு
## * 30-ற்கும் மேற்பட்ட படையினர் பலி

(01.02.1999)

தென் தமிழீழப் பகுதியில் ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா படையினர்மீது விடுதலைப் புலிகள் கடந்த சில தினங்களாக பாரிய அதிரடி தாக்குதலை மேற்கொண்டு வருவது சிறீலங்கா படைத்தரப்பிற்கு அதிர்ச்சியை அளித்துள்ளதுடன், இராணுவ ஆய்வாளர்களால் விடுதலைப் புலிகளின் பிடி கிழக்கில் மேலும் இறுகி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நடைபெற்றுள்ள தாக்குதல்களில் குறைந்தது 30ற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் பலியாகியதுடன் மேலும் பலர் காயப்படுத்தப் பட்டுள்ளனர். ஏராளமான ஆயுத தளபாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இராணுவத்தினரின் பல முன்னணி காலரண்கள் விடுதலைப் புலிகளால் முற்றாக தாக்கிய ழிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டிற்குள் போர் முடிவுக்கு கொண்டுவரப்படும் என சிறீலங்கா பாதுகாப்பு

(☞ 2ம் பக்கம்)



# முல்லை கடற்பரப்பில் பெரும் சமர்
# டோராக்கள் சேதம்

(01.02.1999)

கடற்புலிகளின் பிரதான தளமான சாலைப் பகுதிக்குள் பிரவேசிக்க முயன்ற சிறீலங்கா கடற்படையினரின் அதிவேக டோரா தாக்குதல் கலங்களும், பீரங்கிப் படகுகளும் கடற்புலிகளினால் விரட்டியடிக்கப்பட்டன.

முல்லை கடற்பரப்பில் கடந்த 29ம் திகதி எழுந்த இப்பாரிய சமர் இரவு 11மணி. தொடக்கம் அதிகாலை நான்கு மணிவரை நீடித்தது. இரு தரப்பினரும் கடற்கலங்களில் இருந்து எறிகணை தாக்குதல்களை மேற்கொண்டனர். கடற்புலிகளின் கைகள் ஓங்குவதைக் கண்ட கடற்படையினர் தமது

(☞ 2ம் பக்கம்)

# செலோவாக்கியாவில் 6 தமிழர்கள் பலி

செலோவாக்கியா நாட்டின் தலைநகரான பிரடிஸ்லாவாவில் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குள் செல்லும் நோக்குடன் தங்கியிருந்தவர்களில் 6 ஈழத் தமிழர்கள் வேகமாக வந்த தொடருந்து வண்டியினால் மோதப்பட்டு பலியாகியுள்ளனர். தொடரருந்துப் பாதையொன்றினூடாக நடந்துசென்ற வேளையிலேயே இக்கோர விபத்து நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. கடந்த கிறிஸ்மஸ் தினமன்று செலோவாக்கியாவில் அரசியல் தஞ்சம் கோரிய இவர்கள், பொலிசாரின் விசாரணையின் பின்

(☞ 2ம் பக்கம்)

# குருநகரில் கடற்புலிகள் தாக்குதல்
# MI-24 சேதம்

(31.01.99)

யாழ்.குருநகர் கடற்பரப்பில் கடந்த வியாழன் இரவு விடுதலைப் புலிகளின் கடற்புலி அணியினருக்கும் சிறீலங்கா விமானப் படையினருக்கும் இடையே இடம்பெற்ற சமரில் விமானப் படையினரின் MI-24 ரக உலங்கு வானூர்தி சேதமாக்கப்பட்டதுடன், அப்பகுதியில் இருந்து சிறீலங்கா விமானப்படையினர் விரட்டியடிக்கப்பட்டனர். குருநகர் கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த கடற்புலிகளின் அணிகளை இடைமறித்து இவ்வுலங்கு வானூர்தி தாக்குதலை மேற்கொண்டபோதே கடற்புலிகளும் கடுமையான தாக்குதல்களை நடாத்தினர். இத்தாக்குதலின்போது MI-24 ரக உலங்குவானூர்தி ஒன்றிற்கு பலத்த சேதம் ஏற்பட்டதையடுத்து அவ்வுலங்கு வானூர்தி அவசர அவசரமாக பலாலி படைத்தளத்தினுள் தரையிறக்கப்பட்டுள்ளது.

# இந்தியக் கப்பல்களை சிறீலங்கா கடற்படை இடைமறிப்பு

(01.02.1999)

இந்திய சரக்கு கப்பல்கள் இரண்டு சிறீலங்கா கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டு கப்பலில் தேடுதல் நடாத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. திருமலை வடகிழக்கு கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த இக் கப்பல்களை இடைமறித்த கடற்படையினர் அவற்றிலே விடுதலைப் புலிகளுக்கான ஆயுததளவாடங்கள் ஏதும் இருக்கின்றனவா என கண்டறிய கடுமையான தேடுதல்களை நடாத்தினர்.

கப்பலில் இருந்த சிப்பந்திகளும் தலைமை மாலுமிகளும்

(☞ 2ம் பக்கம்)

## புலிகளின் புதிய தாக்குதல் அணிகள் குடாவிற்குள்?

சிறீலங்காவின் 51 வது சுதந்திர தினத்தையொட்டி யாழ் குடாவில் பாரிய தாக்குதல்களை நடத்தும் நோக்கில் விடுதலைப் புலிகளின் புதிய தாக்குதல் அணிகள் யாழ் குடாவிற்குள் பிரவேசித்து வருவதாக சிறீலங்கா படைத்தரப்பை

(☞ 2ம் பக்கம்)

# தமிழர் மீதான போரில் பிரித்தானிய நாசகார ஆயுதங்கள்

(01.02.1999)

தமிழர் தாயகத்தின் மீதான போரில் சிறீலங்காப் படையினர் பிரித்தானியா ஆயுத[illegible] பயன்படுத்துவது தொடர்பாக ஆயுத வியாபராத்திற்கு எதிரான அமைப்பு கேள்வி ஏழுப்பியுள்ளதுடன், பிரித்தானிய அரசு இவ்வாறான நிலைமைகளுக்கு இடமளிக்க கூடாதெனவும் கோரியுள்ளது.

பிரித்தானியாவில் தற்போது ஆட்சி புரியும் தொழிற்கட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர் சிறீலங்காவிற்கு இராணுவ தளவாடங்களை ஏற்றுமதி செய்யும் வகையில் 67 அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனை விட 20 அனுமதி பத்திரங்கள் இராணவ பயன்பாட்டிற்கான இலத்திரனியல் சாதனங்களுக்கா வழங்கப்பட்டிருந்தன.

சிறீலங்காவின் மிக மோசமான மனித உரிம்ம மீறல்களுக்கு மத்தியில் இவ்வாறான அனுமதிகள் வழங்கப்பட்டுள்

(☞ 2ம் பக்கம்)


# தமிழினி

பல்பொருள் அங்காடி

**TAMILINI** *Cash and carry*

**195-197 The Broadway, Southall**
**Middx Ub1 1LZ**

Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 0796350216

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

# வணபிதா சாம் அல்பிரட் காலமானார்

யாழ்.மருதனாமடம் சேவாச்சிரமம், மட்டக்களப்பு கிரான் ஆச்சிரமம் ஆகியவற்றின் பிரதம சேவகர் வணபிதா சாம் அல்பிரட் கடந்த செவ்வாய்க்கிழமை மருதனாமடத்தில் காலமாகியுள்ளார். கடந்த 51 வருடங்களாக ஆன்மீகப் பணியாற்றிவந்த இவர் தமிழர் மரபிற்கேற்ப தரையில் உட்கார்ந்து வணங்குதல், பாதணிகள் இன்றி ஆலயத்தில் பிரவேசித்தல், குத்துவிளக்கேற்றுதல், கீழத்தேய வாத்தியங்களை ஆராதனையில் பாவித்தல் ஆகிய முறைகளை கிறிஸ்தவ வழிபாடுகளில் நடாத்துவதில் முக்கிய கவனம் செலுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது இறுதி நல்லடக்கம் கடந்த வியாழனன்று மருதனாமடத்தில் நடைபெற்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## முல்லை...

முயற்சியை கைவிட்டுவிட்டு இழப்புக்களுடன் திருமலைக்கு திரும்பிச் சென்றனர்.

இவ்வீரமிகு தாக்குதலில் விடுதலைப்புலிகளின் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். கடற்படையினரின் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள்பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாவிடினும் கடற்படை சிப்பாய்கள் பலர் உயிரிழந்ததாக திருமலை செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை ஆரம்பத்தில் இத் தாக்குதல் செய்திகளை இருட்டடிப்பு செய்த சிறீலங்கா தரப்பு, இன்று இத் தாக்குதலை ஒத்துக்கொண்டதுடன் டோராக் கலம் ஒன்றிற்கு பாரிய சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## இராணுவம்...

அமைச்சர் அனுரத்தை ரத்வத்தை தெரிவித்துள்ள நேரத்தில் விடுதலைப் புலிகளின் அதிரடிகள் கிழக்கில் நடைபெற்றுள்ளன. கடந்த முப்பதாம் திகதி காலையில் விடுதலைப் புலிகளின் சிறப்பு அதிரடிப் படையினரால் மட்டக்களப்பு ஏறாவூர் மாங்கேணி பகுதியில் அமைந்திருந்த 800 மீற்றர் தொலைவான இராணுவ காவலரண்கள் தாக்கி எரியூட்டி அழிக்கப்பட்டுள்ளன. காலை 6.30 மணியளவில் இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதேநாள் கரக்கன்கண்டு குளப்பகுதியிலும் இராணுவ அணிகள் விடுதலைப் புலிகளினால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இத் தாக்குதலின்போது இராணுவ வாகனங்கள் சிலவும் அழிக்கப்பட்[illegible]லாம் அல்லது கைப்பற்[illegible]பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இதுவரை அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

இவ்வீரமிகு தாக்குதல்களில் பத்து போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

# மட்டக்களப்பில் புளொட் உறுப்பினர் பலி

(01.02.1999)

மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் புளொட் உறுப்பினர் ஒருவர் அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிறீலங்கா விமானப்படையினரின் தளம் அமைந்திருக்கும் பகுதியில் உள்ள இவரது வீட்டிற்கு சென்ற ஆயுதபாணிகள் இவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இத் துப்பாக்கி சத்தத்தை கேட்டதும் காவலரணில் இருந்த சிறீலங்கா விமானப்படை சிப்பாய்களும் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர். படுகாயமடைந்த புளொட் உறுப்பினர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு மரணமானார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழர் மீதான...

ளன. 1998 இன் ஆரம்ப காலப் பகுதியில் சிறீலங்கா கடற்படையினருக்கென 'கூவர்' கடற்கலங்களின் விற்பனைக்கு அனுமதி அளிக்கப்பட்டது. (தற்போது இவை சிறீலங்கா கடற்படையால் பயன்படுத்தப் படுகின்றன)

'ஒக்ஸ்பாம்' அமைப்பின் அண்மைய ஆய்வின்படி பிரித்தானிய அரசின் 50 வீதமான ஆயுத ஏற்றுமதிகள் அரசியல் வன்முறைகள் மலிந்த நாடுகளுக்கே செய்யப்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால், கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தின் இரண்டாவது செயலாளரான நிக் அஸ்றபெரி பிரித்தானியா சிறீலங்காவிற்கு நாசகார ஆயுதங்களை ஏன் கண்ணீர்புகை குண்டுகள் கூட ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிக்கவில்லை என்கிறார்.

இதற்கு சிறீலங்கா பொலிஸ் பிரதி ஆணையாளர் யு.கே. திசாநாயகாசொல்வது என்ன? 1998இல் பிரித்தானியாவிடமிருந்து 300 கண்ணீர்புகை குண்டுகளை பொலிசார் கொள்வனவு செய்தனர். இவற்றின் வழங்குதலுக்காக இப்போது பொலிசார் காத்திருக்கின்றனர் என்கிறார்.

சிறீலங்கா அரசு சித்திரவதைகளுக்கு பிரித்தானிய உபகரணங்கள் எதனையும் பயன்படுத்துவதில்லை என்பது பிரித்தானியாவின் கருத்தாக இருந்தாலும், தமிழ் மக்களின் மீதான சித்திரவதைகளுக்கு இவை பயன்படுத்தப்படுகின்றன என்பது பல தரப்பாலும் சுட்டிக்காட்டப்படும் விடயமாகும்.

# பலாலியில் இருந்து கடுமையான எறிகணைத் தாக்குதல்

பலாலியிலுள்ள சிறீலங்கா இராணுவ தளத்தில் இருந்து யாழ்.நகரை நோக்கி கடுமையான எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. கடந்த வியாழன் இரவு ஆரம்பித்த இவ் எறிகணைத் தாக்குதல்கள் மறுநாள் காலைவரை இடம்பெற்றுள்ளது. இரவு 9 மணியளவில் அடுக்கடுக்காக ஏவப்பட்ட எறிகணைகள் யாழ். குருநகர் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. பாரிய சத்தத்துடன் வீழ்ந்து வெடித்த இவ் எறிகணைகள் காரணமாக யாழ். நகர மக்கள் பெரும் பீதியுடன் அன்றைய இரவினைக் கழித்துள்ளனர். விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா வான்படையினருக்குமிடையே சமர் நடந்த வேளையில் இவ் எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## செலோவாக்கியா...

னர் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர். இவர்களுடன் சேர்ந்து மேலும் பல ஈழத் தமிழர்கள் பொலிசாரினால் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். தற்பொழுது செலோவாக்கியாவில் நிலவும் கடும்குளிர் காரணமாக தலைகளை மூடிக் கட்டியபடி இவர்கள் புகையிரதப் பாதையில் நடந்துசென்றபோது தொடருந்து வண்டி வந்த சத்தத்தைச் செவிமடுக்கமுடியாத நிலையில் தொடர்ந்து பாதையினால் நடந்த வேளையிலேயே வண்டியினால் மோதப்பட்டு பலியாகியுள்ளனர். இவர்களின் இம் மரணத்தையடுத்து பயண முகவர்கள் சிலரை செலோவாக்கிய பொலிசார் தேடிவருகின்றனர். இவர்களது சடலங்கள் அடையாளம் காணமுடியாத நிலையில் சிதைவடைந்திருந்ததாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## தேர்தல் முடிவுகளுக்கு எதிராக ஐ.தே.க

(01.02.1999)

சிறீலங்கா வடமேல் மாகாணசபை தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து சிறீலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க இன்று கொழும்பில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின்...

ஆதாரம்காட்டி இராணுவ ஆய்வாளர்கள் 'கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக பிரவேசித்த அணி ஒன்றினாலேயே குருநகர் கடற்பரப்பில் வைத்து MI 24 உலங்குவானூர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தாக்குதலைத் தொடர்ந்து புலிகளின் தாக்குதல் அணி குடாநாட்டிற்குள் பிரவேசித்து விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


(1ம் பக்கத் தொடர்ச்சி)

## இந்தியக்...

படையினரின் விசாரணைகளு-க்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கப்பல் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று முல்லைத்தீவு பகுதிக்கு வந்து கொண்டிருப்பதாக புலனாய்வு தகவல்கள் வெளியாகியதை அடுத்தே கடற்படையினர் அப்பகுதியால் பயணிக்கும் சரக்கு கப்பல்களிலும் தமது கண்காணிப்பை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்புகொள்ள
வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689
Pub

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

# குடும்பஸ்தர் பட்டினியால் மரணம் வன்னியில் தொடரும் அவலம்!

(31.01.1999)

மன்னர் நீதிமன்ற அதிகாரிகள் மற்றும் பர்வையாளர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. 16 வயதான செல்வகுமாரி என்பவர் தனது தந்தையின் மரணம் தொடர்பாக நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தின்போதே இச்சம்பவம் இடம்பெற்றது. கரிப்பட்டுமுறிப்பு பகுதியில் வசித்துவந்த குடும்பஸ்தரான ம.சுப்பிரமணியம் என்பவர் பட்டினி காரணமாக கடந்த வாரம் மரணமடைந்ததை தொடர்ந்து அவரது மகள் தனது தந்தையின் மரணம்பற்றி தெரிவிக்கையில், ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து சிறீலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெயர்ந்து கரிப்பட்டுமுறிப்பு பகுதியில் வசித்து வந்தோம். ஏற்கனவே ஆறு மாதத்திற்கு முன்னர், மலேரியா காரணமாக எமது அம்மா இறந்துவிட்டார். எமது குடும்பத்தில் என்னுடன் சேர்த்து நான்கு சகோதரிகளும் ஒரு சகோதரனும் உண்டு. அன்றாடம் உண்பதற்கு கூட மிகவும் கஷ்டப்பட்டோம். பலநாட்கள் பட்டினி சில நாட்கள் அரைகுறை சாப்பாடு என்ற நிலையே இருந்தது. இந்த நிலையில் நிவாரணம் எதாவது பெறுவதற்காக வவுனியாவிற்கு நாம் வரத்தீர்மானித்தோம். வரும்வழியில் மடுச்சந்திக்கு ஊடாக வந்த வேளை நடப்பதற்கு தெம்பில்லாத நிலையில் எமது அப்பா, மயங்கி விழுந்துவிட்டார். காட்டுப்புறமான பகுதியில் தண்ணீர் தேடிவந்து அப்பா முகத்தில் தெளித்தும் அப்பாவிற்கு நினைவு திரும்பவில்லை. எம்முடன் வந்தவர்கள் அப்பாவை தூக்கிக் கொண்டு அருகில் உள்ள இராணுவ காவலரணுக்கு கொண்டு சென்று அவசர சிகிச்சை அளிக்குமாறு கோரினார்கள். ஆனால் இராணுவத்தினர் அப்பா இறந்துவிட்டதாக கூறினர்.

நடந்துவருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே நாங்கள் பட்டியாகவே இருந்தோம். பட்டினி காரணமாகவே எமக்கென்றிருந்த ஒரே துணையாக இருந்த அப்பாவும் இப்போது இறந்துவிட்டார். இப்போது எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை என கூறி இவர் கதறி அழுதபோது மன்னர் நீமன்றமே உணர்வு மயமாக காணப்பட்டது.

# நுணாவிலில் ஒருவர் பலி

(31.01.1999)

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு பகுதியில் சிறீலங்கா படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு ஒருவர் பலியாகி இன்னொருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

கடந்த 23ம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடைக்குச் சென்றுவிட்டு தென்னம் தோப்பினூடாக இவர்கள் இருவரும் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதன் காரணமாக நீர்வேலியைச் சேர்ந்த கவிதாஸ் என்பவர் உயிரிழந்ததுடன், சின்னராசா என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை, குப்பிளான் பகுதியில் உள்ள இராணுவக் காவலரணில் கடமைபுரியும் சிப்பாய்களினால் ஏழாலையைச் சேர்ந்த மஞ்சுளா என்னும் இளம் யுவதி சுடப்பட்டு படுகாயப் படுத்தப்பட்டுள்ளார். சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்தாலேயே இச்சம்பவம் இடம் பெற்றதென இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

# தேர்தல் வெற்றிக்காக அரசு வன்முறை மோசடிகளுக்கு இடம்கொடுத்துள்ளது

## - தேர்தல் கண்காணிப்பு நிலையம் -

(31.01.1999)

சிறீலங்காவின் வடமேல் மகாணசபை தேர்தல்களில் வன்முறைகளை பிரயோகித்ததன் மூலம் அரசு தன்மீதான நம்பகத்தன்மைக்கு சாவுமணி அடித்துள்ளது என தேர்தல் வன்முறைகள் தொடர்பான கண்காணிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தல் வன்செயல்களுடன் ஒப்பிடும்பொழுது இந்த மகாணசபைத் தேர்தல் அனைத்தையும் மிஞ்சும் வகையில் அமைந்துள்ளதென குறிப்பிட்டுள்ள இந் நிலையம், திட்டமிட்ட முறையில் வாக்களர்கள் பயமுறுத்தப்பட்டுள்ளதோடு கட்சிப் பிரதிநிதிகள் வாக்குச் சாவடிகளில் இருந்து பலாத்காரமாக அகற்றப்பட்டுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பலாத்கார வன்முறை நடவடிக்கைள் பொலிசாரால் தடுக்க முடியாதவாறு, அல்லது அவர்கள் தடுக்க விரும்பாதவாறு திட்டமிட்டு நடாத்தப்பட்டுள்ளது. தேர்தல் வெற்றிக்காக அரசு வன்முறைகளில் சரணடைந்தது, ஜனநாயகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. நடைபெற்ற இத் தேர்தலில் வன்முறைகளை தூண்டிவிட்ட இவர்களில் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்களான கிங்ஸிலி விக்கிரமரத்ன, ஜெயராஜ் பெனாண்டோ புள்ளே, நந்தவிக்கிரம ஏக்கநாயக்க, டூவன் குமாரதுங்கா ஆகியோரும் அடங்குவதாக இந்நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

# மின்மாற்றிகளை கண்காணிக்க பொதுமக்கள் குழுவாம்

(31.01.1999)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள மின்மாற்றிகள் குண்டுவைத்து தகர்க்கப்படுவதைத் தடுக்க பொதுமக்கள் குழுக்கள் அமைக்கப்பட உள்ளதாக சிறீலங்கா பொலீஸ்மா அதிபர் லக்கி கொடிதுவக்கு தெரிவித்துள்ளார். புறக்கோட்டையிலும், கொட்டாஞ்சேனை பகுதியிலும் உள்ள மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டமைக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என கூறிய அவர், இவ்வாறான தாக்குதல்களை தடுப்பதற்காக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மின்மாற்றிகள் உள்ள பகுதிகளில் பொதுமக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டு மின்மாற்றிகள் கண்காணிக்கப்படும் எனவும், மின்மாற்றிகள் இருக்கும் பகுதிகளில் சந்தேகத்திற்கு இடமானமுறையில் நடமாடுவோரை கைதுசெய்ய பொலிசாருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாலியல் வல்லுறவுக்கு உள்ளான பெண் மின்கம்பத்தில் கட்டி வைப்பு

(31.01.1999)

இனம் தெரியாத நால்வரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட பெண்ணொருவர் தலைமுடி வெட்டப்பட்ட நிலையில் மின்கம்பம் ஒன்றில் கட்டி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 29ம் திகதி அதிகாலை ஏறாவூர் தாமரைக்கேணி வீதியில் இடம் பெற்றுள்ளது.

அதிகாலை மூன்று மணியளவில் இப் பெண்ணின் வீட்டிற்குள் புகுந்த நால்வர் பாலியல் வல்லுறவுக் கொடூரத்தை புரிந்துவிட்டு, அவரது தலைமுடியினை தாறுமாறாக வெட்டியதுடன் அடித்து துன்புறுத்திவிட்டு வீட்டின் முன்னால் உள்ள மின்கம்பத்தில் கட்டிவிட்டு சென்றுவிட்டனர்.

தற்பொழுது இப்பெண் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தன்னைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திய நான்கு பேரையும் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என இவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச் சம்பவம் நடைபெற்ற பகுதியில் மேலும் இரு பெண்கள் ஏற்கனவே இவ்வாறான நிலைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் ஆனால் அவமானம் காரணமாக அதை வெளியில் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கனவில் வந்த விடுதலைப் புலியால் சிப்பாய் பலி

(31.01.1999)

மன்னார் உயிர்த்தராசன்குளம் பகுதியில் உள்ள சிறீலங்கா காவல் நிலையத்தில் கடமைபுரிந்த சிப்பாய் ஒருவர் தூக்கத்தில் இருந்தவேளை கனவில் விடுதலைப்புலிகள் வருவதைக்கண்டு தூக்கத்தைவிட்டு எழும்பி ஆயுதத்தை எடுத்தபொழுது இதை அவதானித்த இன்னொரு சிப்பாய் தூக்கக் கலக்கத்தில் விடுதலைப்புலி உறுப்பினர்தான் அப்பகுதிக்குள் உள் நுழைந்துவிட்டதாக கருதி அவர்மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டபொழுது அச் சிப்பாய் அவ்விடத்திலேயே பலியாகியுள்ளார்.

இதேவேளை சுட்டுக்கொண்டிருந்த சிப்பாயை விடுதலைப் புலியென நினைத்த இன்னொரு சிப்பாய் அவரை நோக்கித் துப்பாக்கி பிரயோகம் செய்ய முனைந்தபொழுது, மேற்படி நபர் தான் சிப்பாய்... சிப்பாய்... எனக்கத்தி நிலைமையை சமாளித்து விட்டார்.

கடந்த 2?ம் திகதி இரவு ஒரு மணியளவிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி முருங்கன் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எம்பிலிப்பிட்டிய படுகொலைகளின் தீர்ப்பு பெப்.10 இல்

(31.01.1999)

1989, 1990 காலப்பகுதிகளில் சிறீலங்கா இராணுவத்தினரால் எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள் சுமார் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலய அதிபர், அவரது மகன் மற்றும் ஏழு இராணுவ சிப்பாய்களுக்கு எதிராக நடாத்தப்பட் வழக்குகளின் தீர்ப்பு எதிர்வரும் பத்தாம் திகதி வழங்கப்படவுள்ளது. கடந்த இரண்டரைவருட காலமாக நடைபெற்ற இவ் வழக்கு விசாரணைகளில் சுமார் நூற்றுக்கும் அதிகமான சாட்சிகள் பங்கேற்றன.

தீர்ப்பு வழங்கப்படும் நாளன்று இரத்தினபுரி மேல் நீதிமன்றத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. ஏற்கனவே இவ் வழக்கின் தீர்ப்பு கடந்த 28ம் திகதி வழங்கப்பட இருந்தும் வழக்கின் பாரதூரத்தன்மை காரணமாக தீர்ப்பு வழங்கப்படுவது பெப்ரவரி பத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக நீதிபதி அறிவித்துள்ளார்.


## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
தொலைபேசி: 0148050214
0613342518
0607348051
0148385825


## தேர்தல் வன்முறைகள் குறித்து அமெரிக்கா கவலை

(31.01.1999)

வடமேல் மாகாணசபை தேர்தல்களின்போது வன் செயல்கள் இடம்பெற்றது குறித்து சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதரகம் தனது கவலையை தெரிவித்துள்ளது. தேர்தல் வன்செயல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களை அரசு விசாரித்து நடவடிக்கை எடுக்கவெண்டும் எனக்கோரிய தூதரகம், தமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட தேர்தல் வன்முறைகளும் ஒழுங்கீனங்களும் தம்மால் பரிசீலிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அடையாள அட்டையின்றி யாழ். குடாவில் இருந்து வெளியேற முடியாது

(31.01.1999)

சிறீலங்காவின் தேசிய அடையாள அட்டையின்றி யாழ். குடாநாட்டில் இருந்து ஏனைய பகுதிகளுக்குச் செல்ல பொதுமக்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என யாழ். இராணு நிர்வாகம் அறிவித்துள்ளது. தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் எவ்வித காரணம் கொண்டும் பயணிகள் கப்பல் மூலமோ அல்லது செஞ்சிலுவைச் சங்க கப்பல்கள் மூலமோ அல்லது விமான மூலமோ பயணம்செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தலால் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமது அடையாள அட்டைகளை தொலைத்த ஏராளமான மக்கள் குழப்பமடைந்த நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தேர்தலை இரத்து செய்யக்கோரும் குரல்களுக்கு மத்தியில் முடிவுகள்

(31.01.1999)

வடமேல் மாகாணசபை தேர்தலில் இடம்பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் வன்முறை சம்பவங்களை அடுத்து தேர்தலை இரத்துச் செயக்கோரியும் புதிய தேர்தல்களை நடாத்துமாறும் எழுப்பப்பட்ட குரல்களையும் மீறி, தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. வடமேல் மாகாணத்தின் இரு மாவட்டங்களான குருநாகல், புத்தளம் ஆகியவற்றில் உள்ள மொத்தமான 52 ஆசனங்களில் 30 ஆசனங்களை பொதுஜன ஐக்கிய முன்னணியும், 19 ஆசனங்களை ஐக்கிய தேசிய கட்சியும், 3 ஆசனங்களை மக்கள் முன்னணி கைப்பற்றியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. தேர்தலில் போட்டியிட்ட ஏனைய கட்சிகளான புதிய் இடதுசாரி முன்னணி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, சிறீலங்கா முற்போக்கு முன்னணி, லிபரெல் கட்சி, சுயேட்சை குழுக்கள் ஆகியவற்றுக்கு ஆசனங்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை புத்தளம் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 9 வாக்குச்சாவடிகளில் உள்ள வாக்கு எண்ணிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இத்தேர்தல் மூலம் முதலமைச்சராக பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் எஸ்.பி.நாவின்ன கடந்த வியாழனன்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

# தென்னாபிரிக்க பத்திரிகையாளர் குழு யாழ். குடா விஜயம் செய்யும்

(01.02.1999)

இம்மாதம் இரண்டாம் திகதி கொழும்பிற்கு வருவதாக திட்டமிட்டுள்ள தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர் குழு யாழ். குடாவிற்கும் விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை பல பகுதிகளுக்கும் விஜயம் செய்யும் இக்குழு, அரசியல் கட்சி தலைவர்களையும் சந்திக்க திட்டமிட்டுள்ளது.

பதினொரு பேர் அடங்கிய இக்குழுவில் நான்கு பேர் தமிழர்கள் ஆவர். கடந்த டிசெம்பர் மாதம் தென்னாபிரிக்க பாராளுமன்ற தூதுக்குழுவின் விஜயத்தினை அடுத்தே இப் பத்திரிகையாளர் குழுவின் விஜயம் இடம் பெறுகின்றது. இக் குழுவில் தென்னாபிரிக்க ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தை சேர்ந்த மாரிமுத்து சுப்பிரமணி, சண்டே ரைம்ஸ் இதழைச் சேர்ந்த கோவிந்தன், த போஸ்ட் பத்திரிகையை சேர்ந்த மாலன் படையாச்சி, கேப் டைம்ஸ் பத்திரிகையை சேர்ந்த காந்தன் பிள்ளை ஆகிய தமிழர்கள் இடம் பெறுகின்றார்கள்.

# மாகாணசபை தேர்தலை மீண்டும் நடாத்தகோரி ஆர்ப்பாட்டம்

(31.01.1999)

வடமேல் மாகாணசபை தேர்தல்களை இரத்துச் செய்து நீதியான தேர்தல்களை மீண்டும் நடாத்துமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), புதிய இடதுசாரி முன்னணி, முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகியவை இணைந்து கொழும்பில் கடந்த 28ம் திகதி பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளன. இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் மூவாயிரம் பேர் கலந்துகொண்டனர்.

வடமேல் மாகாணசபையைக் கொள்ளையடித்த அரசை விரட்டியடிப்போம், அரச பயங்கரவாதிகளை தோற்கடிப்போம், மோசடி தேர்தலை இரத்துச் செய் போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஜே.வி.பி செயலாளர் ரெல்வின் சில்வா, நவசமாஜ கட்சியை சேர்ந்த விக்கிரமாக் கருணாரத்தின உட்படபலர் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

# ஹபரணை சோதனைச்சாவடியில் இராணுவம்–பொலிஸ் மோதல்

(31.01.1999)

சிறீலங்காவின் ஹபரணை சோதனைச்சாவடியில் சிறீலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் மோதிக் கொண்டதில் பொலிசார் ஒருவர் காயமடைந்தார். நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஹபரணை சோதனைச்சாவடி ஊடாக கொழும்பை நோக்கிவரும் வாகனங்களை இராணுவத்தினரும் மட்டக்களப்பு நொக்கிச் செல்லும் வாகனங்களை பொலிசாரும் சோதனை செய்வது வழக்கம். சம்பவ தினத்தன்று, மட்டக்களப்பில் இருந்து வந்த வாகனமொன்றை சோதனை செய்வது தொடர்பாக சோதனைச்சாவடியில் இருந்த இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் இடைட்யில் முரண்பாடு எழுந்துள்ளது. இரு தரப்பினருக்குமிடையிலான வாக்குவாதம் கைகலப்பில் முடிவடைந்ததால் பொலிசார் காயமடைந்தனர். இச் சம்பவம் தொடர்பாக இரு சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# விசாரணைகளுக்காக பொலிஸ்நிலையம் சென்றவர்கள் வீடு திரும்பவில்லை

(31.01.1999)

விசாரணைக்காக வெல்லாவெளி பொலிஸ் நிலையத்திற்கு சென்ற இரு குடும்பத்தவர்களை கடந்த பதினைந்து நாட்களாக காணவில்லை என குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். மண்டூரைச் சேர்ந்த பூதியாகராசா, இநாரயணபிள்ளை ஆகிய இருவரும் வெல்லாவெளி பொலிசார் விசாரணைக்கென அழைத்ததையடுத்து கடந்த 14ம் திகதி பொலிஸ் நிலையம் சென்றுள்ளனர். ஆனால் அதன்பிறகு இவ்விருவரும் வீடு திரும்பாததால் அது பற்றி உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் விசாரித்தபொழுது விசாரணையின் பின் தாம் அவர்களை விடுவித்து விட்டதாக அவர்கள் தெரிவித்தனர். இவ் இருவருக்கும் என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை ஒன்றும் தெரியவராத போதிலும், பொலிசார்தான் இவர்களைத் தடுத்து வைத்திருப்பதாகக் கருதப்படுகிறது.

# முதலாம் ஆண்டு வீர வணக்கம்


## லெப்டினன் கந்தன்
## (ஞானப்பிரகாசம் கெவின் பிரபாகரன்)



மண்ணில் மலர்வு: **30.10.1978**

மண்ணிற்காக உதிர்வு: **06.02.1998**

*மண்ணின் மானம் காக்கப் புறப்பட்ட மறவனே!*
*களத்தில் எதிரிக்கு சிம்ம சொப்பனமானவனே!*
*தன்னலம் கருதாது தாயகத்தை நேசித்தவனே!*
*தலைவனின் ஆணைக்கு தலைபணிந்து சுவாசத்தை நிறுத்தியவனே!*
*வேள்வித் தீயில் குதித்து வெற்றிப்பரணி பாடி வித்தாகியவனே!*
*தமிழினம் உள்ளவரை உன் புகழ் என்றும் நிலைக்கும்!*
*உன் புகழ்தனை நாளைய சந்ததி சரித்திரத்தில் படிக்கும்!!*



தகவல்: ஞா. நிசாகரன்
ஜேர்மனி
தொலைபேசி: 0172-4464244

*உன் பிரிவால் துயருறும்*
*அம்மா, அப்பா, சகோதர சகோதரி*
*மற்றும் நண்பர்கள்*

# இரவோடு இரவாக இரண்டாந்தர பிரஜைகள் ஆக்கப்பட்ட வயம்பா மக்கள்

## - சிலாப ஆயர் -

(31.01.1999)

கடந்த 25ம் திகதி காலை வடமேல் மாகாண மக்கள் தூக்கத்தால் விழித்துக்கொண்டபோது தமது ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டதுடன் சிறீலங்காவின் இரண்டாம்தர பிரஜைகளாக தாம் ஆக்கப்பட்டதையும் உணர்ந்துகொண்டார்கள். இவ்வாறு சிலாப ஆயர் வண. மாக்கஸ் பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற இத் தேர்தல்களை தேர்தல் என அழைப்பதா யுத்தமென அழைப்பதா என எனக்குத் தெரியவில்லை. முன்னைய காலங்களில் இடம்பெற்ற வன்முறைகளைக் கண்டித்தவர்கள் இப்போது வன்முறைகளுக்கு நியாயம் கற்பிக்க முடியாது. வன்முறைகள் மூலம் ஆட்சியை கைப்பற்றி எவராவது தமக்கு மக்களிடம் இருந்து மதிப்பும் மரியாதையும் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

வடகிழக்கில் நடைபெறும் நீண்டகால யுத்தத்தின் எதிரொலியும் பிரதிபலனுமே இந்த வன்முறைகள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறான வன்முறை கலாச்சாரம் நிறுத்தப்பட வேண்டுமானால் யுத்தம் நிறுத்தப்பட வேண்டியது முக்கியமாகின்றது. எல்லா மக்களுக்கும் நீதி வழங்கப்படுவதே முக்கியம் என ஆயர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ்க்குழுவின் காவலில் இருந்தவர் தற்கொலை முயற்சி

(31.01.1999)

யாழ்ப்பாணத்தில் தமிழ்க் குழு ஒன்றினால் தடுத்துவைக்கப்பட்ட அளவெட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனக்குதானே தீமூட்டிக் கொண்டதால் எரிகாயங்களுடன் யாழ். வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பணக்கொடுக்கல் வாங்கல் பிரச்சினை தொடர்பாக தமிழ்க்குழுவொன்றினால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட இவர், தொடர்ந்தும் அவர்களது முகாமிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தன்னை விடுதலை செய்யுமாறு இவர் கோரியபோதும் தமிழ்க் குழுவினர் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். விரக்தி அடைந்த இவர், தனக்குத்தானே மண்ணெண்ணை ஊற்றி தீமூட்டி தற்கொலை செய்ய முனைந்துள்ளார்.

# இணுவிலில் தோன்றிய சிலை

(31.01.1999)

இணுவில் கந்தசாமி கோவிலுக்கு முன்னால் திடீரென தோன்றிய மூன்றரையடி உயரமான சிவன் சிலையொன்று அப்பகுதி மக்களை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியுள்ளது. காலை வேளையில் கோவிலுக்கு சென்ற மக்கள் கோவிலின் முன்றலில் இத் திடீர்சிலை தோன்றியிருப்பதை கண்டுள்ளனர். தற்பொழுது அச்சிலை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பக்தர்களால் வழிபடப்படுகின்றது.

ஏற்கனவே கோவிலில் திருடப்பட்ட சிலை, சம்பந்தப்பட்டவர்களின் பயம் காரணமாக ஆலயத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஓமந்தையில் 16 படையினர் காயம்

(31.01.1999)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் கடந்த 28ம் திகதி படையினர் பயணித்த உழவு இயந்திரமொன்று கவிழ்ந்ததால் 16 படையினர் காயமடைந்ததாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. ஆனாலும், விடுதலைப் புலிகளின் தாக்குதலிலே இவர்கள் காயமடைந்தார்களா என்பது பற்றிய உறுதியான செய்திகள் கிடைக்கப்பெறவில்லை. காயமடைந்த 16 சிப்பாய்களில் இருவரின் நிலைமை ஆபத்தானதாக இருந்ததால் அவர்களை அநுராதபுரம் வைத்தியசாலையில் இருந்து கொழும்பிற்கு அவசரமாக அனுப்பி வைத்துள்ளனர்.

# குடாநாட்டில் 70% மாணவர்கள் மந்தபோசணை தாக்கத்தில்

சிறீலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும் யாழ்.குடாவில் 70 சதவீதமான மாணவர்கள் மந்தபோசண நிலையில் காணப்படுவதுடன், ஆரம்பக் கல்வியைக் கற்கவேண்டிய சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிறார்கள் இன்னும் தமது ஆரம்பக் கல்வியைத் தொடங்காத நிலையில் உள்ளனர் என அரச சார்பற்ற நிறுவனமொன்றின் ஆய்வு தெரிவித்துள்ளது. முன்னர் கல்வியில் முன்னணியில் திகழ்ந்த யாழ்.குடா இன்று பின்தள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கும் இவ் ஆய்வு, மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு இராணுவ ஆக்கிரமிப்பு, அத்திய அவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, வேலையில்லாத் திண்டாட்டம், குடும்பத்தலைவர் இழப்பு என்பன முக்கிய காரணங்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. ஆரம்பக் கல்வியைத் தொடர முடியாது மாணவர்கள் இருப்பதற்கு பிரதான காரணம் வறுமை எனவும் அவ் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவம் அன்பளிப்பு செய்த யானைகளிடையே மோதல்! ஒரு யானை பலி

(31.01.1999)

சிறீலங்கா இராணுவத்தினரால் யானைகள் சரணாலயத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட கந்துளுவன்-1, கந்துளுவன்-2 என்ற யானைகள் தமக்கிடையே மோதிக்கொண்டதில் கந்துளுவன்-2 பலியாகியது. சுமார் இரண்டுமணி நேரமாக இடம்பெற்ற இம் மோதலிலேயே கந்துளுவன்-2 பலியாகியது.

சரணாலயத்தின் பெண் யானைகள் பகுதிக்குள் கந்துளுவன்-1 புக முனைந்தவேளையில் கந்துளுவன்-2 அதைத் தடுக்க முற்பட்டபோதே மோதல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

# புதிய பிரிட்டிஷ் தூதுவர்

(31.01.1999)

சிறீலங்காவிற்கான பிரிட்டிஷ் தூதுவராக இதுவரை இருந்த 'டேவிட் தத்தம்மின்' பதவிக்கு செல்வி 'லிண்டா டபீல்' நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வருட மே மாதத்தில் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் லிண்டா இதற்கு முன்னர் கனடாவின் ஒட்டாவா பகுதியில் உள்ள பிரித்தானிய தூதரகத்தில் பிரதித் தூதராக பணிபுரிந்தவர் ஆவார்.

# யாழ். வாசியிடம் திருச்சியில் கொள்ளை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜேந்திரம் என்பவர் தமிழ்நாடு திருச்சியில் தங்கியிருந்த வேளை அவரிடம் 130 பவுண் தங்க நகைளும் 60,000 ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களிற்கு முன்பு இவரது வீட்டிற்குச் சென்ற இனம்தெரியாத சிலர் தம்மை புலனாய்வு அதிகாரிகள் எனக்கூறி அறிமுகப்படுத்தியபின்னர் அவரது வீட்டைச் சோதனையிட்டுள்ளனர். அவ்வேளையே இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது. பின்னர் உயர் அதிகாரிகளைச் சந்திக்க வருமாறு இவரை அழைத்துச் சென்ற அந்நபர்கள் அவரை இடைவழியில் இறக்கிவிட்டு பணத்துடனும், நகையுடனும் தப்பிச்சென்றுவிட்டனர்.

# தீயில் எரிந்த இராணுவ வாகனம்!

(31.01.1999)

நேற்று முன்தினம் மாலை கொழும்பு கோட்டை பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் வாகனமொன்று தீப்பற்றி எரிந்ததால் அப்பகுதி பதட்டத்திற்கு உள்ளானது. இராணுவ உயரதிகாரி ஒருவர் பயணம் செய்யும் இவ் வாகனம் ரெலிக்கொம் நிலையத்திற்கு முன்னால் தரித்து நின்ற பொழுதே திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. இராணுவ வாகனம் தீப்பற்றி எரிவதைக்கண்ட பொதுமக்கள் பீதியுடன் அவ்விடத்தை விட்டு ஓடியுள்ளனர்.

பின்னர் அவ்விடத்திற்கு வந்த தீயணைப்புப் படையினர் தீயை அணைத்தனர்.

# பத்திரிகையாளர் வீட்டிற்கு குண்டு வீச்சு

(31.01.1999)

சிறீலங்காவின் 'லங்காதீப' பத்திரிகையின் செய்தியாளர் ஒருவரது வீட்டிற்குக் கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது. இரவுவேளையில் நடாத்தப்பட்ட இத் தாக்குதலின் காரணமாக வீட்டின் பெரும்பகுதி சேதமடைந்ததுடன், வீட்டில் இருந்த ஒருவர் தனது செவிப்புலனை இழந்துள்ளார். இச் சம்பவத்தில் இடம்பெற்றிருக்க கூடியவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை சிறீலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர்.

குண்டுவீச்சு நடந்த சமயம் செய்தியாளர் சோமரட்ண வெளியே சென்றிருந்ததாகத் தெரியவருகின்றது.


A.S.C.E.S இன் புதியவகுப்புகள்

14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறும் ஒரே இடம்

bio,chimie,maths,tamoul,anglais,français,histoire etc

dictée, orthographe, résumé, expression écrite வீட்டுப்பாடங்கள் செய்ய விளக்கம் பெற உதவி செய்யப்படும் சனி பி.ப 1.30 –ஞாயிறு காலை 10 மணி

பிரஞ்சு

23.01.99 சனி காலை 10.00 மணி

07.02.99 ஞாயிறு காலை 10.00 மணி

09.02.99 செவ்வாய் பி.ப 3 மணி (Paris 18 இல்)

03.02.99 புதன் பி.ப 3 மணி (Paris 18 இல்)

03.03.99 சனி பி.ப 3.30 மணி (பேச்சு வகுப்பு)

பிரஞ்சு கற்க சிறந்த கை நூல் நடைமுறை பிரஞ்சு

ஆங்கிலம்

Cambridge,Toefl பரீட்சைகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்

07.02.99 ஞாயிறு பி.ப 1.30–3.30 மணி 06.02.99 சனி காலை 10 மணி

கம்பியூட்டர்

Win95/98,Win NT,Word,Excel, hardware பயிற்சி

06–07.02.99 சனி–ஞாயிறு காலை 10 மணி பி.ப 1.30 மணி 3.30 மணி

சிறுவர்க்கான தமிழ் –பிரஞ்சு – கணித – ஆங்கில வகுப்புகள்

பிரதி சனி பிற்பகல் 1.30மணி முதல்

நடன வகுப்புகள் ஞாயிறு பி.ப 1.30மணி

தையல் கேக் அலங்காரம் : 06.02.99 சனி பி.ப 2 மணி–3.30மணி

சங்கீத வயலின் ஓர்கன் வகுப்புகள்

சனி ஞாயிறு காலை 9 மணி திங்கள் புதன் 3.30 மணி

சனி ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்

41, rue Didot 75014 PARIS M° Pernety Dir N° 13

Tél 01 42 57 23 56

திங்கள் செவ்வாய் புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்

2,rue Esclagnon 75018 Paris M° Porte de Clingnancourt


# புதிய கல்வித்திட்டத்தில் தமிழர் வரலாறு திரிபுபடுத்தப்பட்டுள்ளது

## – இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் –

விஜயன் முதன்முதலில் இலங்கைக்கு வந்தான் என்று தரம் 6 வகுப்புக்கான வரலாற்று நூலில் வரலாறு திரிபுபடுத்தி எழுதப்பட்டுள்ளது. விஜயன் இங்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் ஆதிக்குடிகளான இயக்கர் நாகர் வாழ்ந்துவந்த வரலாறு அந்த நூலில் முற்றாக மறைக்கப்பட்டுள்ளது. இதுதான் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் முதல்அடி. இவ்வாறு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள வரலாற்றுத்திரிபு என்னும் தலைப்பிலான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர்கள் காலத்திற்குக் காலம் வந்து குடியேறினார்கள் என்று அந்த நூலில் எழுதப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் சிறீலங்கா ஜனாதிபதி கூறிய வந்தேறுகுடிகள் என்ற பதத்திற்கும் இவ் வரலாற்றைத் திரிபுபடுத்திய நவீன நூலாசிரியர்களுக்கும் இடையிலான தொடர்பு இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அத்துடன் இந்நூலில் காணப்படும் தமிழர் மற்றும் முஸ்லீம் பெண்களின் படங்கள் தமிழ், இஸ்லாமியக் கலாச்சார உடைகளைக் கேலிபண்ணுவதாக உள்ளது. எனவே இந் நூலானது மீள அச்சிடப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிறீலங்காவில் சட்டவிரோதக் கருக் கலைப்புக்கள் அதிகரிப்பு

சிறீலங்காவில் சட்டவிரோதக் கருக்கலைப்புச் சம்பவங்கள் அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான கருக்கலைப்புக்குள்ளாவோரில் 10 வீதமானவர்கள் மரணமடைவதாகவும் 60—70 வீதமானவர்கள் கடுமையான உடற்பாதிப்புக்கு உள்ளாவதாகவும் குறிப்பிடும் ஐ.நா வின் ஆய்வொன்று திருமணமாகாத பெண்களே சட்டவிரோதக் கருக்கலைப்பில் ஈடுபடுவதாகவும் தெரியவருகிறது.

# ‘முட்கம்பி வேலிகளுக்கு பின்னால் எமது பணி’

## மட்டக்களப்பில் ‘எல்லைகளற்ற மருத்துவர் சங்கத்திற்காக’ பணிபுரிந்த ஒரு நியூசிலாந்து வைத்தியரின் அனுபவத்தொகுப்பு

ஐந்து பிள்ளைகளுக்கும், ஒரு இளங்கணவருக்கும் முன்னால் ஒரு இளந்தாய் அரச படையினரின் எறிகணையொன்றினால் சிதறிப்பலியாகும் போது அக் குடும்பத்திற்கு யாரால் என்ன ஆறுதல் கூற முடியும்?

இவ்வாறு மீண்டும் மீண்டும் கேட்கிறார் பௌவின் ஹெறாரில் என்ற இளம் வைத்தியர். நியுசிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் (எல்லைகளற்ற மருத்துவர்கள் சங்கத்தின்) மட்டக்களப்பகுதியில் தொண்டர் வேலைத் திட்டமொன்றிலே பங்கெடுத்துக்கொண்டபோது சிறீலங்கா படையினரின் எறிகணை வீச்சொன்றினால் இளந்தாய் ஒருவர் சிதறடிக்கப்பட்டு பலியான நிகழ்வொன்றினை நேரிலே கண்டவர். தனது ஆறுமாத கால பணியை முடித்த பின்னர் தனது அனுபவங்களை செய்தியாளர் ஒருவருக்கு வெளியிட்டபோதே தனது திகிலினை வெளிப்படுத்துகிறார்.

தொண்டர் பணிக்காக சத்தமும் நெருக்கடியும் நிறைந்த கொழும்பிலே காலடியெடுத்து வைத்தேன். கொழும்புத் தெருக்களைப் பார்த்தவேளை இந்த நாட்டில் ஒரு யுத்தம் நடைபெறுகிறதா என்று எனக்கு எண்ணத் தோன்றியது. ஆனால் எனது எண்ணம் எவ்வளவு தப்பானது என்பதை சில மணித்தியாலங்களின் பின்னர் அறிந்துகொண்டேன்.

கொழும்பிலிருந்து சுமார் நான்கு மணித்தியால பயணத்தின் பின்னர் தென்பட்ட பெரிய இராணுவ முகாம்களும், காவலரண்களும் இது ஒரு இராணுவ பிரதேசம் என்பதை சுட்டிக்காட்டியதுடன் கொஞ்சம் பீதியினையும் ஏற்படுத்தியது. இவற்றைக் கண்டதுமே எனது மனநிலை மாறியது. ஏதோயுத்த திரைப்படமொன்றின் படப்பிடிப்பு தளத்திலே நிற்பது போன்ற நிலைதான் அவ்வேளை தோன்றியது.

முட்கம்பி வேலிக்கும், இராணுவ முகாம்களும் காவலரண்களும் அங்குமிங்கும் நடமாடும் சிறிய வயதினராக தோன்றும் சிப்பாய்களும், அவர்கள் கைகளில் தூக்கும் தன்னியக்க ஆயுதங்களும் குழப்பமடைந்த மனநிலையாளர்களைப் போன்ற அவர்களின் பார்வைகளும் என்னால் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இச் சிப்பாய்கள் வறிய சிங்களக் குடும்பங்களிலிருந்து திரட்டப்பட்டவர்கள்.

அப்பாற் செல்லச் செல்ல வெடிமருந்துகளினால் சிதைக்கப்பட்ட, பலவருடங்களாக செப்பனிடப்படாத வீதிகளே விரிந்து சென்றன. இவ் வீதிகளால் வாகனமொன்றில் செல்வது இங்கு ஒரு வாழ்வாகிவிட்டது. இவ் வீதிகளை காணும் போது பனிச்சறுக்கல் வீதியொன்று குளிர்கால இறுதிப் பகுதியில் காணப்படும் நிலைக்கு ஒத்ததான காட்சியே நினைவுக்கு வரும்.

நாம் மட்டக்களப்பினை அடைந்தோம். அழகான கடற்கரைகளைக் கொண்ட வாவி பிரதேசமாக யுத்தத்தின் முன்னர் இவ்விடம் மிளிர்ந்திருக்கும், ஆனால் இன்று கண்ணிவெடிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இராணுவம் தான் பின்வாங்கும் பிரதேசங்களில் கண்ணிகளை விதைத்துவிட்டுச் செல்வதால் இந்த நிலை எழுந்துள்ளது.

எமது நாளாந்த பணிகூட மிகவும் கடினமாகத்தான் இருந்தது. சாதாரண ஒரு ‘பன்டேஜே’ துணியைக் கூட கொண்டு செல்வதானாலும் இராணுவ அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டும். 15 வருடங்களுக்கு மேலான போரினால் கிராமப் புறங்களிலே மருத்துவப் பொருட்களைக் காண்பதே அரிதாகப்போய்விட்டது. அரசின் போதாக்குறைக்கு கடுமையான மருத்துவத் தடை காரணமாக எமது மருத்துவப் பொருட்களையும், உபகரணங்களையும், வீதி சோதனைகளின்போது சிப்பாய்கள் சந்தேகக்கண் கொண்டே நோக்கினர்.

நாம் பணிக்காகப் போகும் இடங்களிலே இராணுவம் தாக்குதலைத் தொடுக்குமோ என்ற பீதி எம்மிடையே இருந்ததால் அது பற்றி இராணுவ அதிகாரிகளிடம் கேட்டறிவதும் அவசியமான ஒரு விடயமென்பது எமக்குத் தோன்றியது. நாம் பணிக்காகப் போகும் இடங்களில் சிலவற்றில் மக்களே இருப்பதில்லை. அவர்கள் ஏற்கனவே அங்கிருந்து இராணுவ அச்சம் காரணமாக வெளியேறிவிட்டதாக பின்னர் அறியக்கூடியதாக இருந்தது. காடுகளுக்குள்தான் அம்மக்களின் நாட்கள் கழிகிறது. சிலவேளை அவர்கள் கொஞ்ச நாட்களின் பின்னர் தமது வீடுகளுக்குத் திரும்பலாம், திரும்பாமலும் விடலாம். இதுதான் அவர்களின் வாழ்வுநிலை.

# அமெரிக்க குரலும் சந்திரிகாவின் சீற்றமும்



‘உளர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்’ என்ற பழமொழிக்கு ஏற்ப வடமேல் மாகாணசபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியினுள்ளே அங்கம் வகிக்கும் முஸ்லீம் காங்கிரஸ் கட்சியினர் தேர்தல் நடாத்தப்பட்ட ‘முறையை’ கண்டித்ததானது பொதுஜன ஐக்கிய முன்னணி பிரமுகர்களுக்கு எரிச்சலை உண்டுபண்ணி, ஐ.தே.க காரர்களுக்கு மகிழ்வினைக் கொடுத்திருக்கிறது.



வாக்களிப்பு நிலையத்தின் முன்னால் வாக்காளர்களை மிரட்டும் ஆயுதபாணிகள். படத்தின் இடதுமூலையில் திருடப்பட்ட வாக்குச்சீட்டுக்கள்

ஐ.தே.க வின் 17 வருட ஆட்சியை கொலைகார யுகம் என வர்ணிக்கும் சந்திரிகா குழாம் தேர்தல் தினத்தன்று சில மணி நேரத்திற்கிடையில் தாம் அணிந்திருந்த முகமூடிகளைக் கழற்றிவிட்டு தமது உண்மை வடிவத்தினை சிங்கள மக்களுக்குக் காட்டியுள்ளது.

**வாய்மூடி மௌனிகளாக தமிழ் மக்களின் மேலான யுத்தத்தினை பார்வையிட்ட சிங்கள மக்கள் தம் வீட்டுக்கதவுகளை வன்முறை தட்டும்போதுதான் சுதாகரித்துக் கொண்டுள்ளார்கள்**

எங்களாலும் குண்டர்களையும், கொலைகாரர்களையும் உருவாக்க முடியும் என்பது இத் தேர்தல் மூலம் பொ.ஜ.ஐ.முன்னணியால் வெளிப்படுத்தப்பட்ட இன்னொரு விடயமாகும். தேர்தல் நடாத்தப்பட்ட முறை எதிர்க் கட்சிகளால் நிராகரிக்கப்பட்ட போதிலும் தேர்தல் முடிவுகள் சிறிது தாமதத்தின் பின்னர் வெளியிடப்பட்டுள்ளன. பொ.ஜ. ஐ.மு.வின் முதன்மை வேட்பாளர் பி.நாவின்ன முதலமைச்சராக சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளார்.

இந்த தேர்தலிலே தனது எடுபிடிகள் தன்னையே மீறி செயற்பட்டமை சந்திரிகாவிற்கு நிச்சயம் நல்ல செய்தியாக அமைந்திருக்கவில்லை. இதனால்தான் கடந்த புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சற்று சினமடைந்து காணப்பட்ட சந்திரிகா, தேர்தல் வன்முறைகளிலே ஈடுபட்ட பொ.ஜ.

**பேம்பி**

ஐ.மு. உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துமுள்ளார்.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் (Paffrel, Cmev) தேர்தல் நடாத்தப்பட்ட விதம், அரச வன்முறைகள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டியதானது, சந்திரிகாவுக்கு சற்று அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சொன்னாலும் அது மிகையான கூற்றல்ல. இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ‘ஏதாவது’ வழியில் எம்மால் உதவ முடியுமானால் உதவுவதற்கு நாம் தயாராக இருப்பதாக தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் ‘சார்ள்ஸ் இன்டர்பேத்’ தெரிவித்தவேளையிலேயே அமெரிக்கதூதகரத்தின் ‘தேர்தல்’ பற்றிய கவலை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. போதாக்குறைக்கு அமைச்சர் அஷ்ரப்பும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அரசினை ஒரு பிடிபிடித்துள்ளார்.

ஒரு மாகாணசபைத் தேர்தலுக்கே இவ்வளவு வன்முறைகள் மலிந்து காணப்பட்டால் நாடளாவிய ரீதியில் தேர்தல் ஒன்று வருமானால் என்ன நிகழும் என்பது சிங்களப் புத்திஜீவிகளின் தற்போதைய கவலையாகப் போய்விட்டாலும், இந்த வன்முறைகளின் ‘தளம் என்ன’ என்பது சிலாபப்பகுதி ஆயரினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

வடக்கு—கிழக்கு மக்களின் மீது தொடுக்கப்பட்ட போரின் பின்விளைவுகள்தான் இந்த வன்முறைகள் என்பது ஆயரின் கருத்து. வாய்மூடி மௌனிகளாக தமிழ் மக்களின் மேலான யுத்தத்தினை பார்வையிட்ட சிங்கள மக்கள் தம் வீட்டுக்கதவுகளை வன்முறை தட்டும்போதுதான் சுதாகரித்துக் கொண்டுள்ளார்கள் என்பதற்கு ‘வயம்பா’ என அழைக்கப்படும் வடமேல் மாகாணசபை தேர்தல் முடிவுகள் நல்ல ஒரு எடுத்துக்காட்டு.

## இதுதான் முடிவு

| கட்சி | குருநாகல் மாவட்டம் | புத்தளம் மாவட்டம் | கிடைத்த ஆசனங்கள் |
|---|---|---|---|
| பொ.ஐ.மு | 405,431 | 160,722 | 30 |
| ஐ.தே.க | 273,892 | 105,876 | 19 |
| ஜே.வி.பி. | 31222 | 10759 | 03 |

ஏனைய கட்சிகளுக்கு ஆசனங்கள் கிடைக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.


# சோதிடம்

சோதிடம் திரு. எஸ். துதிபாலசுந்தரன் அவர்களின் பிரவேசம் வாசகர்களிடையே மகிழ்ச்சியான வரவேற்பையளிக்கும் என்பதில் ஐயமில்லை. இவர் பேராசிரியர் B.V. ராமனின் மாணவர் மட்டுமின்றி, சோதிடர், கணிதமேதை சகுந்தலாதேவிக்கு ‘சன்றைஸ்’ `Sunrise’ வானொலியில் சவால் விட்டு பரபரப்பை உண்டாக்கியது யாவரும் அறிந்ததே.

**சில கால இடைவேளைக்குப்பின் தற்சமயம் லண்டன் எட்ஜ்வெயாரில் (Edgware) தங்கியிருக்கும் இவரிடம்!**

1. உங்கள் முக்கால சோதிடபலன்கள்
2. ஜெனன குறிப்பு
3. விவாக பொருத்தம் முதலியவற்றைத் துல்லியமாக அறியவிரும்பின் நீங்கள்
   1. பிறந்த சரியான நேரம்
   2. பிறந்த ஆண்டு, மாதம், திகதி.
   3. பிறந்த இடம்

ஆகிய விபரங்களுடன் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்

*Tel: 0181 952 5010 (London)*

Pub

# முல்லைத்தீவை நோக்கும் படையினர் யாழ்.குடாவை நெருங்கும் புலிகள் அணி

ஜயசிக்குறுய் இராணுவ நகர்வு மாங்குளம் பகுதியைச் சென்றடைந்தவுடன் திடீரென முடிவுக்கு வந்தது. ஆனால் தரசர என்னும் பெயரில் இரண்டு இராணுவ நகர்வுகளை சிறீலங்கா உடனடியாக ஆரம்பித்து அதன் படைகள் ஒட்டுசுட்டான் புறப்பகுதியைச் சென்றடைந்தன. ஆனால் அங்கிருந்து எந்தவித நகர்வுகளையும் இப்படைப்பிரிவுகள் மேற்கொள்ள முயற்சிக்கவில்லை. மாங்குளத்தை இராணுவம் சென்றடைந்தபோதிலும், ஒட்டுசுட்டான் பகுதியைச் சென்றடைந்தபோதிலும் விடுதலைப் புலிகளின் குறிப்பிடத்தக்க எதிர்த்தாக்குதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. அடுத்து இராணுவம் எந்த முனையில் நகர்வினை ஆரம்பிக்கும் என்கின்ற பரபரப்பு நீடித்தது. அதேபோல் இராணுவத்தினர் மத்தியிலும் விடுதலைப் புலிகள் எங்கு தாக்குதல்களை ஆரம்பிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு பெரிதும் காணப்பட்டது. ஆனால் இவை எல்லாவற்றையும் மீறி தென்பகுதியில் நடந்த தேர்தல் யுத்தம் மிகுந்த பரபரப்பைத் தோற்றுவித்து விட்டது. ஒட்டிசுட்டானில் இருந்து படைகள் முல்லைத்தீவு நோக்கி நகரலாம் என்ற சந்தேகம் நீண்டநாட்களாகவே இருந்துவந்தாலும் தற்போது இராணுவம் அப்பகுதி நோக்கிய நகர்வினையே மேற்கொள்ளும் என்கின்ற உறுதி வலுத்து வருகிறது. ஆனால் ஒட்டுசுட்டானில் நிலைகொண்டுள்ள இராணுவம் எவ்வழியிலேனும் நகர முற்பட்டால் பாரிய தாக்குதல்களை எதிர்கொள்ளும் என தென்னிலங்கையில் இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். விடுதலைப்புலிகளின் பல படையணிகள் ஒட்டுசுட்டான் பகுதியை நோக்கியும், மாங்குளத்தை நோக்கியும் நகர்த்தப்பட்டுள்ளதாயும் இராணுவத்தின் நகர்வுகளை அவர்கள் உன்னிப்பாக அவதானித்து வருவதாயும் கூறப்படுகிறது. ஆரம்பத்தில் கிளிநொச்சி நோக்கி பாதைதிறப்பு என ஆரம்பித்த சிறீலங்கா இராணுவம் தற்போது முல்லைத்தீவை நோக்கிச் செல்லும் முயற்சியில் தீவிர ஆயத்தங்களை மேற்கொள்வதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

'லயன் எயார்' விமானம் மன்னார்குடாக் கடலில் விபத்திற்குள்ளானதைத் தொடர்ந்து தடைப்பட்டுப்போன யாழ் கொழும்பு விமானசேவையை மீண்டும் ஆரம்பிக்க பல நிறுவனங்கள் முயற்சித்தபோதும், மக்கள் பயணம் செய்ய மறுத்ததன் காரணமாக அவைகள் செயற்படுத்தப்படவில்லை. இரத்துசெய்த இராணுவம் அதற்கு பல காரணங்களையும் கூறுகிறது. தற்போது படையினர் பயணம் செய்யும் இருக்கை வசதிகள் அற்ற விமானங்களுக்கு போதிய இருக்கைகளை பொருத்தும்வேலை நடைபெறுகிறது எனக்கூறி தாம் அறிவித்த விமான சேவையை தாமதப்படுத்தியது. இவ் இடைப்பட்ட காலத்தில் தரித்து நிற்கும் 'லயன் எயார்' விமானங்களை வாடகைக்குப் பெற்று யாழ் குடாவிற்கான விமான சேவையை மேற்கொள்ளும் யோசனைகள் வழங்கப்பட்ட போதும் அதனையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இராணுவம் இல்லை எனச் சொல்லப்படுகிறது. இறுதியாக கடந்த வாரம் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளது என இராணுவம் அறிவித்தது. ஆனால் அதுவும் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. இதற்கு இராணுவம் காரணம் எதனையும் கூறாதுவிடினும் யாழ் குடாவில் மீண்டும் விடுதலைப் புலிகள் இராணுவத்தின் விமான சேவைக்கு எதிரான எச்சரிக்கையை விடுத்ததைத் தொடர்ந்து மக்கள் விமானத்தில் பயணம் செய்ய மறுத்துள்ளனர் என்பது தான் சரியான காரணம் என அறியப்படுகிறது. இராணுவம் செயற்படுத்தும் விமான சேவைகளை தாம் தடுத்து நிறுத்த முயற்சிகளை மேற்கொள்வோம் என யாழ் குடாவில் புலிகளின் அரசியல் பிரிவினரால் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. அத்துடன் சகல காரியாலயங்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அரச, இராணுவ தகவல்கள் கடிதங்கள் எதுவும் கிடைக்கவில்லை எனக் கூறினாலும் யாழ் குடாவின் பத்திரிகையாளர்கள் இக் கடிதத்தை பெற்றுக்கொண்டுள்ளதுதான் உண்மை என சொல்லப்படுகிறது.

**புலிகளின் நடமாட்டங்களை இராணுவம் அவதானித்த போதிலும் அவர்கள் எந்தவித முயற்சிகளிலும் ஈடுபடாமல் ஒதுங்கி இருக்கின்றனர் என சொல்லப்படுகிறது. தமது உயிர்களை வீணாக பலியிடாது ஒதுங்கியிருக்கும் முயற்சியே இது**

இதற்கிடையே சர்வதேச உதவி நிறுவனங்களின் செயற்பாட்டில் கப்பல் மூலமான பயணங்களை மேற்கொள்ள தாம் அனுமதிப்பதாக யாழ் குடாவில் விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர். சிறீலங்கா அரசு அந்த அறிவித்தலை உதாசீனம் செய்ததுடன் பல தனியார் நிறுவனங்களின் முயற்சிகளையும் தடுத்தது. இறுதியில் தாம் வடக்குக்கான விமானசேவையை நடத்துகிறோம் என அறிவித்து. விமானப்படை அதற்கென சில விமானங்களையும் ஒதுக்கியது. கடந்த மாதம் ஆரம்பிக்க இருந்த விமானசேவையை இதுவரை மூன்று தடவைகள்




யாழ் குடாவில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மீண்டும் அதிகரித்துள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். யாழ் நகரப்பகுதியிலும், சுற்றுப்புறப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் சாதாரணமாக நடமாடுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அனேகமான பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களை இராணுவம் அவதானித்த போதிலும் அவர்கள் எந்தவித முயற்சிகளிலும் ஈடுபடாமல் ஒதுங்கி இருக்கின்றனர் என சொல்லப்படுகிறது. தமது உயிர்களை வீணாக பலியிடாது ஒதுங்கியிருக்கும் முயற்சியே இது என யாழ் நகரவாசிகள் தெரிவிக்கின்றனர். இதற்கிடையே அங்கு செயலாற்றும் மற்றைய தமிழ் குழுக்களின் நடவடிக்கைகளை முடக்கும் செயற்பாடுகளை விடுதலைப் புலிகள் அதிகரித்துள்ளனர். அண்மையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த பொது மருத்துவமனையை அண்டிய பகுதியில் கொழும்புக் குழு ஒன்றின் யாழ் பொறுப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அங்கு விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் யாழ் குடாவில் இராணுவத்தின் 'ஆதரவுடன் செயல்படும் புளொட்டின் அமைப்பாளர் எம்மால் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார். யாழ் குடாவிற்குள் எம்மால் எதுவுமே செய்யமுடியாது என இராணுவம் கூறிவருகையில் அதற்கு பதிலாகவும், இராணுவத்துடன் இணைந்து தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட மற்றுமோர் தலைவரை அழித்து எமது செயற்பாட்டை நிரூபித்துள்ளோம் என விடுதலைப் புலிகள் கூறியிருந்தனர்.

★

## மரண அறிவித்தல்

பிறப்பு: 08.09.1948

இறப்பு: 31.01.1999

**வியாகேசு யோகராஜா**

(கணித ஆசிரியர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)
உடுப்பிட்டி இலக்கணவத்தை

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கணித ஆசிரியர் வியாகேசு யோகராஜா அவர்கள் கடந்த 31.01.99 அன்று உடுப்பிட்டியில் இயற்கை எய்திவிட்டார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவர் காலஞ்சென்ற உடுப்பிட்டி (இலக்கணவத்தை) வியேகேசு - மங்கையற்கரசி தம்பதிகளின் புதல்வனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தினேஸ்குமார், கம்சகா ஆகியோரின் அருமைத் தந்தையும்

சோதிராசா (உடுப்பிட்டி), விஜயராசா (சுவிஸ்), சிலோஜினி தேவி, பத்மாதேவி, விமலாதேவி (ஆசிரியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), நிர்மலாதேவி (ஆசிரியை உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி) ஆகியோரின் சகோதரரும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல். குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: விஜயராஜா
(சுவிஸ்)- 612740533

**ARUN & SONS** *Video & Textiles*

புதிய, பழைய வீடியோ படங்கள் வாடகைக்கும் விலைக்கும் மற்றும் பாடல் கொப்பிகள், சி.டி.க்கள், வீடியோ சிடிக்கள், ஒடியோ கசெட்டுக்கள்யாவும் மலிவு விலையில்

200 பிராங் முற்பணம் செலுத்தும் அங்கத்தவர்களுக்கு ஒரு புதிய வீடியோ பாடல் பிரதி இலவசமாக வழங்கப்படும்.

அருண் அன் சன்ஸ் ரெயிலறிங்

ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கேற்ற ஆடைவகைகளைக் குறைந்த விலையில் குறுகிய காலத்தில் தைத்துப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

சாறி பிளவ்ஸ், ஜீன்ஸ், சேட், சுடிதார் தைத்துக்கொடுப்பதுடன் ஆடைகள் திருத்த வேலைகளும் செய்து தரப்படும்



**ARUN & SONS** *Video & Textiles*
7, rue Perdonnet, 75010 Paris -M°: La chapelle
Tel: 01 42 05 36 19

# சென்னையில் 33 சதவீத இடஒதுக்கீட்டுக்கான அனைத்துக் கட்சி பெண் எம்.பி.க்கள் கூட்டம்!

(ஜனவரி-29)

பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றுவது குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சி பெண் எம்.பி.களின் கூட்டத்தை த.மா.கா வருகிற 6ம் திகதி சென்னையில் நடத்துகிறது.

பாராளுமன்றத்தில் பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டு சில கட்சிகளின் எதிர்ப்பால் நிறைவேற்ற முடியாமல் போனது.

வருகிற பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று த.மா.கா உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கோரி வருகின்றன.

இந்நிலையில் பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை எப்படி நிறைவேற்றுவது என்பது குறித்து அனைத்துக் கட்சி பெண் எம்பிக்களையும் அழைத்து விவாதிக்கப்போவதாக த.மா.கா மகளிர் அணி ஆலோசனைக் குழுத் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஜெயந்தி நடராஜன் அறிவித்திருந்தார்.

அதன்படி அனைத்துக் கட்சியைச் சேர்ந்த பெண் எம்.பி.க்களின் கூட்டம் வருகிற 6-ம் திகதி சென்னையில் கூட்டப்படுகிறது. சென்னை மியூசிக் அக்கடமி அரங்கில் 6ம் திகதி காலை தொடங்கி மாலை வரை நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு பாராளுமன்ற முன்னாள் சபாநாயகர் நஜ்மா ஹெப்துல்லா தலைமை வகிக்கிறார்.

இந்தக் கூட்டத்தில் தமிழக அமைச்சர் சற்குணபாண்டியன், முன்னாள் மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உட்பட அனைத்து கட்சி பெண் எம்.பி.க்கள் கலந்து கொள்கிறார்கள். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஜெயந்தி நடராஜன் எம்.பி.யும், த.மா.கா மகளிர் அணியினரும் செய்து வருகிறார்கள்.

# சென்னையில் குளிர்!

(30-01-1999)

சென்னையில் கடந்த சில நாட்களாக குளிர் வாட்டி எடுக்கிறது. காலை எட்டு மணிவரை பனிப்புகார் புகை மூட்டம் போல் இருக்கின்றது. எதிரில் வருவது யார் என்றே தெரியாத அளவுக்கு பனிப்புகார் காணப்படுகிறது. இந்தக் குளிரினால் இருவர் பலியாகி இருக்கிறார்கள். சென்னை திருவான்மியூரிலும், சேத்துப்பட்டிலும் இச் சம்பவங்கள் நிகழ்ந்தன. பனிக்காலம் வரும்போது குளிர் இருப்பதானாலும் தற்போது உள்ள அளவுக்கு இருந்ததில்லை என சென்னை வாசிகள் ஆச்சரியத்துடன் தெரிவிக்கின்றனர்.

# சுயமரியாதை திருமணத்தை கைவிடக் கூடாது! தமிழ்நாடு முதல்வர் வேண்டுகோள்

(30-01-1999)



சுயமரியாதை திருமண முறையை நாம் ஸ்கவிட்டுவிடக் கூடாது என்று தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழ்நாடு தேர்வாணைய குழு உறுப்பினரின் மகன் திருமணத்தை நடத்தி வைத்து முதல்வர் கருணாநிதி பேசியதாவது:

சங்க இலக்கியங்களில் கூட சுயமரியாதை திருமணங்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தச் சமுதாயம் பகுத்தறிவு சமுதாயமாக மாறவேண்டுமென்று எண்ணி பெரியாரும், அண்ணாவும் திராவிட இயக்கத்தை நம்முடைய கரங்களில் ஒப்படைத்துவிட்டு சென்றிருக்கிறார்கள். சட்டம் ஆவதற்கு முன்பே பல ஆயிரம் திருமணங்கள் சுயமரியாதை முறைப்படி நடைபெற்றிருக்கின்றன. சட்டம் ஆனவுடன் பல ஆயிரம் திருமணங்கள் நடைபெற்று வருகின்றது. அந்த நடைமுறையை தவறாமல் நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்றார் அவர்.

## இந்தியச் செய்திகள்

# கோவிலுக்குள் நுழைய சோனியாவிடம் கையெழுத்து?



காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று முன்தினம் காலை தனது மகள் பிரியங்காவுடன் திருப்பதி ஏழுமலையானைத் தரிசித்தார். இந்தத் தரிசனத்திற்குப் பின்பு ஒரு சுவையான காட்சியும் நடந்தது.

திருப்பதி கோவிலுக்குள் இந்து அல்லாத மற்ற மதத் தலைவர்கள் நுழைய வேண்டும் என்றால், கோவில் விதிமுறைப்படி வெங்கடாஜலபதி மீது முழு நம்பிக்கை இருப்பதாக எழுதி கையெழுத்திட்டுக்கொடுக்கவேண்டும். சோனியாகாந்தி கிறிஸ்தவர் என்பதால், அவரிடம் இந்தக் கையெழுத்தை வாங்க கோவில் நிர்வாகத்தினர் முயன்றனர்.

ஆனால், சோனியாவுடன் சென்ற காங்கிரசார் இதை ஏற்க மறுத்தனர். இந்துவான நேருவின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால், சோனியா இது போல உறுதி மொழி கொடுத்து கையெழுத்திட வேண்டியதில்லை என்று அவர்கள் வாதிட்டனர். அதன்பின் கோவில் நிர்வாகிகள் சமரசமடைந்து சோனியாவைக் கோவிலுக்குள் நுழைய அனுமதித்தனர்.


# தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதிக்காக



தமிழர் நலன்புரிச்சங்கம்-சொலத்தூண்

நடத்தும் இரண்டாவது ஆண்டு

சுவிஸ் தழுவிய

**பரதநாட்டியப் போட்டியும்**
**எழுச்சி நடனப்போட்டியும்**

சிறப்புவிருது

99ம் ஆண்டுக்கான 'நாட்டியமயில்' விருது

**காலம்:**

22.05.99 சனி காலை 10.00 மணி
23.05.99 ஞாயிறு காலை 10.00 மணி

**இடம்:**

Rest. Flosserhof
Emmenstr. 4, 4562 Biberist (so)

தொடர்புகளுக்கு:
032/652 05 32, 032/685 65 35,
032/685 48 87 & 076/396 31 91

உணர்வோடு உறவாடும் தாயக உறவுகளே உங்களுக்காக
இரு நாட்கள் சலங்கைகளின் சங்கமம்.

# தமிழை உலகம் முழுவதும் பரப்ப சென்னையில் 'தமிழ் அகாடமி' துவக்கம்

தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்பும் நோக்கத்துடன், சென்னையில் 'தமிழ் அகாடமி' என்ற புதிய அமைப்பின் துவக்க விழா நடந்தது. பிரபல நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தி, தமிழ் அகாடமியின் தலைவராக ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். செயலாளராக கி.ஆ.பெ. விஸ்வநாத்தின் மருமகன் த.சி.க. கண்ணன், பொருளாளராக ஆர்.பி.நாயுடு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மகேகலை கண்ணன் வரவேற்றுப் பேசினார். விழாவில் டாக்டர் ராமமூர்த்தி பேசியதாவது:

தமிழ் மொழியானது நம் மாநிலத்திற்குள் மட்டுமே வளர்ச்சியடைந்தால் போதாது. அதை எட்டுத் திக்கும் பரப்பவேண்டும். தமிழ்மொழி மட்டும் ஏன் இவ்வளவு கொச்சையாகப் பேசப்படுகிறது என்பது புரியவில்லை. ஆங்கிலமும் தெலுங்கும் கூட இப்படிப் பேசப்படுவதில்லை. யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி அழகாக பேசப்படுகிறது. தமிழ்நாட்டில் திருநெல்வேலியில் கூட நன்றாக பேசப்படுகிறது. ஆனால் சென்னையில் மட்டும் மோசமாகத் தமிழ் மொழி பேசப்படுகிறது.

கம்பராமாயணத்தில் அற்புதமான கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. பிரெஞ்சு மொழியைப் பரப்ப 'பிரெஞ்சு அகாடமி' இருப்பதுபோல, தமிழ் மொழியை வெளிநாடுகளிலும், அயல்நாடுகளிலும் பரப்ப, தனி அகடாமி தேவைப்படுகின்றது. அதற்காக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது.

திருக்குறளை எல்லா மொழிகளிலும் மொழிப் பெயர்ப்புச் செய்து வெளியிட வேண்டும். 21-ம் நூற்றாண்டில் தமிழ் மொழியை மேலும் பலப்படுத்த வேண்டும். மேன்மையோடு செயல்படுவதை தான் 'அக்கடமி' என்ற சொல் குறிக்கிறது, அந்த வகையில் நாம் மேன்மையோடு செயல்படவேண்டும். இந்த அமைப்பில் அரசியலுக்குத் துளி கூட இடமே இல்லை. தமிழ் மொழி வளர்ச்சி என்பது தான் முக்கிய நோக்கம். தமிழ் மணத்தை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும்.

இவ்வாறு டாக்டர் ராமமூர்த்தி பேசினார்.

மூத்த வழக்கறிஞர் காந்தி பேசுகையில், 'பொதுவாக இன்றைய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, பாதியிலேயே அது செயல்படாமல் நின்றுவிடும். அதுபோல, இந்த அமைப்பு இல்லாமல், தமிழ் வளர்ச்சிக்கு எந்த அரசு உரியவையைச் செய்யவில்லையோ, அந்த அரசுக்கு நம்முடைய கருத்துக்களைத் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படியும் ஆட்சியாளர்கள் உரிய வகையில் செயல்படாவிட்டால், அவர்களைத் 'தமிழ் துரோகி' என்று நாம் தைரியமாகச் சொல்ல வேண்டும். பத்திரிகைகளில் வரும் தவறுகளையும் அரசுக்கு சுட்டிக்காட்டவேண்டும். இந்த அமைப்பு, மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ கூட வேண்டும்' என்றார்.

தமிழக காந்தி பேரவை தலைவர் குமரி அனந்தன் பேசும்போது, 'பணவிடை விண்ணப்பம் தமிழில் வருவதற்கும், ஆகாஸ வாணி என்ற பெயரை வானொலி என்று தமிழில் மாற்றுவதற்கும் நான் போராடியுள்ளேன். நாடாளுமன்றத்தில் தமிழில் கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும் என போராடி, அந்த உரிமையைப் பெற்றோம். ஆனால், இப்போது யாரும் நாடாளுமன்றத்தில் தமிழில் கேள்வி கேட்பது இல்லை. இதனால், பெற்ற உரிமையையும் இழந்து நிற்கிறோம். கன்னியாகுமரியில் இன்றைக்கும் நமக்குத் தெரியாத பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவையெல்லாம் ஒன்றாக தொகுக்கவேண்டும்' என்றார்.

## வாழைப்பழம்: இரத்தக் கொதிப்பு நோய்க்கான மருந்து!

*(30-01-1999)*

எந்த வகையான வாழைப் பழமானாலும் அதற்கு இரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்தும் சக்தி உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. டெல்லியிலுள்ள கஸ்தூரிபாய் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமது ஆய்வின் மூலம் இதனை நிரூபித்துள்ளனர்.

ஏழைகளின் இறைச்சி என்ற பெயர் வாழைப்பழத்திற்கு உண்டு. வாழைப்பழங்களில் பல வகை உள்ளன. ஒவ்வொரு வகையான பழத்திற்கும் சிறப்பான மருத்துவ குணங்கள் உண்டு. வாழைப்பழத்தின் மருத்துவ குணங்களை அறிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. தினமும் இரண்டு வாழைப்பழம் வீதம் ஒருவாரம் தொடர்ந்து சாப்பிட்டு வந்தவர்களுக்கு இரத்தக் கொதிப்பு குறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆறு வகையான வாழைப்பழங்கள் இந்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அப்போது எல்லா வகை வாழைப் பழங்களுக்கும் இரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்தும் மருத்துவ சக்தி உள்ளது என்பது நிரூபணமானது.


கஸ்தூரிபாய் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமது ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:

இரத்தக் கொதிப்பு நோய்க்கு விலை மதிப்பு மிக்க மருந்துகளை சாப்பிடுகின்றனர். ஆனால் மலிவான விலையில் வாழைப் பழம் கிடைக்கிறது. பக்க விளைவு ஏதும் கிடையாது. இரத்தக் கொதிப்பு நோயைத் தடுக்கும் சக்தி கொண்ட வாழைப்பழம் இயற்கை நமக்கு அளித்துள்ள வரப்பிரசாதம். இவ்வாறு அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

## இந்தியப் பிரதமர் உண்ணாவிரதம்!

*)30-01-1999)*

காந்தி சமாதியில் இந்தியப் பிரதமர் உண்ணாவிரதம் இருக்க திட்டமிட்டுள்ளார். தான் சார்ந்துள்ள பாரதிய ஜனதாக் கட்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, வாஜ்பாய் நடத்தும் போராட்டம் இது என்று டெல்லி அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளர். பிரதமரின் உண்ணாவிரத முடிவை எதிர்க் கட்சிகள் கேலி செய்துள்ளன. வன்முறையைக் கட்டுப்படுத்தி மக்களைக் பாதுகாக்க வேண்டிய பிரதமர் உண்ணாவிரதம் இருப்பது கேலிக்கூத்து என்று



எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன. கட்சியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வாஜ்பாய் நடத்தும் இறுதிப் போராட்டம் இது என்று அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர். ஆட்சியில் இந்துத்துவ அமைப்புகள் தலையிடக்கூடாது என்று வாஜ்பாய் தனது கட்சியிடம் பல தடைவை கூறியும் பலன் இல்லை. ஆர்.எஸ்.எஸ். ஆதரவு பா.ஜ.க. தலைவர்கள் பிரதமருக்கு கட்டுப்படாமல் செயல்பட்டு வருகின்றனர்.

இது போன்ற செயல்களால் பிரதமர் மிகவும் கவலை அடைந்துள்ளார். கட்சியை எப்படியாவது தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிவு செய்துள்ளார். அதற்கு அவர் நடத்தும் போராட்டம்தான் இந்த உண்ணாவிரதம் என்று கூறப்படுகின்றது.

## பீகாரில் 22 பேர் படுகொலை இந்திய குடியரசுத் தலைவர் கண்டனம்!

பீகாரில் 22 பேர் படுகொலை தொடர்பாக குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கடுமையாகத் தண்டிக்கவேண்டும் என்று அதிபர் கண்டிப்புத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அதிபர் கே.ஆர் நாராயணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: ஒன்றும் அறியாத கிராம மக்களைக்கொன்று குவிப்பது கொடூரமான செயல். இது தொடர்ந்தால், சாதி அடிப்படையில் மோதல்களும், ரத்தம் சிந்துவதும் தொடர்ந்துவிடும். இரக்கமற்ற இதுபோன்ற 'கிரிமினல்' நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தச் சம்பவங்களுக்கு காவல் துறையினர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். சட்ட அமுலாக்க துறையினர் பழிக்குப் பழியாக மீண்டும் இதேபோல் சம்பவங்கள் நடக்காமல் நீதித் துறையினர் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்பாவி ஆண்கள், பெண்கள், குழந்தைகளைக் கொன்று குவித்தவர்களை, சட்டப்படி கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

## ☺ வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும் ☹

☺ மகரஜோதியன்று உயிரிழந்த 52 பேரும் ஒரு மாயைக்கு பலியானார்களா? இந்த சோகத்தால் 'மகரஜோதி' பற்றிய நீண்ட நாளைய சர்ச்சை மறுபடியும் எழுந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் இந்த 'மகர ஜோதி மாயையை' தகர்க்க வேண்டும் என்றும் நினைத்த சில பகுத்தறிவுவாதிகள் மலை உச்சியில் நூற்றுக் கணக்கான கோணிப்பைகளில் உள்ள கற்பூரம் எரிக்கப்படும் புகைப்படத்தை வெளியிட்டார்கள். இதுதான் பக்தர்கள் தரிசிக்கும் 'மகர ஜோதி' என்று பிரச்சாரம் செய்தார்கள். கற்பூரத்தைக் கொளுத்தும்படி பணிக்கப்பட்டதாகக் கூறப்படும் டி.டி.வி. மற்றும் வனத்துறை ஊழியர்கள் சிலரது பேட்டிகளும் வெளியாயின.

இதைப் பலர் கண்டுகொள்ளவில்லை. இருந்தாலும் அதன் பிறகு பொறுப்புள்ள பல்வேறு நபர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த ஜோதி மனிதர்களால் உருவாக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். ஆனால் வனத்துறை அதிகாரிகளின் உதவியுடன் ஜோதி எரிவதற்கு ஏற்பாடு செய்ததாகக் குற்றம் சாட்டப்படும் டி.டி.பி. இதை ஒப்புக்கொள்ளவில்லை. சபரி மலையின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிடும் பொறுப்பில் இருந்த முன்னாள் ஐ.ஜி.யும் தீவிர பக்தருமான என். கிருஷ்ணன் நாயர் ஜோதியை 'ஏற்றுவது மனிதன் செயல்' தான் என்று சமீபத்தில் ஒப்புக்கொண்டார். 'ஐந்து ஆண்டுகளாக ஜோதியை ஏற்றும் பணியில் நானும் ஈடுபட்டு வருகிறேன்' என்று டி.டி.பி. ஊழியர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

ஆனால் இதுவரை யாருமே ஜோதி 'ரகசியம்' பற்றி பகிரங்கமாக விவாதித்ததில்லை. 'பக்தர்கள் மனதைப் புண்படுத்த கட்சிகள் விரும்பவில்லை. இலட்சக்கணக்கான பக்தர்கள் மூலம் கிடைக்கும் பிரம்மாண்டமான வருவாயில் ஒரு சிறு பகுதியையும் இழக்க டி.டி.பி.யும் விரும்பவில்லை' என்று டி.டி.பி அதிகாரி ஒருவர் கூறினார். இதற்கு விலையாக 52 உயிர்கள் பலியானது பற்றி யாருக்குக் கவலை?

*– 27.01.99 இந்தியா டுடே*

❀ ❀ ❀

☺ மிக அருகில் உள்ள இலங்கையில் தங்கள் சகோதரத் தமிழர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதைப் பார்த்துக்கொண்டு தமிழ்நாட்டுத் தமிழர்கள் வாளாயிருக்க முடியாது.

அடக்குமுறைச் சட்டங்களும், பொய்ப் பிரச்சாரங்களும் சாம்பல் போல மூடி மறைந்திருந்தாலும் தமிழர்களின் உள்ளங்கள் கனல் போலத் தகித்துக்கொண்டிருக்கின்றன. நீறுபூத்த அந்த நெருப்பு பெருந்தீயாக மூண்டெழுவதற்கு முன்பாக செய்யவேண்டிய கடமைகளை இந்தியா செய்தாகவேண்டும்.

அது ஈழத் தமிழர்களுக்கும் நல்லது. இந்தியாவிற்கும் நல்லது.

*– பழ. நெடுமாறன் 27.01.99 தமிழன் எக்ஸ்பிரஸ் கட்டுரையில்*

❀ ❀ ❀

☺ இசங்களுக்கு முந்தைய காலகட்டத்தில் இந்தியாவிலேயே இசங்கள் உண்டு. அதாவது ஒன்பது சுவைகள். நவரசங்கள். அதன் பிறகு ஐரோப்பாவில் பல இசங்கள் தோன்றியது. பல காலாவதியாகிவிட்டன. அந்தந்த காலச் சூழல்களுக்கும், பிரச்சனைகளுக்கும் தக்கவாறு தோன்றுபவைதான் இசங்கள். அவை மாறும்போது இசங்களும் மறைந்து விடும். சோவியத் ரஷ்யாவின் வெற்றிக்குப் பின் முற்போக்கு என்று எல்லோரும் கொடி பிடித்தார்கள். இன்றைக்கு முற்போக்கு என்பது நகைப்புக்கிடமாகிவிட்டது. இது நம் நாட்டிலும் உண்டு. ஒரு காலத்தில் பால்ய விவாகம், பிறகு வரதட்சிணைக் கொடுமைகள், இப்போது முதிர் கன்னிகள். ஆனால் நிஜமான எழுத்தாளன் இந்தப் பிரச்சனைகளில் தன் எழுத்தை சிக்க விடுவதில்லை. அங்கு மூல விளக்கமான அறிமுக நூல்கள் உண்டு. அதைப்படித்தாலே மூல நூலைப்பற்றி ஒரு மாதத்திற்கு பேசலாம். இதை மொழிபெயர்த்து இதுதான் சிறந்த இலக்கியம் என்று இங்கே பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழில் சிறந்த இலக்கியம் இலலை என்று இவர்கள் சொல்வது பெரிய கேலிக் கூத்து.

*– சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் சா.கந்தசாமி அவர்கள் ஒரு பேட்டியில்*

❀ ❀ ❀

☺ பதவியிலிருக்கும் ஒரு தனி மனிதனுக்கு ஏற்படும் ஒரு நெருக்கடி ஒரு உலகப்போராகக் கூட உருமாறலாம். என்கிற நிலைமையையும், அன்பைப் போதிக்கின்ற மதங்களின் பெயரால் அழிவுகள் நேரலாம் என்ற அபாயத்தையும் நினைத்துப் பார்க்கையில் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்திலிருக்கும் உலகம் நாகரிக அளவுகோலில் முன்நோக்கி நடக்கிறதா? பின்நோக்கி நடக்கிறதா? என்ற எண்ணத் தடுமாற்றம் எழத்தான் செய்கிறது.

*– ஜனவரி 1999 கணையாழி இதழின் தலையங்கத்தில்*

❀ ❀ ❀

☺ சிலர் குளிக்கும்போது தாலியை கழற்றி வைச்சிடறாங்க. அது பெரிய விடயமில்லை. சினிமாவில் தாலியை வைத்துத்தான் கதையே ஓடுது. சனங்க இளிச்சவாயர்களாக இருக்கும் வரைக்கும் நாங்க முட்டாளாக்குவோம். சிந்திக்கத் தெரியாத தமிழ் மக்கள் இருக்கும் வரைக்கும் எங்களுக்கு கஷ்டமே கிடையாது.

*– நடிகர் ராதாரவி பேசியதாக பத்திரிகைகளில்*

❀ ❀ ❀


☺ மதுரையில் ஒரு லாரியில் எழுதப்பட்டிருந்த வாசகம்.....

"சாலையைப் பார்த்தால் சமர்த்து!
சேலையைப் பார்த்தால் விபத்து!!"

*– 31-01-1999 ராணி இதழில்*

# 4வது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 31 ★ 01 ★ 1964



உதிர்வு: 30 ★ 01 ★ 1995

## அமரர் செல்வராசா ஞானசேகரம்

(வத்திராயன் வடக்கு வேம்படிறோட் தாளையடி)

அன்புடனும், பண்புடனும் பாசத்துடனும்
வழி நடத்திய எங்கள் அன்பு அண்ணாவே
நீங்கள் இல்லா உலகம் என்றும் இருள்மயமானது

**உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்.**

என்றும் உங்கள் நினைவுடன்

**உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கும் பிரியமுள்ள**

**அன்புச் சகோதரன் குணசேகரம்**

*தகவல்: குணசேகரம் (சுவிஸ்)*




இந்தோனேசியா

# கிழக்குத் தீமோர் விடுதலைக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள்

(01.02.1999)

கிழக்குத் தீமோருக்கு முழு அளவிலான சுதந்திரம் வழங்கப்படவேண்டும் எனக்கூறி பலநூறு மக்கள் கிழக்குத் தீமோரின் தலைநகர் டிலியில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர். இந்தோனேசிய அரசு கடந்தவாரம் கிழக்குத்தீமோர் மக்கள் பிரிந்துபோவதைத்தான் விரும்புவார்களானால் தாம் அதுபற்றி யோசிக்கப்போவதாய் அறிவித்திருந்தது. இவ் அறிவித்தலைத் தொடர்ந்தே மேற்குறிப்பிட்ட ஊர்வலம் டிலியில் இடம்பெற்றுள்ளது. இதே வேளை கிழக்குத்தீமோரில் வசித்துவரும் இந்தோனேசிய ஆதரவாளர்கள் தாம் ஏமாற்றப்பட்டுவிட்டதாயும் தம்மைப் பாதுகாக்க ஆயுதங்கள் தேவைப்படுவதாயும் கூறியுள்ளனர்.

அதிகாரங்கள் மிக்க சுயாட்சியை கிழக்குத் தீமோர் மக்கள் நிராகரிப்பார்களானால் தாம் அத்தீவிற்கு முழுஅளவிலான சுதந்திரம் வழங்குவதுபற்றி தீர்மானிக்கப்போவதாக இந்தோனேசிய அரசு அறிவித்தது. பல வருடங்களாக இந்தோனேசிய படைகளுக்கும் கிழக்குத் தீமோர் போராளிகளுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றது. கிழக்குத் தீமோருக்கு நிரந்தர அமைதியைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலான பேச்சுக்கள் ஐ.நா.வின் தலைமையில் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. 1976-ம் ஆண்டுவரை போர்த்துக்கேய காலணி நாடாக கிழக்குத்தீமோர் இருந்துவந்தது. அவ்வருடம் போர்த்துக்கல் இப் பிராந்தியத்திலிருந்து விலகிக் கொண்டதையடுத்து இந்தோனேசியா கிழக்குத்தீமோரை ஆக்கிரமித்துக்கொண்டது. சுமார் 23 வருட காலமாக கிழக்குத் தீமோரின் விடுதலைபற்றி பேச்சுக்கள் எழுந்தபோதெல்லாம் அதனை கிழக்குத் தீமோர் தொடர்ந்தும் எதிர்த்துவந்தது. தற்போது இந்தோனேசியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின் புதிய மாறுதல்கள் தோன்றியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

திங்களன்று டிலியில் இடம்பெற்ற ஊர்வலத்தில் 'கிழக்குத் தீமோர் வாழ்க' என்றும் 'கிழக்குத் தீமோர் மக்கள் சுயாட்சியை நிச்சயமாக எதிர்ப்பார்கள்' என்றும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. அத்துடன் இந்தோனேசிய தலைநகர் ஜகர்த்தாவில் சிறைவைக்கப்பட்டுள்ள Xanana Gusmao' எனும் கிழக்குத் தீமோர் போராளிகள் தலைவர் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையும் ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டன. இதற்கிடையே சிறையில் இருக்கும் குஷ்மோவின் ஒலிப்பதிவு உரை ஒன்று போர்த்துக்கேய வானொலியில் ஒலிபரப்பாகியது. அதில் அவர் கிழக்குத் தீமோர் சுதந்திர போராட்ட நடவடிக்கைகளுக்கு மக்கள் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் மக்கள் ஒன்றுபட்டு தங்கள் எதிர்ப்பினை இந்தோனேசியாவிற்குத் தெரிவிக்கவேண்டும் என்றும் கோரியிருந்தார்.

இது இப்படியிருக்க கிழக்குத் தீமோரில் பணிபுரியும் இந்தோனேசிய அரச ஊழியர்களும், இந்தோனேசிய அரச ஆதரவாளர்களும் மீண்டும் கிழக்குத் தீமோரில் முழு அளவிலான சிவில் யுத்தம் வெடிக்கும் என்றும் தம்மைப் பாதுகாக்க ஆயுதங்களே அவசியம் என்றும், அவற்றைப் பெற்றுக் கொள்ள அடுத்தவாரம் தாம் ஜகர்த்தா செல்லவுள்ளதாயும் கூறினார்கள்.

லிபியா

# தடையைமீறி நைஜீரிய விமானம் லிபியா பறந்தது

(01.02.1999)

லிபியா மீது விதிக்கப்பட்டுள்ள விமானப்பறப்பு தடையையும் மீறி நைஜீரிய நாட்டின் விமானமொன்று உயர்மட்ட ஆபிரிக்க தூதுக்குழு ஒன்றுடன் லிபியாவிற்குப் பறந்தது என துனீசிய செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

நைஜீரியாவின் வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் புகாரிபாலா மற்றும் பிரதம பொலிஸ் அத்தியேட்சகர் போன்றோரும் இத் தூதுக்குழுவில் அடங்கியிருந்தனர். இக்குழு லிபிய வெளிவிவகார அமைச்சர் ஓமார் முஸ்தபாவுடன் பேச்சுக்களிலும் ஈடுபட்டது.

ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்பு கடந்தவருடம் மனிதாபிமான உதவி, மதவிவகாரம், மற்றும் ராஜாங்க ரீதியான குழுக்கள் போன்றவற்றுடன் செல்லும் விமானங்கள் லிபியாவிற்குள் தடையின்றி நுழையலாம் என தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. இதனடிப்படையிலேயே இவ் விமானம் லிபியா சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1988-ம் ஆண்டு Panam பயணிகள் விமானம் ஸ்கொட்லாந்திற்குமேல் பறந்துகொண்டிருந்த சமயம் குண்டுவெடிப்பொன்றின் காரணமாக தகர்க்கப்பட்டது. இக்குண்டுவெடிப்பில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் இருவர் குற்றம் சுமத்தப்பட்டனர். இவர்கள் லிபியாவில் வசித்துவந்த காரணத்தினால் இவர்களை பிரித்தானியாவிடமோ அல்லது அமெரிக்காவிடமோ விசாரணைக்காக ஒப்படைக்கவேண்டும் என கோரப்பட்டது. இதனை லிபியா மறுத்ததன் காரணமாக 1992-ம் ஆண்டுமுதல் இந் நாட்டின்மேல் விமானப்பயணத் தடை கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அண்மைக்காலங்களில் பல ஆபிரிக்கத் தலைவர்கள் இத்தடையையும் மீறி லிபியாவிற்கு விமானமூலம் சென்று வந்தனர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

மத்திய கிழக்கு

# எதிரி விமானங்களை சுட்டுவீழ்த்தும் ஈராக்கியர்களுக்கு சன்மானம் வழங்க சதாம் உத்தரவு

(01.02.1999)

மேற்குநாட்டு போர் விமானங்கள் எதனையும் சுட்டுவீழ்த்தும் ஈராக்கிய விமான எதிர்ப்புப் படையினருக்கு பெரும் சன்மானங்களை வழங்கப் போவதாக அந்நாட்டின் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார்.

ஈராக்கிய ஜனாதிபதி அலுவலகம் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தனது நாட்டின் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் மேற்கு நாட்டின் எந்தவொரு யுத்த விமானத்தையும் சுட்டுவீழ்த்தும் தனது படையினருக்கு 25 மில்லியன் டினார்களை சன்மானமாக வழங்குவதாயும் அதேபோல் எந்தஒரு ஏவுகணையையோ சுட்டவீழ்த்துவோருக்கு 10 மில்லியன் டினார்களை பரிசாகவும் வழங்கப்போவதாக அறிவித்துள்ளது. அதேவேளை ஈராக்கிய பிராந்தியத்துக்குள் விழும் மேற்கு நாட்டு விமானிகள் யாரையாவது கைது செய்தால் 5 மில்லியன் டீனார்களை வழங்கப்போவதாகவும் ஈராக் அறிவித்துள்ளது. இதேவேளை அமெரிக்க, பிரித்தானிய விமானங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் ஈராக்கின் வடபிராந்திய நகரான மொசூலுக்கு சுற்றுப்பகுதியில் ஈராக்கின் ஆறு விமான எதிர்ப்பு வலயங்கள் எனக் கருதப்படும் பகுதிகள் மேல் தாக்குதல்களை நடத்தின.

1991-ம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின் பின் ஈராக்கின் வடபகுதியிலும் தென்பகுதியிலும் ஈராக்கிய யுத்த விமானங்கள் பறப்பதை மேற்கு நாடுகள் தடைசெய்து, அப்பகுதியில் கண்காணிப்பு வலையங்களை ஏற்படுத்தின. இதன் மூலம் தென்பகுதியில் சியாத் மதப் பிரிவுமக்களையும் வடக்கே குர்திஷ் இன மக்களையும் தான் பாதுகாப்பதாயும் இவை கூறின. ஆனால் அண்மையில் பிரித்தானிய, அமெரிக்க விமானங்கள் ஈராக்கின் மேல் மேற்கொண்ட தாக்குதலையடுத்து ஈராக் எந்தவொரு மேற்கு நாட்டு தடைகளையும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லையென்றும், அத்துமீறி கண்காணிக்க வரும் விமானங்களை தமது படைகள் சுட்டுவீழ்த்தும் என்றும் அறிவித்தது.


இதற்கிடையே ஈராக்கிற்கும் ஐ.நா.விற்கும் இடையே தற்போது ஏற்பட்டுள்ள இழுபறி நிலையை முடிவுக்குக்கொண்டு வர ஐ.நாவின் பாதுகாப்புச் சபை 3 அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைப்பது குறித்து இணக்கத்துக்கு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞானம்

# மனிதக்குரங்கிலிருந்தே எயிட்ஸ் வைரசு உண்டாகியது ஆய்வாளர்கள் முடிவு

(01.02.1999)

இன்று உலகை ஆக்கிரமித்திருக்கும் எயிட்ஸ் நோயின் மூலம் எங்கிருந்து வந்துள்ளது என்பதனை சர்வதேச ஆய்வாளர்குழு ஒன்று கண்டுபிடித்துள்ளது. மிக நீண்ட காலமாக கண்டுபிடிக்கப்பாடமல் இருந்து காலத்திற்குக் காலம் ஒவ்வொரு காரணங்கள் கூறப்பட்டு வந்த போதிலும் இவ்வாரம் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பானது நிச்சயமானதாக இருக்கலாம் என கருதப்படுகிறது.




அலபாமா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் குழு அண்மையில் தமது சேகரிப்பில் இருந்த 26 வயதுடைய மனிதக்குரங்கொன்றின் இரத்தம் மற்றும் உயிர்க்கலங்களை பரிசோதித்தபோதே இக் கண்டுபிடிப்பு ஏற்பட்டது.

மரலீன் என அழைக்கப்பட்ட இம் மனிதக்குரங்கு 1985-ம் ஆண்டு இரட்டைக் குழந்தைகளை பிரசவித்தபோது மரணித்தது. அதன் கலங்களையும் இரத்த மாதிரிகளையும் ஆய்வாளர்கள் அன்று சேகரித்து வைத்திருந்தனர். அவற்றினை ஆராய முற்பட்டபோது இந்த அதிசயமான உண்மை தோன்றியதாக அலபாமா பல்கலைக் கழகத்தின் மருத்துவ நிபுணரான டாக்டர் பியாட்ரீஸ் ஹான் தெரிவித்தார்.

தங்களது ஆய்வின்படி சிம்பன்சி என அழைக்கப்படும் மனிதக்குரங்குகள் இந்த எயிட்ஸ் வைரசினைக் கொண்டிருந்தன என்றும் ஆனால் அவைகளுக்கு அதனால் எந்த பாதிப்புகளும் ஏற்படுவதில்லை என்று அறியப்பட்டது. இந்நூற்றாண்டில் ஆரம்பத்தில் மனிதன், இம்மனிதக் குரங்குகளை வேட்டையாடி உண்டபோது இந்த வைரசுக்கள் மனிதனைச் சென்றடைந்துள்ளன. ஆனால் குரங்குகளைப்போலன்றி மனிதனின் உடலில் அவைகள் உறங்கு நிலையில் இருக்கவில்லை என மேலும் அவர் கூறினார். கடந்த வருடம் ஆய்வாளர்கள் தற்போது கொங்கோ ஜனநாயக குடியரசு என அழைக்கப்படும் பெல்ஜியன் கொங்கோவில் 1959-ம் ஆண்டு ஒரு பூர்வீக குடியினன் ஒருவன் எயிட்ஸ் நோயினாலேயே இறந்துள்ளான் என்பதைக் கண்டுபிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## லண்டனில்

# ஆச்சீஸ்



[1] புதிய மூன்று CD க்கள் 14.99 மட்டுமே.
[2] ஏனைய மூன்று CDக்கள் 9.99 மட்டுமே.
[3] AUDIOக்கள் 50 p இல் இருந்து.
[4] CDக்கள் 99 p இல் இருந்து.
[5] புதிய பழைய ஒறிஜினல் PYRAMID அல்லது AINGHARAN வீடியோக்கள் 4.99 மட்டுமே.
[6] வீடியோ CD க்களும் 4.99 இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
[7] இலங்கை இந்திய பத்திரிகைகள் புத்தகங்கள் அனைத்துக்கும் 'ஆச்சீஸ்'.

இலவசம் 30 பவுண்களுக்கு மேல் Video CD பகுதியில் கொள்வனவு செய்பவர்களுக்கு PYRAMID இல் 38 புதிய பாடல்கள் அடங்கிய 'இசைப் புதையல்' பாடல் கசட் இலவசம்

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

## Archie'S

205, Edgware Road, Colindale-Nw 9.
Tel: 0181 205 36 52 / Fax: 0181 205 16 18

---



தமிழ்ப்புத்தாண்டை முன்னிட்டு **தமிழர் புனர்வாழ்வுக்கழகம்**
**இரண்டாவது தடவையாக சுவிஸ் தழுவிய ரீதியில் நடாத்தும்**

# 'கானக்குயில் 99'

**மாபெரும் சிறந்த பாடகர்களுக்கான தேர்வும் சிறந்த அறிவிப்பாளர் தேர்வும்**

**காலம்: 04.04.99 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணி**
**இடம்: Albisgüetli மண்டபம் 8045 Zurich.**

சுவிற்சர்லாந்திலே இரண்டாவது தடவையாக பார்வையாளர்களின் தேர்வின் அடிப்படையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடாத்தும் 'கானக்குயில் 99' சிறந்த பாடகர்களுக்கான தேர்வும் 'சிறந்த அறிவிப்பாளர் 99' தேர்வும் ஒரேமேடையில் நடைபெறவுள்ளது. 16 வயதிற்குட்பட்டோர் ஆண் பெண் (இளம் 'கானக்குயில் 99') ஒரு பிரிவாகவும் 16 வயதிற்கு மேற்பட்டோர் ஆண் பெண் ஒரு பிரிவாகவும் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குபற்றவிரும்பும் பாடகர்களும் பாடகிகளும் அறிவிப்பாளர்களும் கீழ் உள்ள விண்ணபப்படிவத்தினை பூர்த்திசெய்து எதிர் வரும் 28.02.99 ற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பாட்டுப்போட்டிகளுக்கான விதிமுறைகள்:**

1. தமிழீழப்பாடல் ஒன்றை முழுமையாகப்பாடவேண்டும்.
2. ஒரு போட்டியாளர் ஒரு பாடலை மாத்திரமே பாடவேண்டும்.
3. ஒரு போட்டியாளர் அனுமதிக்கட்டணமாக 50SFr செலுத்தல் வேண்டும்.
4. பார்வையாளர்களே போட்டியின் முடிவுகளைத்தெரிவு செய்வர்.

**அறிவிப்பாளர் போட்டிகளுக்கான விதிமுறைகள்:**

1. நீங்கள் விரும்பிய ஓர் அறிவிப்பை 2 நிமிடத்திற்கு மேற்படாமல் அறிவிக்க வேண்டும்.
2. நாங்கள் மேடையில் தரும் ஓர் தலைப்பை அடிப்படையாகக்கொண்டு 2 நிமிடத்திற்கு மேற்படாமல் அறிவிக்கவேண்டும்.
3. ஒரு போட்டியாளர் அனுமதிக்கட்டணமாக 50SFr செலுத்தல் வேண்டும்.
4. அறிவிப்பாளர் போட்டியில் பங்குபற்றும் ஒருவர் பாட்டுப்போட்டியிலும் பங்குபற்றலாம்.
5. பார்வையாளர்களே போட்டியின் முடிவுகளைத் தெரிவுசெய்வர்.

பாட்டுப்போட்டியில் வெற்றிபெறும் ஒவ்வொரு பிரிவிலும் ஒருவருக்கு (16 வயதுக்குட்பட்டோர் 16 வயதுக்குமேற்பட்டோர்) 'கானக்குயில் 99' என்ற பட்டமும் 500 சுவிஸ் பிராங் ரொக்கப்பணமும் மற்றும் நினைவுப் பரிசிலும் வழங்கி கௌரவிக்கப்படும். அறிவிப்பாளர் போட்டியில் வெற்றி பெறும் ஒருவருக்கு சுவிற்சர்லாந்தின் 'சிறந்த அறிவிப்பாளர் 99' என்ற பட்டமும் 500 சுவிஸ் பிராங் ரொக்கப் பணமும் மற்றும் நினைவுப்பரிசிலும் வழங்கி கௌரவிக்கப்படும்.

**இப் போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள்**
**அனுப்ப வேண்டிய முகவரி:**
**SELLIAH RASAN**
**Böswisli Weg 10, 8180 Bülach (zh).**

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**01/3622755 - 041/ 2608398 - 01/8601205**

### விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர்:................................................................

முகவரி:................................................................

(ஆங்கிலத்தில்)................................................................

பிநாள்:................................................................

தொலைபேசி(தனி):............................ (தொழிலகம்):............................

தெரிவுசெய்த பாடலும் அப்பாடல் இடம்பெற்ற இசைத்தட்டின் (CD) பெயரும்:

................................................................

அறிவிப்பாளர் ☐ 16 வயதுக்குட்பட்டோர் ☐

பாடகர் ☐ 16 வயதுக்குமேற்பட்டோர் ☐

............................ ............................

நாள் கையொப்பம்

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# தார்மீகப் பொறுப்பை ஏற்க வேண்டும்

பிரித்தானியாவிடமிருந்து தான் பெற்ற சுதந்திரத்தின் 51வது வருடத்தில் சிறீலங்கா அரசு இவ்வாரம் காலடியெடுத்து வைக்கின்றது. பிரித்தானிய அரசு சிறீலங்காவிற்கு ஆயுத விற்பனையை அனுமதிக்கக் கூடாது என ஆயுத வியாபாரங்களுக்கு எதிரான சமூக அமைப்பொன்று கோரிக்கை விடுத்துள்ள இந்த நிலையில், பாதுகாப்பு ஏற்பாடுகளோடு மீண்டுமொரு சுதந்திரதினத்தை கொண்டாட முனைப்புக் கொண்டுள்ளது. சுதந்திரம் அடைந்ததன் பின்னர் 75 வீதமான காலப்பகுதியை அவசரகால சட்ட நிலை பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் கழித்துவரும் சிங்கள தேசம், இக் காலப்பகுதியில் தமிழர் தாயகத்தின் மீது புரிந்த அடக்கு முறைகளையும், அடாவடித்தனங்களையும் யாரும் மறுத்துரைக்க முடியாது. அவ்வாறு மறுத்துரைக்க ஒரு குரல் எழுமானால் அது நிச்சயம் பௌத்த பேரினவாதத்தின் ஆதரவுத்தரப்பில் இருந்தே வெளிப்படும்.

கடந்தவருடம் தனது சுதந்திரப் பொன்விழாவினை சிறீலங்கா கொண்டாடிய பொழுது, அந்நாளை ஈழத்தமிழர்கள் என்ற எல்லையைக் கடந்து சர்வதேச தமிழினமே கறுத்த நாளாக அனுஷ்டித்தமை உலகத்தில் பதிவாகியுள்ள ஒரு வரலாற்று நிகழ்வு ஆகும்.

இலங்கைத்தீவில் இரு தேசிய இனங்கள் என்ற யதார்த்தத்தை புறம்தள்ளிவிட்டு அன்றைய தொழிற்கட்சி அரசு சிங்கள தலைமைத்துவத்திடம் முழுமையாக நிர்வாகத்தைக் கொடுத்துச்சென்ற வரலாற்றுத்தவறு இன்று தமிழினத்தின் குரல்வளையை நசித்துக்கொண்டிருக்கிறது. எனவே, பிரித்தானிய அரசு வரலாற்றில் தான்விட்ட தவறுக்கு தார்மீகப் பொறுப்பை ஏற்கவேண்டும். வெறும் உதட்டளவில் சமாதானம் பேசும் சக்தியாகவோ அன்றி விற்கப்படும் ஆயுதங்கள் சமாதான நோக்கானவை என்றோ நியாயப்படுத்தாது சிங்களதேசம் கட்டவிழ்த்துவிட்ட கொடூர யுத்தத்தின் தன்மையினை புரிந்துகொள்ள வேண்டும்.

பிரித்தானியா நீதியை தட்டிக்கேட்கும் ஒரு சக்தியாக இருக்கவேண்டும் என்பதே ஜனநாயகத்தின், பண்பின் பேரால் இவ்வேளை எழும் குரலாகும்.

# சிறீலங்கா சுதந்திரதினம்
## கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் கூவர் கலங்களில் கடல்ரோந்து

(01.02.1999)

சிறீலங்காவின் 51வது சுதந்திரதினத்தை முன்னிட்டு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை முப்படையினரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பின் மேற்கு கடற்பரப்பிலும் கடற்படையினர் விசெட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. புதிதாக பிரித்தானியாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 'கூவர்' கடற்கலங்களில் கடற்படையினர் கொழும்பு கோட்டை பகுதியிலிருந்து கல்கிசை கடற்பகுதி வரை இவ் ரோந்து இடம்பெற்று வருகின்றது.

மேற்கு கடற்பகுதிக்கு அப்பால் விடுதலைப் புலிகள் கொழும்புக்குள் ஊடுருவி தாக்குதல் நடாத்தலாம் என்ற அச்சத்தினாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கடற்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நகரில் புலனாய்வுத்துறை அதிகாரிகள் சாதாரண உடையில் நடமாடி வருவதுடன், தமிழ்மக்கள் மீது விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதனைவிட விசேட இராணுவ சோதனை சாவடிகள் நகரின் பலபகுதிகளிலும் அமைத்து சோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் கண்டி தலதா மாளிகை மீது குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சடங்கும் இராஜதந்திர தேவைகளும்

பார்வை

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான 'தடையை' மேலும் ஈராண்டுகளுக்கு நீடிக்கும் இந்திய மத்திய அரசின் முடிவை டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி மகஜன் தலைமையிலான நீதிமன்றம் (tribunal) ஏற்றுக்கொண்டுவிட்டதாக The Hindu செய்தி வெளியிட்டுள்ளது.

*1992–ம் ஆண்டு முதல் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வந்துபோகும் சடங்கான தடை உத்தரவும் – நீடிப்பும் 1998–ல் மீள வந்தபோது புலிகள் அதனைச் சட்ட ரீதியாகச் சந்தித்தனர்.* வரைமுறை செய்யப்பட்ட கோட்பாடுகள்-விதிகள் என்பனவற்றுடன் எப்போதும் பாதுகாப்பான தரப்பில் விளையாட விரும்பும் இந்திய நிர்வாக இயந்திரமும், தமிழீழ விடுதலைப்போரின் மீது தொடர்ச்சியாக காழ்ப்புணர்வை வெளிக்காட்டிவரும் தரப்பினரும் மதிப்பிற்குரிய இந்திய அரசமைப்பு சட்டத்தின் 'சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை (1967)' கைகளில் எடுத்து இரு வருடத்திற்கு ஒருமுறை செய்யும் சடங்காக இதனை மாற்றிவிட்டனர் போன்று தெரிகிறது.

*தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மீது பிழையான – தவறான தகவல்கள் அடிப்படையில் விதிக்கப்பட்ட தடையை 1998–ம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதிபதி மகஜன் முன் சமர்ப்பித்த மனுவில் விலக்குமாறு கோரியிருந்தனர்.*

தமிழீழம் என்ற புலிகளின் அரசியல் இலட்சியத்தின் பௌதீக எல்லைகளை விளக்கி நேர்மையான கோட்பாட்டு விண்ணப்பம் ஒன்றை புலிகள் சமர்ப்பித்திருந்தனர்.

*புலிகளின் இச்சட்டரீதியான நடவடிக்கை தமிழீழ தேசத்தின் ஒரு சர்வதேச இராஜதந்திர–அரசியல் நடவடிக்கையாகும்.* வரைவு செய்யப்பட்ட தேசிய சட்டங்களுக்கு தாம் கொடுக்கும் உயரிய கௌரவத்தை இந்திய அமெரிக்க நீதிமன்றங்களில் தாம் சமர்ப்பித்த மனுக்கள் மூலம் புலிகள் வெளிப்படுத்தியிருந்தனர்.

*இதன் மூலம் அரசியல் முனையில் இந்தியா–அமெரிக்க அரசுகள் தமது நடவடிக்கைகளை நியாயப்படுத்த வேண்டிய அல்லது மீளாய்வு செய்ய வேண்டிய நிலைக்கு அதிகாரவர்க்கத்தின் நிர்வாகயந்திரத்தினை புலிகள் கேட்டுக்கொண்டனர்.* உத்தியோகபூர்வ பதிவுகளில் தமது நியாயபூர்வமான-சட்டபூர்வமான பாத்திரத்தைப் புலிகள் பதியவைத்தனர்.

தற்போது இந்திய தடைச் சட்டம் புலிகளின் விண்ணப்பத்தை சட்டநுட்பங்களைக் காட்டி நிராகரித்திருப்பினும் புலிகளின் அரசியல் இராஜதந்திர நடவடிக்கையின் முக்கியத்துவம் பதிவுபெற்றுவிட்டது.

கிழக்கு தீமோர் மக்களின் பிரிந்து போவதற்கான உரிமையை இந்தோனேசியா அங்கீகரித்துவிட்ட அதே காலகட்டத்தில் இந்தியா தன் 'ஆளுமை' புலப்பரப்பில் உள்ள அயல் நாடொன்றின் நசுக்கப்பட்ட மக்களின் அரசியல் தலைவிதியோடு சம்பந்தப்பட்ட விடயமொன்றில் சடங்கு பூர்வமான நிலைப்பாடொன்றை எடுத்திருப்பின் அது சர்வதேச மாற்றங்களை கணிக்காமையின் குறைபாடு என விமர்சிக்கப்படலாம்.

*தமது கொல்லைப்புறத்தில் – கொசவாவில்–சமாதானத்தை வலிந்து அமுல்படுத்த ஐரோப்பிய நாடுகள் எடுத்த முடிவானது புதிய சர்வதேச சூழ்நிலைகளை எடுத்துக்காட்டுகின்றது.*


கொஸாவா மக்களின் விடுதலைக்காக போராடும் ஓகஅன் 'சட்டரீதியான' பாத்திரத்தை ஐரோப்பா KNL முன்வந்துள்ளமை விடுதலை இயக்கங்களின் பாத்திரங்கள் வரலாற்று ஓட்டத்தில் இடம்பெறும் சாதகமான அரசியல் அம்சம் என்பதை வெளிக்காட்டுகிறது. யூகோசிலாவியா, கொஸாவா விடுதலை இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் அதனுடன் போர்நிறுத்தம் செய்யமுடியாது எனக் கூறியபோது பிரித்தானிய வெளிவிவகாரஅமைச்சர் 'கொஸாவாவுக்குச் சென்று தமது ஐரோப்பிய நாடுகளின் உடனடி யுத்த நிறுத்தம்-இல்லாதுவிடின் நேட்டோ படைப்பலத்தைப் பிரயோகித்து தாக்குதல் என்ற வேண்டுகோளை முன்வைத்துள்ளனர். *இது யூகோசிலாவியாவுக்கு இணையாக கொஸாவாவுக்கு வழங்கப்பட்ட வேண்டுகோளாக இருப்பினும் சட்டபூர்வமான–வரைவுபெற்ற விதிகளில் இருந்து விலகி பொஸ்னியா – சேர்பியா விவகாரத்தில் அமெரிக்கா எடுத்த நிலைப்பாட்டைப் பின்பற்றி – உள்வாங்கி ஐரோப்பா தனது இராஜதந்திர வழிமுறைகளை மேற்கொள்கிறது.*

இந்தியா இதுபோன்ற - மாறும் கோட்பாடுகளை பின்பற்ற வேண்டுமாயின் தனது நேர்மையான நடுநிலையான போக்கை நிலைநிறுத்தவேண்டிய அவசிய காலகட்டத்திற்குள் நிற்கிறது.

அண்மையில் இந்திய பிரதமர் வாஜ்பாய் தன் நிர்வாக இயந்திரம் மீது கடுமையான விமர்சனம் ஒன்றை முன்வைத்தார். மாற்றத்தை ஏற்படுத்த அரசு நிர்வாக இயந்திரம் காட்டும் தயக்கத்தை அவர் விமர்சித்திருந்தார்.

*அவரது விரக்தியின் பிரதிபலிப்புக்கள் எமக்கும் உண்டு.*

*- ராஜா*



நன்றி: 'தினக்குரல்'

# சிங்களம் இழக்கும் தலைமைத்துவம்

## கொழும்பிலிருந்து ஊரோடி

சிறீலங்காவின் இரு பிரதான தேசியக் கட்சிகளுக்கிடையேயும் அதி உச்சநிலையை அடைந்துவிட்ட அரசியல் முரண்பாடு 20-ம் நூற்றாண்டின் இறுதிக் காலமான 99-ம் ஆண்டில் சிறீலங்காவில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் கூறுகிறார்கள். வடமேல் மாகாணசபைத் தேர்தல் வன்முறைகளை மையப்படுத்தியே இராஜதந்திரிகள் இவ்வாறு கூறியிருப், பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே. கட்சியின் முக்கியஸ்தர்களினது பெண்பிள்ளைகள், மனைவிமார், பொ.ஐ.மு. அரசினது ஆதரவாளர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும், ஐ.தேகட்சி இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகவும் வெளிநாட்டு தூதரகங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை இது தொடர்பான மேலதிக தகவல்களை தாம் மேலதிகமாக சேகரிப்பதாகவும், ஆனால் இவை இரகசியமாகவே மேற்கொள்ளப்படும் எனவும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை தேர்தல் வன்முறைகள் மிகவும் கீழ்த்தரமானவையென்றும் அரசியல் நெறிமுறைகளுக்கு முரணானவை என்றும் இராஜதந்திரிகள் கண்டித்திருக்கிறார்கள். என்ன விலை கொடுத்தாயினும் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக பொ.ஐ.மு. அரசு வன்முறையில் சரண் அடைந்திருப்பதாக தேர்தல் கண்காணிப்புக் குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது. இவற்றை உற்று நோக்கும்போது பொ.ஐ.மு. அரசின் அடாவடித்தனங்கள் கண்கூடாகத் தெரிகின்றன. இப்போது 'பயங்கரவாதிகள்' யார் என்பது அனைவருக்கும் புலனாகியுள்ளது. மறுபுறமாக ஐ.தே. கட்சி; அரசியல் புனிதங்களை பின்பற்றும் கட்சி என்பது அர்த்தம் அல்ல. 1978ல் இருந்து 1994 வரை சிறீலங்கா அரசில் இருந்து கொண்டு செய்த பயங்கரவாதம் எல்லோர்க்கும் தெரிந்தவைதான். அவர்கள் முன்பு செய்த அட்டூழியங்களிற்கு தற்போது அனுபவிக்கிறார்கள் என்றால் அது சாலப்பொருந்தும்.

**இனப்பிரச்சினைத் தீர்விற்கு வெளிநாட்டு மத்தியஸ்த்தம் தேவையில்லையெனக் கூறிய அரசிற்கு, தற்போது அடுத்த தேர்தல்களுக்கு சர்வதேச மத்தியஸ்த்தம் தேவை என்பதை சிங்கள மக்கள் உணர்த்தியுள்ளனர்.**

இங்கு விவாதத்திற்குரிய விடயம் என்னவென்றால் சிங்கள மக்களின் நிலைப்பாடு பற்றியதுதான்! காலத்திற்குக் காலம் ஆட்சிசெய்யும் இந்த இரு பிரதான தேசியக்கட்சிகளும் தமிழ் மக்களினது வாழ்வியல் உரிமை தொடர்பாக முன்வைத்த நியாயங்களும் இது தொடர்பாக தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாத வன்முறைகளும் எத்தனை, எத்தனை. இன்று தமிழ் சமுதாயத்தின் கட்டமைப்பு சீர்குலைந்து இழப்பதற்கு இனி எதுவும் இல்லை என்ற நிலையில் தமிழ் மக்கள் வாழும் இக்காலகட்டத்தில்; சிங்கள மக்கள் வடமேல் மாகாண சபைத் தேர்தல் வன்முறைகள் மூலம் உணரப்போவது என்ன?

**புத்தளத்தில் ஒருபகுதி சிங்கள மக்கள் 'இரு கட்சிகளினதும் அநியாயம் போதும் பிரபாகரன் வாழ்க' 'பிரபாகரன் தேசியத்தலைவன்' என கோஷமிட்டதாக செய்திகள் வருகின்றன.**

புத்தளத்தில் ஒருபகுதி சிங்கள மக்கள் 'இரு கட்சிகளினதும் அநியாயம் போதும் பிரபாகரன் வாழ்க' 'பிரபாகரன் தேசியத் தலைவன்' என கோஷமிட்டதாக செய்திகள் வருகின்றன. அதேவேளை 'சிங்கள மக்களுக்கு சரியான தேசியத் தலைமைத்துவம் இல்லை' என இடதுசாரிக் கட்சிகள் தெரிவித்துள்ளன. இவை வரவேற்கத்தக்க கருத்துக்கள்தான். ஆனால் உடனடி ஆவேசத்தினால் சொல்லப்பட்ட கருத்தாக இல்லாமல் உண்மையான விசுவாசத்தோடு தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை நியாயப்படுத்தி உணரப்படுமேயானால் சிங்கள மக்கள் விழித்துவிட்டார்கள்; எனவும் இந்தியாவிற்கு அருகேயுள்ள தீவில் இரு தேசங்களைக்கொண்ட இரு இனங்கள் மறுமலர்ச்சியடையப் போகின்றன எனவும் சர்வதேச சமூகம் அறிந்து கொள்ளும்.

தற்போது வெளிநாட்டு இராஜதந்திரிகளின் தேர்தல் தொடர்பான கருத்து வெளிப்பாடுகள் சிங்கள மக்களின் மன உணர்வுகளில் இருந்து வெளிவந்தவைதான். கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிறீலங்கா அரச படைகளால் தமிழ் மக்கள் எப்படி எப்படியெல்லாம் சித்திரவதை செய்யப்பட்டிருப்பார்கள் என்பதை வெளிநாட்டு இராஜதந்திரிகள் மேலும் ஒருபடி உணர்ந்திருக்கவேண்டும். மறுபுறமாக ஐ.தே.கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. வடமேல் மாகாண சபைத் தேர்தல் வன்முறைகளை ரணில்விக்ரமசிங்க சரியாக எதிர்கொள்ளவில்லை என கட்சி ஆதரவாளர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அப்படியானால் பொ.ஐ.மு. அரசின் தேர்தல் வன்முன்றகளிற்கு எதிராக கடுமையான வன்முறைகளை ஐ.தேகட்சி செய்யவில்லை; அடுத்து தேர்தல்களிலாவது கடுமையான வன்முறைகளில் ஈடுபடவேண்டும் என்பதுதான் ரணில் விக்கிரமசிங்க மீதான கட்சி ஆதரவாளர்களின் குற்றச்சாட்டோ? எது எப்படியோ 'சர்வதேச பார்வை' என்பது சிறீலங்கா அரசு மீதான தடையை உறுதிப்படுத்தப்போகிறது.

இனப்பிரச்சினைத் தீர்விற்கு வெளிநாட்டு மத்தியஸ்த்தம் தேவையில்லையெனக் கூறிய அரசிற்கு, தற்போது அடுத்த தேர்தல்களுக்கு சர்வதேச மத்தியஸ்த்தம் தேவை என்பதை சிங்கள மக்கள் உணர்த்தியுள்ளனர். இதன் வெளிப்பாடுதான் என்ன?


## பாரீஸ் தமிழர் கல்வி நிலையம்
**CENTRE PARISIEN D'EDUCATION POUR LES TAMOULS**

பிரான்சில் 13 வது வருட கல்விச் சேவையின் தொடர்ச்சியில்

புதிதாக பிரான்சுக்கு வந்து நிறைவாக பிரெஞ்சு மொழியை கற்க விரும்புகிறீர்களா?
ஏற்கனவே பல பாடசாலைகளில் கற்றும் பிரெஞ்சில் பேசத் தயக்கமாக உள்ளீர்களா?
ஏற்கனவே பிரெஞ்சு பாடசாலைகளில் கற்றும் பிரெஞ்சு இலக்கணத்தில் தெளிவற்று இருக்கிறீர்களா?
உங்கள் அனைவரின் தேவைக்கேற்ப உச்சரிப்பு, உரையாடல், இலக்கண வகுப்பு ஆரம்பமாகின்றது

புதிதாக பிரெஞ்சுமொழி கற்பவர்களுக்கான
**புதிய பிரெஞ்சு வகுப்பு**
**காலம் : 06.02.99**
**நேரம்: மாலை 2.00 மணி**

ஆசிரியர் க ஜன்

பிரெஞ்சு உயர்தர வகுப்புகள்
1.00, 2.30, 4.00, 5.30,
ஆகிய நேரங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

அனைத்து கல்வித் தேவைகட்கும் சிறுவர்களுக்கான தமிழ், பரதநாட்டியம், ஆங்கிலம், சங்கீத வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

நேரடி தொடர்புகளுக்கு (1 மணி முதல் 7 மணி வரை)

165 rue de Charonne, 75011 Paris. (M° : Alexandre Dumas ou Charonne)
21 Rue Voltaire 75011 Paris M° : Charonne
27 Allée Gabriel Péri M° : Fort d'Aubervilliers


## மரண அறிவித்தல்

தாய் மடியில்: 13 – 02 – 1998



இறைவன் அடியில்: 25 – 01 – 1999

**செல்வன் புண்ணியமூர்த்தி புவிலவன்**

நேற்று மண்ணில் தவழ்ந்த எம் செல்வன் புவிலவன் இன்று எம்மையும், இம் மண்ணையும் விட்டுப் பிரிந்துவிட்டான்.
இந்த அறிவித்தலை உள்ளக் குமுறலுடன் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
எங்கள் செல்வனின் பூதவுடல் கிளாறன்ஸ் சேமக்காலையில் இறுதிக்கிரியைக்காக வைக்கப்பட்டுள்ளது.

தகவல்:
வி. புண்ணியமூர்த்தி (சந்திரன்)
(முல்லைப்பிலவு, காரைநகர்)

தொலைபேசி: 021/963 52 49
076/384 52 49
079/426 09 89

Belmont -13
1820 Montreux
Switzerland

# ‘தமிழால் முடியும்’ என்பதை செயல்வடிவில் காட்ட வேண்டும்’

**- மணவை முஸ்தபா -**

**‘யுனெஸ்கோ கூரியர்’ தமிழ்ப் பதிப்பின் ஆசிரியர் திரு. மணவை முஸ்தபா அவர்கள் ஈழமுரசுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டி**

**கே: தங்களின் பாரிஸ் வருகையின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

**பதல்:** ஐக்கிய நாடுகளின் பேரங்கமான யுனெஸ்கோ (Unésco) (ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம்) ‘யுனெஸ்கோ கூரியர்’ என்ற பெயரில் தமிழ் உட்பட முப்பது மொழிகளில் மாத இதழொன்றை வெளியிட்டு வருகிறது. நான், தமிழ்ப்பதிப்புக் ‘கூரியரி’ன் ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் கடந்த 32 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறேன். அவ்வப்போது முப்பது மொழியாசிரியர்களும் பாரிசில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் கூடி, இதழ் பிரச்சினைகளையும் அடுத்தடுத்து வெளியிடுவதற்கான தலைப்புகளையும் பற்றி ஆலோசித்து முடிவு செய்வோம். அத்தகையதொரு ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவே இப்போது பாரிஸ் வந்துள்ளேன். இதற்கு முன்பும் பல முறை வந்துள்ளேன்.

**கே: ‘கூரியர்’ என்ற சொல் ஆங்கிலமா? தமிழா?**

**பதில்:** ‘கூரியர்’ (Courier) என்ற சொல் ஃபிரெஞ்சு மொழிச் சொல் என்று கூறப்படுகிறது. அதற்குச் ‘செய்தியாளன்’ (Messenger) எனப் பொருள் கூறப்படுகிறது. ஆங்கிலத்திலும் அவ்வாறே கூறப்படுகிறது. ஆனால், என்னைப் பொறுத்தவரை ‘கூரியர்’ என்பதைத் தூய தமிழ் சொல்லாகவே காண்கின்றேன். கூரிய நுண்ணறிவு படைத்தவர் என்பதும் இதற்குப் பொருளாகும். இக் கூரியர், சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும் இதே பொருளில் கையாளப்பட்டுள்ளது. ஒருவேளை ஃபிரெஞ்சு மொழி, அரிசியை ‘ரி’ என்று உரு மாற்றி ஏற்றதுபோல் இதையும் ஏற்றிருக்கலாம்.

**கே: ‘யுனெஸ்கோ கூரியர்’ தமிழ்ப் பதிப்பின் ஆசிரியராக 32 வருடங்களாகப் பணியாற்றும் தாங்கள், பெரிய அனுபவசாலி. இந்திய மொழிகளில் ‘யுனெஸ்கோ கூரியர்’ தமிழில் முதன் முதலாக வெளிவரக் காரணம் என்ன?**

**பதில்:** தமிழ், இந்திய மொழிகளில் ஒன்று மட்டுமல்ல, இந்திய நாட்டின் ஒரே சர்வதேச இந்திய மொழியுமாக அமைந்துள்ளது. யுனெஸ்கோ நிறுவனம் அம்முறையில்தான் தமிழைக் கணித்துள்ளது. தமிழையும் கையாள முற்படுகிறது. ஒரு நாட்டின் மொழியை ஒன்றிற்கு மேற்பட்ட நாடுகள், ஆட்சி மொழியாகவோ - ஆட்சி மொழிகளில் ஒன்றாகவோ சட்டபூர்வமாக ஏற்றிருந்தால் அம் மொழிக்கு சர்வதேச மொழி என்ற தகுதி கிட்டிவிடும். இலங்கையில் ஆட்சி மொழிகளில் ஒன்றாகவும், சிங்கப்பூரில் ஆட்சி மொழிகளில் ஒன்றாகவும் அந்நாடுகளின் அரச மைப்புச் சட்டங்கள் ஏற்றிருப்பதால் தமிழ் சர்வதேச மொழி என்ற தகுதிப்பாட்டைப் பெறுகிறது. எனவே யுனெஸ்கோ நிறுவனம் யுனெஸ்கோ கூரியர் இதழை இந்திய மொழிகளில் வெளியிட, முதலில் தமிழைத் தேர்வு செய்தது. இந்திய நடுவணரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்தியிலும் வெளியிட முன் வந்தது. முதலில் வெளியான தமிழ்க் கூரியர் தொடர்ந்து 32 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டுள்ளது. தொடக்கம் முதல் இதன் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றேன். உலகில் உள்ள 30 மொழிகளின் ஆசிரியர்களில் பணி மூப்பு ஆசிரியர் என்ற தகுதி மிகு சிறப்பு எனக்குண்டு. இதற்காக யுனெஸ்கோ எனக்குப் பாராட்டு வழங்கிச் சிறப்பித்துள்ளது. இச் சிறப்பு எனக்குக் கிடைத்ததாகக் கருதவில்லை. தமிழுக்குக் கிடைத்த மதிப்பு, மரியாதையாகவே கருதி மகிழ்கிறேன்.

**கே: இந்த வயதிலும் தாங்கள் எப்படி உற்சாகமாக வெளியீட்டுத்துறையில் தொடர்ந்து ஈடுபட முடிகிறது?**

**பதில்:** எனக்குக் ‘கூரியர்’ இதழ்ப் பணி மட்டுமன்று. நான்கு தென் மாநிலங்களின் மொழிகள் அமைப்பான, ‘தென் மொழிகள் புத்தக நிறுவன’ தலைமை நிர்வாகியாகவும் உள்ளேன். அத்தோடு, கூரியர் இதழையும் கவனித்துக்கொள்கிறேன். சொந்தமாக நூல் வெளியீட்டுப் பணியிலும் ஈடுபட்டுவருகிறேன். இதுவரை 35 இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளேன். அவற்றில் அறிவியல், தொழில்நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதிகளுமடங்கும்.

இளமை துள்ளும் தமிழைப் பற்றி, அதன் செழுமைமிகு வளர்ச்சி பற்றி, அதன் பேராற்றல் பற்றியே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருந்தால் – இளமைத்துடிப்பும் உற்சாகப்பெருக்கும் இடையறாமல் உழைக்கும் வேட்கையும், தானாக உங்களிடம் படிந்துவிடும். இதனால்தான் நாள்தோறும் குறைந்தது பதினெட்டு மணிநேரம் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் உழைக்க முடிகிறது. தமிழர் உணர்வை நெஞ்சத்தில் தேக்கினாலே தெம்பும் திராணியும் தானாகப் பொங்கத் தொடங்கிவிடும். நீங்களும் முயற்சித்துப்பார்த்தால் தெளிவாக உணர்ந்தறியமுடியும்.

**கே: சர்வதேச அளவிலான அறிவியல் சஞ்சிகையுடன் (யுனேஸ்கோ கூரியர்) தொடர்புள்ள தாங்கள், அண்மையில் தமிழ்நாட்டில் அறிவியலைத் தமிழில் கற்பிக்க முடியாது’ எனத் தமிழக அரசே ‘அறிவித்தது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

**பதில்:** ‘தன்னால் முடியாததைத் தமிழால் முடியாது’ எனக் கூறும் மேதைகள் தமிழ்நாட்டில் மிகுதி! அரசுமட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன? தமிழைப்புகழத் தெரிந்தவர்கள் பலர் உண்டு. தமிழின் ஆற்றலை உணர்ந்து தெளிந்தவர்கள் ‘விரல்விட்டு’ எண்ணத்தக்கவர்களே அங்கு உள்ளனர்.

தமிழில் அறிவியலைச் சொல்ல, கலைச்சொற்கள் (Technical Termes) இல்லையே என்ற நிலை இல்லாமற்போக வேண்டும் என்பதற்காக கடந்த நாற்பதாண்டுகள் அரும்பாடுபட்டு, 36 பொது அறிவியல் துறைகளுக்கான ‘அறிவியல் கலைச் சொல் களஞ்சியம்’ என்ற பெயரில் இரு தொகுதிகளையும், 56 தொழில்நுட்பப் பிரிவுகளுக்கான கலைச் சொற்களை உருவாக்கி ‘தொழில்நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி’ என்ற பெயரில் பெருந் தொகுதியொன்றையும், உயிரியல் துறையின் 15 மருத்துவப் பிரிவுகட்கான ‘மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்’ என்ற பெயரில் ஒரு தொகுதியையும் வெளியிட்டுள்ளேன். 800 பக்கங்களில் ‘கணினி கலைச் சொல் களஞ்சியம்’ அச்சாகிக் கொண்டுள்ளது. இதன் பிறகும் அறிவியலைச் சொல்ல கலைச்சொல் போன்ற பற்றாக்குறையால் பரட நூல்கள் எழுத இயலவில்லை; அதனால் அறிவியலைத் தமிழில் கற்பிக்க இயலாநிலை என்றெல்லாம் பிதற்றி நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு, தாழ்நிலை நோக்கிச் செல்வதையே காட்டுகிறதெனலாம். தூங்குபவனை எழுப்பலாம். தூங்குபவன் போல் பாவனை செய்பவனை எழுப்புவது அவ்வளவு எளிதல்லவே!



உண்மை நிலை உணர்ந்து, அரசு அறிவியலைக் கற்பிக்கும் முயற்சிக்குச் ‘சட்டபூர்வமாக ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்’ என நம்புவோமாக!

இனியும் இந்நிலை நீடித்தால் காலம் மன்னிக்காது. பாடம் கற்பிக்கவும் தயங்காது. தொடர்புடையவர்கள் விழித்துக் கொள்வார்களாக!

கலைஞர் ஆட்சிக்காலத்தில் அறிவியலைத் தமிழில் கற்பிக்க முற்படுவதன்மூலம் புதுவரலாறு படைக்க வேண்டும் என்பதுதான் மணவையின் பேரவா.

**கே: தமிழ் மொழியில் பட்டம் பெற்ற நீங்கள் அறிவியல் தொடர்பாக ஈடுபடுவதும் இதுவரை எந்தத் தமிழ்ப் பண்டிதராலும் நினைத்துக்கூடப் பார்க்காத தமிழை அறிவியலுடன் இணைப்பதும் ஏன்?**

**பதில்:** தமிழ் படித்தால் ‘பண்டிதனாகத்தான் ஆக முடியும் என்பது மிகத் தவறான கண்ணோட்டம்’. பெற்ற தமிழறிவைக்கொண்டு அறிவியல், பொருளியல் போன்ற பிற துறைச் செய்திகளைத் தமிழில் தர முற்படவேண்டும்.

நான் பல்கலைக் கழகங்களில் பெற்ற தமிழறிவைக்கொண்டு அறிவியல் தமிழை வளர்க்கவேண்டும் என்ற வேட்கையோடு படிப்பை முடித்தவன். நான் கற்ற தமிழியலையும் மொழியியலையும் முழுமையாகப் பயன்படுத்தி ஆயிரமாயிரம் புதுப் புது அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கி அறிவியல் தமிழை ‘செழிப்படையச் செய்ய’ இயன்றது. இன்றைய சூழலில், காலத்தின் தேவைக்கும் போக்குக்குமேற்பத் தமிழைக் கையாள முற்படவேண்டும். வளர்த்து வளப்படுத்தமுயல வேண்டும். இன்றைய அறிவியல் ஊழியில் தமிழ் வெறும் வெற்று இலக்கியப் படைப்புகளாக மலர்ந்து இன்னுமொரு தேக்கநிலைக்கு வழிகோலாமல், அறிவியல் தமிழாக வளர்ந்து வளம்பெற வேண்டும் என்ற துடிப்புடன் செயலாற்றுகிறேன். ‘இலக்கியப் படைப்புகள்கூட அறிவியல் இலக்கியப் படைப்புகளாக உருவானால் மட்டும் காலத்தை விஞ்சி வாழ முடியும்’ என்பதை உணர்ந்து தெளிய வேண்டும். அதற்காகவே ‘தமிழில் அறிவியல் படைப்பிலக்கியம்’ என்ற நூலை எழுதியுள்ளேன்.

தமிழ் படித்தவன் என்றால் அவன் தமிழ்ப் பண்டிதனாக வேண்டும். இல்லையென்றால் உயர்ந்த பட்சம் கல்லூரித் தமிழ் விரிவுரையாளனாக வேண்டும். என்ற செம்மறியாட்டுத்தனமான மாயையை உடைக்க வேண்டும் என்ற மன உந்துதல், படிக்கும் காலத்திலேயே என்னுள் அழுத்தம் பெற்று வந்தது. அதற்கேற்ப அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ‘பயிற்சி மொழி எது?’ என்ற கருத்தரங்கில் சிலர் ‘தமிழால் முடியாது’ என்று கருத்துரைத்த போது வெகுண்டெழுந்து ‘தமிழால் முடியும்’ என்பதைச் சொல்லால் அல்லாது செயல்வடிவில் நிறுவுவேன்’ என்று சபதமேற்ற போதிலிருந்து என் எதிர்காலச் செயற்பாடுகளை - வாழ்க்கை வழித்தடத்தை-அறிவியல் தமிழாக உருமாற்றிக்கொண்டேன். தமிழ் படித்தவனால் அறிவியலும் படிக்க முடியும்; படித்த அறிவியலைக்கொண்டு தமிழை வளர்க்க-வளப்படுத்த முடியும் என்பதை எண்பிக்க முனைந்து, அதில் வெற்றியும் பெற்று வருகிறேன்.

இது அறிவியல் ஊழி. அறிவியலின் துணையின்றி அரையங்குல வாழ்வையும் நகர்த்த முடியாத சூழ்நிலை. இந்நிலையில் மக்கள் அறிவியல் அறிவும், அறிவியல் உணர்வும் பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இதற்கு ஒரே வழி அறிவியலைத் தமிழில் கற்பதேயாகும்.

தமிழ் வெறும் இலக்கண வளமிக்க இலக்கிய மொழிமட்டுமல்ல; அஃது ஆற்றல் மிக்க அறிவியல் மொழியுமாகும். இதை உலகுக்கு உரிய முறையில், செயல்வடிவில் எண்பிக்கும் முயற்சியே என் அறிவியல் தமிழ்ப்பணி.

**கே: தமிழால் எல்லாம் முடியும் என்று கருதுகிறீர்களா?**

ப: தமிழைப் போற்றிப் புகழ்ந்து பூசனை செய்யத் தெரிந்த அளவுக்குத் தமிழின் ஆற்றலைத் தமிழன் அறிந்துணர்ந்தான் இல்லை. அளப்பரிய ஆற்றலை உள்ளடக்கிய அற்புதமான அறிவியல் மொழி தமிழ்.

சங்கத் தமிழன் சமயத்தாக்கம் இல்லாதபோது அவன் சமுதாய உணர்வுடன் இலக்கியப் படைப்புகளையும் வானவியல், கப்பலியல், கடலியல் போன்ற அறிவியல் சார்ந்த துறைகளில் ஆற்றல் மிக்கவனாக விளங்கினான். சமயத்தாக்கம் அவன் மீது அழுத்தம் பெறப்பெற அவன் வாழ்க்கை தடம் மாறியது. ‘எதுவும் என்னால் முடியும்’ எனக் கருதி உலகெங்கும் கப்பல் செலுத்திய தமிழன் ‘விதி’யை நம்ப முடிந்த பிறகு ‘என்னால் ஆவது’ ஏதுமில்லை. எல்லாம் விதிப்படிதான் நடக்கும் என்ற தொய்வு மனப்பான்மைக்கு ஆட்பட்டான். இன்றைய விண்வெளி ஓடம்போல் அன்று ‘தூங்கெயில்’ போன்ற விண்வெளிக் கோட்டைகளைப் பற்றிச் சிந்தித்த தமிழனின் அறிவியல் பூர்வமான சிந்தனைக்கு வேலியாகவும், செயலுக்கு முடக்கமாகவும் மன எழுச்சிகளை அடக்கும் மயக்க மருந்தாகவும் ‘விதி’ அவன் வாழ்வில் அழுத்தம் பெற்று, அவனைத் தாழ்நிலை நோக்கிச் செல்ல வழிவகுத்துவிட்டது. அவனைத் தூக்கி நிமிர்த்தி மீண்டும் பழைய வழித்தடத்துக்குள் கொண்டுவரவேண்டியது இன்றைய இன்றியமையாக் காலக் கடமையாகும். அதற்கு அவனுக்கு உந்துவிசையாக அமையவல்லது அவன் மொழியாகிய தமிழேயாகும். தமிழ் இயல்பிலேயே அறிவியல் மொழியாக அறிவியலைச் சொல்லுவதற்கேற்ப மொழியாக அமைந்திருப்பதையே இன்னும் அவன் அறியாமல் இருப்பதுதான் பரிதாபம்! கொடுமை! ‘மொழியைப் பொறுத்தவரை செல்வச் சீமான்களான அவன்’, ஏதுமற்ற ஏழைபோல் ஆங்கில வீட்டு வாசலில் இரு கரம் நீட்டி கையேந்தி நிற்கும் வெங்கொடுமையை எண்ணும்தோறும், என் இதயத்தில் இரத்தம் கசிவதை என்னால் உணராமல் இருக்க முடியவில்லை.

தமிழ் ஓர் அறிவியல் மொழி. அதனால் எத்தகைய அறிவியல் நுட்பச் செய்தியாயினும் அதனைச் சொற்செட்டோடும் பொருட்செறிவோடும் இலக்கிய மெருகோடும் திட்ப நுட்பமாக விளக்கமுடியும் என்பதை எண்பிக்கும் முயற்சியாக அறிவியலின் அனைத்துத் துறைகளுக்குமாக ஆயிரமாயிரம் அறிவியல் கலைச் சொற்களை உருவாக்கி பல்வேறு தொகுதிகளாக அச்சிட்டு உலவ விட்டிருக்கிறேன். அவைகளைக்கொண்டு ஆங்கிலத்தைவிட தெளிவாகத் தமிழில் அறிவியல் செய்திகளைச் சொல்ல முடியும் என்பதை அறிவியல் துறைகளின் வல்லுநர்களே ஒப்புக்கொண்டு கருத்துரைத்து வருகிறார்கள்.

இதற்கு என் திறமை மட்டும் காரணமில்லை. தமிழ் ஆற்றல்மிக்க மொழியாக அமைந்துள்ளது. உலகத்து மொழிகளிலேயே மிக அதிகமான வேர்ச்சொற்களைக்கொண்ட மொழியாகத் தமிழ் திகழ்கிறது. நாம் தான் நம் மொழி மீது நம்பிக்கை வைக்க மறுக்கிறோம். வானவியல் முதல், அண்மைக் கண்டுபிடிப்பான ‘Cymatics’ (அலை அதிர்வியல்) ‘Aids’ (ஏமக்குறைவு நோய்) வகை அனைத்துக்கும் என்னால் நிகரான தமிழ்ச் சொல் சொல்ல முடிகிறதென்றால், அது தமிழ்த் திறம்தானே. ஆங்கிலத்தில் திறம்படச் சொல்லவியலாத அறிவியல் நுட்பச்செய்திகளைத் ‘தமிழில் தெளிவாகச் சொல்ல முடியும் என்பதை எனது அண்மை வெளியீடான ‘மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்’ தொகுதியில் எண்பித்துள்ளேன். இதே கருத்தையும் உணர்வையும் அந்நூலின் ஆய்வாளரான மருத்துவப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் தன் ஆய்வுரையில் விளக்கியுள்ளார். இதன் பிறகுமா ‘தமிழால் எல்லாம் முடியுமா?’ என்ற கேள்வி? தமிழாலும் முடியும் இந்தத் தமிழனாலும் முடியும்!

*(மிகுதி அடுத்த வாரம்)*

# கவிதை முற்றம்

## நல்ல பையன்

*பள்ளிக்குச் சரியாய் சென்றிடுவேன்!*
*பாடம் சொல்லக் கேட்டிடுவேன்!*
*துள்ளும் மகிழ்வில் ஆடிடுவேன்!*
*தோன்றும் அன்பில் ஒன்றாவேன்!*
*பள்ளி ஓரம் விற்கின்ற*
*பண்டம் வெறுத்து ஒதுக்கிடுவேன்!*
*அள்ளிப் பிறர் தர வாங்காமல்*
*ஆகாது என்று மறுத்திடுவேன்!*

– கு. பாரதிமோகன் –

## குறள் முற்றம்

**'காக்கப் பொருளா அடக்கத்தை! ஆக்கம்**
**அதனின் ஊங்கு இல்லை உயிர்க்கு'**

அடக்கம் என்கின்ற செல்வத்தைப் போற்றிக் காத்துவிட்டால் மனித உயிர்களுக்கு அதைவிடப் பெரிய செல்வம் ஏதும் இல்லை.

## அறிவியல் முற்றம்

### சொற்சிதறல் எண் - 15

பின்வரும் தமிழ்ச் சொற்களின் ஒத்த கருத்துள்ள சொற்கள் அதன் கீழே தரப்பட்டுள்ளன. அவையாவும் நான்கு எழுத்துக்களைக் கொண்டனவாகவும், சிதறியும், இடம் மாறியும் காணப்படுகின்றன. அவற்றைக் கண்டுபிடிக்கவும்.

**திடல், துணிவு, பட்டம், பொன், இரத்தம், உணவு, அகங்காரம், உச்சி, வைகறை, ஆச்சரியம்.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மை | ற் | ர | லை | ஆ | ரி | க | ம் |
| தை | ங் | நீ | ம் | ஆ | தி | றா | ர் |
| கா | க | ய | ம் | சி | ந் | ன | பு |
| த | தா | கா | டி | அ | கை | ப் | ம் |
| செ | கா | வ | ம் | தி | ண | ர | ம் |

1.................................. 6..................................

2.................................. 7..................................

3.................................. 8..................................

4.................................. 9..................................

5.................................. 10..................................

பிள்ளைகளே!

சரியான விடையைக் கண்டுபிடித்து குறித்து வையுங்கள். விடை அடுத்தவாரம்!

### சொற்சிதறல் எண் பதின்நான்கின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| போர் | - யுத்தம் | இளைஞன் | - குமரன் |
| சிற்றூர் | - கிராமம் | சிந்தனை | - எண்ணம் |
| சுதந்திரம் | - விடுதலை | மகிழ்ச்சி | - இன்பம் |
| பூமி | - வையகம் | சொந்தநாடு | - தாயகம் |
| புயல் | - சூறாவளி | செவிமடுத்தல் | - கேட்டல் |

## அறிந்துகொள்ளுங்கள்

- ★ பாம்பின் உமிழ்நீரே அதன் விசமாக மாறுகிறது.
- ★ நாய்க்கு முன்காலில் 5 விரல்களும் பின்காலில் 4 விரல்களும் உண்டு.
- ★ குயில் குளிர்காலத்தில் கூவுவது இல்லை.
- ★ மனிதனின் கல்லீரலின் எடை இருதயத்தைப்போல 5 மடங்கு.
- ★ பிறந்த குழந்தை அழும்போது கண்ணீர் வராது.
- ★ இறைச்சியைவிட வேர்க் கடலையில் புரதம் அதிகம்.
- ★ தாவரங்கள் பகலில் மட்டுமே சுவாசிக்கின்றன.
- ★ உலகில் 2796 க்கும் அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன.
- ★ நத்தார் வாழ்த்து மடல் 1843ல் தான் உருவானது.
- ★ நோபல் பரிசு 1901ம் ஆண்டு முதலில் வழங்கப்பட்டது.



## குட்டிக் கதை படியுங்கள்

# கனவு உலகம்

பிற்பகலில் அந்தப் பள்ளியின் ஆசிரியர் வகுப்பறையிலேயே குறட்டை விடுவார். தைரியமான மாணவர்கள் சிலர் ஒரு நாள் அவரைப் பார்த்து, 'வகுப்பறையில் தாங்கள் இப்படிச் செய்யலாமா?' என்று கேட்டனர். அதற்கு ஆசிரியர், 'தினந்தோறும் பிற்பகல் உறக்கத்தின்போது, கனவு உலகம் சென்று பண்டைக்கால முனிவர்களைச் சந்தித்து கல்வி சம்பந்தமாக விவாதித்துவிட்டு வருகிறேன். அதனால் உங்களுக்கெல்லாம் நன்மையே' என்று உரைத்தார்.

ஒருநாள், கடுமையான வெயில். உணவுக்குப்பின் பிற்பகலில் சில மாணவர்கள் தூங்கிவிட்டனர். தமது தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த ஆசிரியர், மாணவர்களில் சிலர் தூங்குவதைக் கண்டு கொதிப்படைந்தார். அவர்களைத் தட்டி எழுப்பித் திட்டினார். 'ஏன் தூங்கினீர்கள்?' என்று விளக்கம் கேட்டார். அதற்கு அந்த மாணவர்கள்,

'கனவுலகம் சென்று பண்டைக்கால முனிவர்களைப் பார்க்கப் போனோம்' என்றனர்.

ஆசிரியரின் முகம் கறுத்துவிட்டது. ஒருவகையாக சமாளித்துக்கொண்டு,

'அதுசரி, கனவுலகத்தில் பண்டைக்கால முனிவர்களைப் பார்த்தீர்களா? அவர்கள் என்ன சொன்னார்கள்?' என்று கேட்டார்.

தூங்கிய மாணவர்கள் சொன்னபதில்:

'ஆம், கனவுலகத்தில் பண்டைக்கால முனிவர்களைச் சந்தித்தோம். பள்ளி ஆசிரியரில் ஒருவர் தினந்தோறும் பிற்பகலில் உங்களைச் சந்தித்து விவாதிக்கிறாரா? என்று



வினவினோம்.' அதற்கு அவர்கள், 'அப்படி யாரும் இங்கு வருவதில்லையே' என்றனர்.

மாணவர்கள் கூறியதைக்கேட்டு வெட்கப்பட்ட ஆசிரியர் அன்றுமுதல் தூங்குவதைவிட்டுவிட்டு பாடங்களை நடத்தினார்.

– உதயன்
தமிழ்நாடு

## கட்டுரை முற்றம்

# அகராதி

டிக்ஷனரி என்ற ஆங்கிலச்சொல் 'டிக்ஷ்னேரியஸ்' என்னும் லத்தீன் மூலத்திலிருந்து பிறந்தது. சொற்கோர்வை என்பது இதன் பொருள். தமிழில் இதனை அகராதி என்கின்றோம். அகராதியில் சொற்களை அகர வரிசைப்படி அமைத்து அவற்றின் உச்சரிப்பு, பொருள் மற்றும் சொல்லாக்க விளக்கங்களும் தரப்படுகின்றன.

உலகின் முதல் அகராதி லத்தீன் மொழியில் ஜான் கார்லண்ட் என்ற ஆங்கில அறிஞரால் 1225ம் ஆண்டு தொகுக்கப்பட்டது. 1552 ல் முதல் ஆங்கில அகராதியை ரிச்சர்டு ஹ்யூலோட் என்பவர் உருவாக்கினார். இதன் பெயர் 'அப்ஸட்ரியம் ஆங்க்லிகோ- லாடினம் ப்ரோ டைரன்குலிஸ்' என்பதாகும். இந்த அகராதியில் வரிசைக்கிரமமாக ஏறத்தாழ 26000 சொற்கள் ஆங்கிலப்பொருள் விளக்கங்களுடன் அவற்றுக்கு இணையான லத்தீன் சொற்களுடன் அமைக்கப்பட்டிருந்தன. இது மக்களால் விரும்பப்பட்டபோதிலும் அதிகவிலை காரணமாக யாரும் இதனை வாங்க முடியவில்லை. ஆகவே, விலை குறைந்த பல அகராதிகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்குக் கொணரப்பட்டன.

உலகின் மிகப்பெரிய அகராதியான ஆக்ஸ்ஃபோர்டு அகராதி 12 பகுதிகள் கொண்டது. பக்கங்களின் எண்ணிக்கை 15487 ஆகும். 1884 முதல் 1933 வரையில் இவ்வகராதியில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏதும் செய்யப்படவில்லை. 1933 இல் 963 பக்கங்கள் அதிகரிக்கப்பட்டன. 1974ல் புதிதாக இரண்டு பகுதிகள் சேர்க்கப்பட்டன. இப்போது பல்வேறு விதமான அகராதிகள் கிடைக்கின்றன. உதாரணமாக கல்விச்சொல்லகராதி, சட்டச்சொல்லகராதி. கலைச்சொல்லகராதி, விஞ்ஞான அகராதி, இம் மாதிரியான அகராதிகளில் அந்தந்தத்துறை தொடர்பான சொற்கள் அகர வரிசையில் தொகுக்கப்பட்டு விளக்கங்களுடன் வெளிவருகின்றன. பல்வேறு மொழிகளிலுள்ள அகராதிகள் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. நீங்கள் எந்த மொழியை எடுத்துக்கொண்டாலும் ஆங்கிலத்தில் பொருள் விளக்கங்களுடன் அம்மொழியகராதி வெளியிடப்பட்டிருக்கும்.

*தகவல்: ஆத்மன்*

## தகவல் முற்றம்

### காண்டா மிருகம்

சுமார் 50 வருடங்கள் உயிர் வாழக்கூடிய காண்டா மிருகத்திற்கு கால்கள் குட்டையாக இருக்கும். காலில் மூன்றே மூன்று விரல்கள்தான் உள்ளன. சில வகை காண்டா மிருகங்களுக்குக் கொம்புகள் பெரிதாக இருக்கும். 5 அடி அளவு கொம்புகள் கூட உண்டு. காண்டா மிருகத்தின் உடம்பு மடிப்பு மடிப்பாக இருக்கும். 5 வகையான காண்டா மிருகங்கள் உள்ளன. ஆபிரிக்கா, இந்தியா, சுமாத்திரா, யாவா போன்ற இடங்களில் காண்டாமிருகங்கள் வாழ்கின்றன. சில காண்டா மிருகங்களுக்கு ஒரு கொம்பு மாத்திரமே உண்டு. ஆச்சரியம் என்னவென்றால் காண்டா மிருகம் மாமிசம் உண்பதில்லை. இலை, புல், கிழங்குகள்தான் இதன் உணவு. பார்வை மந்தமாக இருக்கும். எளிதில் கோபம் கொள்ளாது. கோபம் கொண்டால் கதிகலங்க வைத்துவிடும்.

# மணலாறு ஒரு வீரவரலாறு 2

## 'இக் காடுதான் எங்களின் இறுதித்தளம். இங்கிருந்து வெளியேறும் எண்ணம் இருக்கக் கூடாது. வாழ்வாயினும் சாவாயினும் இங்கேதான் முடிவு எழுதப்படும்'

- தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்



எஸ்.தீரன்

1988 இந்தியப் படைகள் மணலாற்றினைச் சுற்றி வளைத்துவிட்ட செய்தி தலைவரை சென்றடைகின்றது. உலகின் எந்தப் படையணி வந்தாலும் அதனை எதிர்கொள்ளும் மனோதிடமும் ஆன்மீக பலமும் எமக்கு இருக்கின்றதென்பதை தலைவர் இங்குதான் நிரூபிக்கத் தயாரானார். முப்படைகளையும் கொண்ட ஒரு மரபுவழிப் படையணி, முற்றுகைத் தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருந்தவேளை, கரந்தடிப் போர்முறையின் நுட்பங்களையும், யுத்த தந்திர முறைகளையும் தலைவர் போராளிகளுக்குத் தெளிவுபடுத்தினார்.

'இக் காடுதான் எங்களின் இறுதித்தளம். இங்கிருந்து வெளியேறும் எண்ணம் இருக்கக் கூடாது. வாழ்வாயினும் சாவாயினும் இங்கேதான் முடிவு எழுதப்படும்' என்ற தலைவரின் உறுதியான வார்த்தை கேட்ட போராளிகள் மனவலிமையுடன் களத்தில் இறங்கினார்கள். இந்தியப் படைகளுடன் போரிடுவதற்குத் தேவையான ஆட்பலமோ, ஆயுதபலமோ இல்லை என்றாலும், மன உறுதியின் மூலமும், சிறந்த திட்டமிடல்கள் மூலமும் இந்தியப் படையினரின் மனநிலையை நிலைகுலைய வைக்கமுடியும் என்பதே தலைவரின் கணிப்பு. குறைந்த ஆயுதங்களுடனும், குறைவான ஆட்பலத்துடனும் எதிர்த்தாக்குதலுக்கு போராளிகளைத் தயார்படுத்தினார். உணவு, நீர் என்பன போதியளவு கிடைக்காத அந்த நேரத்திலும் போராளிகள் உற்சாகத்துடன் கடும் பயிற்சிகளில் சோர்வின்றி ஈடுபட்டார்கள். இந்தியப் படையின் வருகையை எதிர்பார்த்தபடி புலிகள் காட்டினையே கவசமாக்கி விழிதூங்காது காவல் இருந்தனர்.



* * *

இந்தியப் படைகளால் மணலாற்றின் மீது 'முற்றுகை' தொடங்கியதும் உடனடியாக காட்டில் உள்ள புலிகளுக்கு உணவுப் பொருட்கள் சென்றடையாதவாறு தடுப்பதையே முதல் கருமமாக நினைத்தனர். அதற்காக சுற்றிவர உள்ள கிராமங்களில் வசித்த மக்கள் எல்லாம் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான அளவிலேயே வெளி இடங்களில் இருந்து உணவுப் பொருட்கள் கொண்டுவர அனுமதிக்கப்பட்டனர். மேலதிகமாகக் கொண்டு வருபவர்கள், காவலரண்களில் நிற்கும் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைகளுக்கும் உட்படுத்தப்பட்டிருந்தனர். காட்டினைச் சுற்றி நிற்கும் படையினருக்கு ஊடாக உணவுப் பொருட்களைக் கொண்டுபோய் சேர்ப்பதென்பது இலகுவான காரியமல்ல. ஆனால் எதிரியின் இந்த முற்றுகையை ஊடறுத்துச் சென்று, படையினரின் 'கண்களுக்குள்ளாலேயே' உணவுப் பொருட்களைக் கொண்டுவந்து சேர்க்கும் பொறுப்பு சில போராளிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை இவ் உணவுப் பொருட்களுக்கான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு காட்டின் இன்னொரு பகுதியில் முகாம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. அதன் செயற்பாடாக மலைக்கல் என்னும் பகுதியில் முகாம் அமைக்கத் திட்டமிடப்பட்டு அதன் பொறுப்பு கரும்புலி லெப்கேணல் 'போர்க்' கிடம் (இவர் 1990-ம் ஆண்டு நவம்பர் மாதம் மாங்குளம் மீதான தாக்குதலில் கரும்புலியாகச் சென்று, அதன் வெற்றிக்கு வழி சமைத்து வீரச்சாவை தழுவிக் கொண்டார்) ஒப்படைக்கப்பட்டது. அது மிகவும் கடினமான வேலை. அமைக்கப்பட்ட அம்முகாமிற்கு, மழை வெள்ளத்தினால் சேறும், சகதியுமாக இருக்கும் வயல் வெளிகளின், காட்டுப் பாதைகளினூடாக உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு உழவு இயந்திரத்தை இயக்கிச் செல்வது என்பது சுலபமான காரியமல்ல. இதற்கிடையில் படையினர் அப்பகுதிக்கு வந்துவிட்டால் எதிர்த்துப் போரிட தயார் நிலையில் இருக்கவேண்டும். குண்டுவீச்சு விமானங்கள், உலங்கு வானூர்திகள் அப் பகுதிகளில் வட்டமிட்டால், தாக்குதலில் இருந்து தப்பிக்கும் அதேவேளை; போய்ச்சேரும் இடங்களை, வழிகளை எதிரிக்குக் காட்டிக்கொடுக்காமல் கவனமாக இருக்கவேண்டும். விமானங்கள் முற்றாக அவ்விடத்தை விட்டு அகன்ற பின்னால்தான் பயணம் தொடரும். ஆனாலும் சில நேரங்களில் உழவு இயந்திரம்கூட இயங்காமல் நின்றுவிடும். அப்போதெல்லாம் மூடைகளைத் தோள்களில்தான் சுமந்து செல்லவேண்டும். இந்த கடினமான பணிகளில் எல்லாம் போராளிகள் உத்வேகத்துடனே செயல்பட்டார்கள்.



இடுப்பு முறிந்திருந்த நிலையிலும், பாரமான பொருட்களை தூக்கினால் படுத்த படுக்கையிலேயே இருக்கவேண்டும் என்பது தெரிந்தும், பாரமான அம்மூட்டைகளைக் காவிக்கொண்டு போராளிகளுடன் இணைந்து உற்சாகமாக நடந்தார், போர்க். தலைவரின் திட்டப்படி தனக்குக்கொடுத்த பணியைத் திறம்படச் செய்து உணவுப் பொருட்கள் சேமிக்கும் ஒரு பலமான முகாமாக, அதை மாற்றியிருந்தார் போர்க்.

* * *

### செக்மேற் — 1


காட்டின் மீதான முற்றுகையைப் பலப்படுத்திக் கொண்ட இந்தியப் படைகள் தாக்குதலுக்குத் தயாராக தொடங்கின. 'செக்மேற்' என தாக்குதலுக்கு குறியீடிட்டு, 1988 வைகாசி 23-ம் நாள் தமது தாக்குதலைத் தொடங்கின. பல முனைகளின் ஊடாக படையினர் முன்னேறுவதற்கான 'தயார்' நிலைக்குக் கொண்டுவரப்பட்டனர். சுற்றிவர உள்ள அனைத்துக் கிராமங்களும் சுற்றி வளைக்கப்பட்டு, புலிகள் தப்பிச் செல்லாதவாறு தடுப்பதற்கு அக்கிராமங்கள் மீதான வெளித் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டது. தலைவர், தப்பி வேறுநாடுகளுக்குச் செல்லாதவாறு முல்லைத்தீவு கடற்பரப்பே இந்தியக் கடற்படையின் தளமாக மாறியிருந்தது. மொத்தத்தில் 'நாற்பதினாயிரம்' படையினரும் புலிகளை எதிர்கொள்ளத் தயார் நிலையில் வைக்கப்பட்டதன் பின்னரே, தன் இறுதித் தாக்குதலை நம்பிக்கையுடன் தொடங்கியது இந்தியப்படை.

ஆயிரக்கணக்கான இந்தியப் படையினர் பல்வேறு முனைகளினூடாக டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் முன்னேறத் தொடங்கினர். இதேவேளை, ஒரு மறைவில் படையினர் முன்னேறிக்கொண்டிருந்த வேளை போராளிகள் காவிச்சென்ற உணவுப் பொருட்களில் இருந்து பருப்புகள் வழியெங்கும் சிந்துப்பட்டுக் கிடந்தன. அந்த (பருப்பு!) வழியை இலக்கு வைத்து படையினர் வேகமாக முன்னேறத் தொடங்கினர். புலிகள் தங்கியிருக்கும் இடத்திற்கான வழி தெரிந்துவிட்டதால் மேலும் பல இராணுவத்தினர், முன்னேறும் அம் முனைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

முன்னணிக் காவல் நிலைகளில் நின்ற போராளிகள், இந்தியப் படையினர் முன்னேறி வருவதைக்கண்டுகொண்டனர். ஒருசில போராளிகள்; நூற்றுக்கும்மேற்பட்ட படையினர்! இறுதிவரை முற்காப்பு நிலைகளில் இருந்தே வரும் படையினரை எதிர்கொள்வது என அந் நிலைகளில் நின்ற போராளிகள் தீர்மானித்தனர். இந்தியப் படையினர் தங்கள் இலக்குகளுக்குள் வரும்வரை காத்திருந்தனர் புலிகள். அண்மித்ததும் சண்டை மூர்க்கமாகத் தொடங்கியது.

முற்காப்பு நிலைகளில் இருந்தே இவ்வளவு எதிர்ப்பு வருமென - அதுவும் நிலைகளுக்கு மிக அண்மையிலேயே இவ்வாறான ஒரு பெரும் மோதல்வரும் என எதிர்பார்க்காத 'செக்மேற்' படையினர் திகைத்துப் போயினர்.

(தொடரும்)




# எம் மண் உயிர்க்கும்

**— போராளி —**

எங்கும் வெடி மருந்துகளின் மணமும் அழுகிய நாற்றமுமாகக் கிடந்தது. எந்தக் கணமும் உயிரைக் கொண்டுபோகும் எறிகணையொன்று வரலாம். தரைகளைப் பிய்த்துச்சென்று குருதி வடியச் செய்யலாம். ரவைகள் காற்றைக் கிழித்தன. புகை மண்டலம் அடிக்கடி மேலெழுந்து காற்றிற் பரவிக்கொண்டிருந்தது.

'எதையோ கொழுத்துகிறான்' பக்கத்திலிருந்த தோழியின் வார்த்தை என்னை உசுப்பிவிட்டது.

அதைத்தான் நானும் பார்க்கிறேன். சுருள் சுருளாகப் புகை கிளம்பி முகிலோடு கலந்தது. இடைக்கிடை அதற்குள் ஏதோ வெடித்துச் சிதறுகின்ற ஒலிகளும் கேட்டன.

எம் இனத்தின் இன்பமான குடியிருப்பு எரிந்து கொண்டிருக்கும்போது பக்கத்திலிருந்து தோழியைப் பார்த்தேன். அவளது கண்கள் சிவந்திருந்தன. நித்திரை இன்றிய இரவுகளை வெளிக்காட்டினவோ, அல்லது அவற்றைப் பார்த்து அழுகிறாளோ? உண்மையில் மூன்று நாட்கள் தொடர்ந்து நித்திரையில்லை. சிறிது ஓய்வு கிடைக்கின்ற பத்து நிமிடங்களோ, அரை மணித்தியாலமோ மெல்லக் கண்ணயர, மீண்டும் எழுந்து ஊர்ந்து செல்ல, அப்படியே நித்திரை போய்விடும்.

அவளது துப்பாக்கியைப் பற்றிய கைகள் அடிக்கடி இறுகுவதையும் கை நரம்புகள் முறுக்கேறுவதையும் கண்டேன். மெல்ல மெல்ல அவதானித்து ஓசைப்படாமல் நடந்தோம்.

அவள் அந்தப் பள்ளிக்கூடத்துக் கட்டடத்தைப் பார்த்தபடி அப்படியே நின்றாள். அவளது கண்கள் கலங்கியிருக்கவேண்டும். அதை மறைக்க அடுத்த பக்கம் திரும்பி வேறு பக்கத்தில் கவனத்தைச் செலுத்துபவள் போல வெறித்தாள்.

'அக்கா இந்தப் பள்ளிக்கூடத்தில நான் படிச்சனான். இஞ்சையிருந்துதான் நான் இயக்கத்துக்கு வந்தனான்.'

அவளது குரல் கரகரத்தது. அந்தப் பெரிய பாடசாலைக் கட்டடத்தின் அனேகமான இடங்களை எதிரிகள் சிதைத்திருந்தனர். பாடசாலையின் பெயரைப் பதித்த மாடிக்கட்டடம் எழுத்துக்களோடு இடிந்து போயிருந்தது.

'அக்கா அந்த மாடியில்தான் எங்கட வகுப்பு இருந்தது'

அவள் சுட்டிக்காட்டிய இடத்தில் கரும்பலகையில் எழுத்துக்கள் இன்னும் அழியாமல் கிடந்தன. அண்மையில் அவ்விடத்தில் சண்டை நடந்ததற்கு அடையாளமாக ரவைக்கோதுகளும், குன்றும் குழியுமான நிலமும், இன்னும் சன்னங்களால் ஆழமாகக் கிழிக்கப்பட்டு அரைகுறையாய் நின்ற மரங்களும் கிடந்தன.

நாம் சற்றுத் தள்ளியிருந்த அந்தக் காப்பரணுக்கு ஊர்ந்தபோது எம்மோடு அந்த நாய்களும் வந்தன. தோல்கள் ஒட்டி எலும்புகள் துருத்திக்கொண்டு நின்ற நாய்கள் இரண்டும் எம்மிடம் எதையோ யாசிப்பதாகப்பட்டது. அடிக்கடி நாக்குக்களைத் தொங்கப் போட்டபடி வழமையான குரலைவிட மெல்லிய முனகலாகக் கத்தின. பசியால் தான் அப்படிக் கத்துவதாக எனது தோழி சொன்னது நினைவுக்கு வந்தது.

சிலவேளை தன்னை வளர்த்த எஜமானனை நினைத்துத்தான் அப்படிக் கத்துகிறதோ என்னவோ? அதை வளர்த்த வீட்டுக்காரன் தனது வீட்டைப்போல, தான் விட்டுச் சென்ற பயிர் முற்றிய தோட்டத்தைப்போல அதனையும் நினைத்தவாறு வேதனைப்பட்டுக்கொண்டிருப்பான். நெஞ்சு வலித்தது. பாறாங்கல் கொண்டு அமுக்குவது போல வேதனையாக இருந்தது.

எதிரேயிருந்த வீட்டின் முன்விறாந்தை எறிகணையால் சிதைந்து போயிருந்தது. சுவரிற் கொழுவியிருந்த அழகிய வண்ணக்காட்சிப்படமும் சட்டமிடப்பட்ட குடும்பப்படமும் சிதறிப்போய், கொழுவியிருந்த ஆணியோடு விழுந்திருந்தன: கதிரைகளின் மேலே வீட்டின் உடைந்த கொங்கிறீற் துண்டுகள் கிடந்தன.

எதையாவது சாப்பிடவேண்டும் போல இருந்தது. அவ்வளவு பசி, காலைச் சாப்பாட்டு நேரம் கடந்து மதிய நேரம். தெருவெங்கும் வெம்மை கொட்டியது. அதைவிட மனம்... இன்னும் சாப்பாடு வருவதற்கான அறிகுறியைக் காணோம். பாதைகளைச் சீராக்கும்போது எவ்விடத்தில் மாமரத்தைக் காணுகின்றோமோ, அவ்விடத்தில் நின்று மாங்காய்களைக் கடித்து வயிற்றை நிறைத்துக்கொள்வதோடு சரி. சாப்பாட்டைக் கண்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. நிலைமை அப்படி. வழமையாகச் சாப்பாடு கொண்டுவரும் தம்பி கூட முந்தநாள் நடைபெற்ற எதிரியின் கண்மூடித்தனமான எறிகணை வீச்சில் வீரச்சாவடைந்து விட்டதாகச் சொன்னார்கள்.

இருட்டத் தொடங்கிவிட்டது. யாழ்ப்பாணம் அரையிருட்டில் ஊமையாய்க் கிடந்தது. வீடுகளுக்குள் இருந்த நாய்கள் அங்குமிங்கும் ஓடித்திரிந்து அந்தரித்தபடி ஊளையிட்டன. இராணுவம் அடிக்கடி விடும் பராவெளிச்சத்தைத் தவிர நகரம் அசைவற்றிருந்தது. ஒரு பாரவெளிச்சம் அந்தரத்தில் நின்று தொங்கிவிட்டு ஏதோ ஓர் உயரமான கட்டடத்துக்குள் விழுந்து அணைந்துபோனது.

'வேம்படிப் பள்ளிக்கூடத்து மாடியில்தான் விழுந்திருக்க வேணும்'.

என்னோடு நின்ற தோழி சொன்னாள், நேற்று முன்தினம் நடைபெற்ற அகோரமான எறிகணை வீச்சுக்கள் தாராளமாக வேம்படி மகளிர் பாடசாலையின் உயரமான மாடிக்கட்டடங்களைப் பதம்பார்த்தன. நேற்றுப் பிற்பகல் அவ்வழியால் வரும்போது வேம்படி உருக்குலைந்து போயிருந்தது.

அந்தப் பாடசாலையில் ஏறத்தாழ மூன்று மாதத்துக்கு முன்னர் போர்க்காலக் கருத்தரங்கு வைத்தது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. இன்றைய இளைய தலைமுறை போராடவேண்டிய தேவையை நன்றாக உணர்த்தி, அது ஒவ்வொருவர் தலையிலும் சுமத்தப்பட்டுள்ள வரலாற்றுக் கடமை என்பதையும் வலியுறுத்திக் கூறியபோது, எல்லோரும் உணர்வுபூர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். இறுதியாக எல்லோரும் எழாதுவிடினும் இந்தப் பாடசாலையிலும் எதிரி குடியிருக்கலாம்' என்பதைச் சொன்னபோது, நிறையச் சிந்தித்தார்கள். ஒருவரையொருவர் பார்த்துத் தங்களுக்குள் பேசி சில மாணவிகள் அன்று எம்மோடு வந்தனர். இப்போது அவர்கள் பயிற்சி. எடுத்துக்கொண்டிருப்பார்கள்.

இப்போது அங்கு படித்துக் கொண்டிருந்த மாணவிகள் தங்களது பாடசாலைகளைப் பறிகொடுத்த பின்னரும் எங்காவது இன்னொரு பாடசாலையில், அல்லது உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்திருக்கலாம். இதயத்தின் அடி ஆழத்திலிருந்து மெல்லிய பெருமூச்சு ஒன்று கிளம்பியது.

சரமாரியான எறிகணைகள் கணத்துக்குக் கணம் எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தன. கந்தகப்புகையும் அதிர்வால் கிளம்பிய புழுதியும் எமது உடுப்புக்களை, பற்றியிருந்த ஆயுதங்களைக் குளிப்பாட்டின.

வழிதவறிய பசுக்கன்று ஒன்று அங்கும் இங்கும் பயப்பிராந்தியோடு பார்த்துக்கொண்டிருந்தது. அது தனது தாய்ப் பசுவை எங்கேனும் எறிகணைக்குப் பறிகொடுத்திருக்கலாம். அல்லது இராணுவம் அதனை இறைச்சிக்காகப் பயன்படுத்தியிருக்கவேண்டும்.

இராணுவ டாங்கிகள் இரைகின்ற சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. எதையுமே ஜீரணிக்க முடியாத நிலை. நடந்து முடிந்துபோன சம்பவங்களை மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஊரோடு குடிபெயர்ந்துபோன உறவுகள், ஆசையாய் அழகு பார்த்துக் கட்டிய வீடுகள், வாங்கிநட்ட பூமரங்கள், கடைகள், விளைநிலங்கள் எல்லாம் பேய்புகுந்தது மாதிரிப்போனது.

சில நாட்களின் முன்னர் சுமையோடு ஓடி வந்து களைத்துப்போன ஒரு அம்மா எம்மிடம் தண்ணீர் கேட்டுக் குடித்துவிட்டு அழுதார்.

'இந்த முறை தோட்டத்தில் நல்ல விளைச்சல் இரண்டு நாள் கழிச்சு வெங்காயம் கிண்டுவம் எண்டு ஆயத்தப்படுத்தினம் பிள்ளை, ஆமிக்காரர் வந்திட்டாங்கள். எங்கேயோ திரிஞ்சு கடன் பட்டு மாடாய் உழைச்சு அடைஞ்ச பலனை எடுக்கிறதுக்கிடையில ஊருக்குள்ள வந்திட்டாங்கள். எல்லாம் போச்சுதம்மா'.

அம்மா தலைதலையாய் அடித்துக் குமுறினார்.

பிறகு எல்லாம் அடங்கி, சமாதானப்படுத்தித் தேறுதல் கூற, கேட்டார். 'மெய்யே பிள்ளை எப்ப ஊருக்குப் போறது'

அம்மாவுக்குச் சரியான ஏக்கம், எல்லா அம்மாவையும் போல.

வரவரக் கிட்டவாக இராணுவத்தின் டாங்கிகள் இரைகின்ற சத்தம் கேட்டது. இன்னும் முழுமையாக விடியவில்லை. பனிபடர்ந்தகாலை. ஒருசில நாட்களுக்குள்ளேயே வளர்ந்துவிட்ட புல் பூண்டுகள், மனிதர்கள் இல்லாத வெறுமையைப் பறைசாற்றின. தாக்குதல் அணிகள் தற்பாதுகாப்பு நிலையெடுத்து எதற்கும் ஆயத்தமாகவே நின்றன. சில எண்ணிக்கையிலான போராளிகள்தான். ஒவ்வொருவருடைய .மனங்களிலும் சண்டையை எதிர்கொண்டு முறியடிக்கின்ற மன உறுதி தெரிந்தது.

என்னோடிருந்த தோழி வழமையைவிட மிகுந்த உற்சாகமாகத்தான் இருந்தாள்.

அடிக்கடி தனது ரவைக்கூட்டுத் தாங்கியிலிருந்த கிரனைட்டுக்களைத் தடவிப் பார்த்தாள். சிறிது நேரத்துக்கு முன்னர் அடிக்கடி பசிக்குது என்று சிணுங்கிய அந்தக் குரலைக் காணவில்லை.

தன் அருகிலிருந்த எல்லா இடத்தையும் சுற்றிப்பார்த்தாள். காப்பகழிக்குள்ளிருந்து குதித்தபடி எழுந்தாள்.

'கவனம் வெளியில் வீணா நிக்காதை. அடிக்கடி செல் அடிக்கிறான்'.

அவள் காப்பகழியின் மண்மூடையின் மேல் ஏறி நின்றபடி எதிரே தொலைவில் தெரிந்த வீடுகளை உற்றுப்பார்த்தாள். ஒரு புதிய பொருளைக் கண்டுவிட்டாள்போல மகிழ்ச்சிபொங்கக் கூச்சலிட்டாள்.

'அங்க எங்கடை வீடு தெரியிது'

அவள் காட்டிய பகுதியிலிருந்து இராணுவம் கவசவாகனங்கள் சகிதம் முன்னேறத் தொடங்கியது. மும்முரமாகச் சண்டை நடைபெற்றது. எம்மவரின் எண்ணிக்கை குறைவு. ஆனால் ஒவ்வொருவரும் பல கைகள் முளைத்தவர்கள் போலச் சண்டையிட்டனர். அந்தக் கீச்சுக்குரலுக்குள் இவ்வளவு உரப்பு வந்ததோ என்று அதிசயிக்கும் அளவுக்கு அவள் தொண்டை கிழியக்கத்தினாள்'.

'விடாதையுங்கோ, விடாதையுங்கோ',

எதிரியின் இயந்திரத்துப்பாக்கிகளின் ரவைகள் மழைபோல எம்மைக் குறிவைத்தன. எம்மவர் உறுதிகுலையாத வேகத்தோடு சண்டையிட்டனர். ·ஆனாலும் அவளது கீச்சுக்குரல் எல்லாவற்றையும் மேவிக் கேட்டவண்ணமிருந்தது.

'அக்கா எங்கட தோட்டத்துக்குள்ளால வாறான். உவனைப் புரட்டவேணும்'.

அவள் கத்தியபோது ரவையொன்று அவளது தலையைத் துளைத்தது. அவளது பிஞ்சுப்பருவம் கரைந்த மண்ணிலேயே அவள் விழுந்தாள்.

'அக்கா இந்த றைபிளைக் கவனமாகக் கொண்டுபோங்கோ இந்த ஊரிலையிருந்து இதைத் தூக்கிறதுக்கு நிறையப் பெட்டையள் வருவாளவை'.

அதுதான் அவளது கடைசிக் குரலாக இருக்கவேண்டும் அதற்குப் பிறகும் அங்கும் சண்டை நடந்தது.



# பத்து ஐரோப்பிய தமிழ் குறும்படங்கள்:

## ஆர்வமும் அறுவடையும்

புகலிட தமிழ் சினிமா என்பதை இன்று ஈழத்துக்கு வெளியிலும் தமிழகத்துக்கு வெளியிலும் தயாரிக்கப்படும் தமிழ் சினிமாவை சுட்டிக்காட்டிச் சொல்லலாம். இத்தகைய முயற்சிகள் கனடா/ இலண்டன் / அவுஸ்திரேலியா/ மலேசியா போன்ற நாடுகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன. சம வேளையில் ஐரோப்பிய நாடுகளிலும் தயாரிப்புகள் நடைபெறுகின்றன. ஐரோப்பியக் குறும் படங்களின் அலையொன்று 90 களில் எழுந்தது. பிரான்சை மையமாக வைத்தே அப்போக்கு செயல்பட்டது. ஊடகத்தின் சாத்தியம் கதைத்தேர்வு போன்றவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பொருட்டு கஜேந்திரன் போன்ற பத்திரிகையாளர்கள் விமர்சனத்தில் ஆர்வம் காட்டினர். கலை பண்பாட்டுக்கழகம் குறும்படப் போட்டிகளை நடாத்தியது. இக் குறும்படப்போட்டியில் கலந்துகொண்டவை அனைத்துமே ஐரோப்பிய நாடுகளில் உருவானவை. ஜேர்மன், பிரான்ஸ், சுவிற்சலாந்து போன்ற நாடுகளைப் போன்றவை. தொடர்ந்து குறும்படங்களைக் கவனித்து வந்திருப்பவர்கள் சில வளர்ச்சிகளை அவதானிக்கமுடியும். சினிமா பற்றிய ஆர்வம் மட்டுமே கொண்டவர்களால் ஆரம்பத்தில் புற்றீசல்போல் படங்கள் தயாரிக்கப்பட்டன. தொழில் நுட்பத்தில் மிகப் பெரிய பேரழிவுகளை இப் படங்கள் கொண்டு வந்ததால் படங்களின் தயாரிப்பு வீழ்ந்தது. கதைத்தேர்வு தொழில் நுட்பம் பற்றிய பிரக்ஞை அதிகரித்தது. அதை நெறிப்படுத்தும் பொருட்டு குறும்படப்போட்டி தோன்றியது. இதே காலகட்டத்தில் சில முக்கியமான திரைப்பட ஆளுமைகள் ஐரோப்பிய குறும்படச் சினிமாவில் தோன்றின. முகம், எச்சில்போர்வை போன்ற கதைத்தேர்வு தொழில் நுட்பத் தேர்ச்சிகொண்ட படங்களுடன் உருவாகின. இவ்வகையில் குறும்படங்களின் வளர்ச்சி என்பது அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டியிருக்கிறது.

**இவ்வகை புகலிட சினிமா பற்றிய காத்திரமான விமர்சனங்களின் மூலம், இதற்கு மாற்றான அசலான புகலிட சினிமா முயற்சிகள் மூலமே நிஜமான புகலிட சினிமா என்பது உருவாக முடியும்.**

புகலிட சினிமாவிலும் சில போக்குகளை நாம் அவதானிக்க முடியும்.

1. **தமிழக சினிமாவின் பாதிப்புக்குள்ளான புகலிட சினிமா.**
2. **அசலான புகலிட சினிமாவை தேடும் முயற்சிகொண்ட சினிமா.**

இதன்பொருட்டு ஐரோப்பிய நாடுகள் தவிரவும் பிற புகலிட நாட்டு சினிமாக்களை நாம் அவதானிக்க வேண்டும். மலேசியாவில் இருந்து வெளியான 'நான் ஒரு மலேசியன்' படத்தையும், கனடாவில் இருந்து தற்போது வெளியாகியிருக்கும் 'தமிழ் மகன்' படத்தையும் தமிழக சினிமாவின் தொடர்ச்சியாக புகலிட சினிமாவைக் காண்கிற வகைக்கு உதாரணமாகச் சொல்லலாம். முகம், எச்சில்போர்வை, நிழல்யுத்தம், முடிவல்ல, தாகம் போன்ற ஐரோப்பியப் படங்களை இரண்டாம் வகை அசல் புகலிட சினிமா வகைக்கு உதாரணமாகச் சொல்லலாம். நான் ஒரு மலேசியன், தமிழ் மகன் போன்றவை எம்.ஜி.ஆர், ரஜனி, விஜயகாந்த் பார்முலா வகை சினிமாவை அடியொற்றியவை. புகலிடத் தமிழ் மொழியைக் கூட இந்தப் படத்தின் கதாபாத்திரங்கள் பேசுவதில்லை. ஏற்கனவே ஆதிக்கம் கொண்டிருக்கும் வாழ்வு மறுத்த சினிமாவாக இருக்கிற இவ்வகை புகலிட சினிமா பற்றிய காத்திரமான விமர்சனங்களின் மூலம், இதற்கு மாற்றான அசலான புகலிட சினிமா முயற்சிகள் மூலமே நிஜமான புகலிட சினிமா என்பது உருவாக முடியும். புகலிட சினிமா என்பது எதிர்கால சந்ததியினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உள்ளடக்கியதாகவே அமையமுடியும். இத்தகையதான சூழலில்தான் தமிழ் குழந்தைகளின் மனோ வளர்ச்சியின் அக்கறைகொண்டு, குழந்தைகளுக்கு கல்வியூட்டல், கதையம்சத்தோடு அறிவுறுத்தல் என்னும் நோக்கத்தோடு மானவை. நித்தியானந்தனின் 'பாப்பா பாரதி' வீடியோக்கள் வெளியாகின்றன. இரண்டு தொகுதிகள் வெளியாகியிருக்கும் இம் முயற்சி மூன்றாவது தொகுதியையும் விரித்திருக்கிறது. மேற்கத்தேய நாடுகளில் குழந்தைகளுக்கான சினிமா என்பது ஒரு தனித்த வகையினமாக வளர்ந்திருக்கின்றது. பள்ளிக்கூடங்களில் கூட சினிமா தயாரிப்பு, இயக்கம் போன்றவைகளை குழந்தைகளுக்கு பாடமாகக் கற்பிக்கின்றார்கள். ஆகவே புகலிட தமிழ் சினிமா சார்ந்தவர்கள் இந்தப் பிரதேசத்திலும் அக்கறை கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. தான் ஏன் தொடர்ந்து தமிழ் சினிமாவுக்கு பாட்டெழுத வேண்டும் என்று காரணம் சொல்கிறார் வைரமுத்து. புகலிட நாடுகளில் தமிழ்க் குழந்தைகளுக்கு தமிழ் சினிமா மூலம்தான் தமிழ் கற்பிக்கிறார்கள். ஆகவே தமிழ்க் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிக்கவேண்டும் என்பதற்காக தான் தொடர்ந்து எழுதவேண்டும் என்கிறார். வேடிக்கையாக இருந்தாலும் அதுதான் உண்மை. ஆதிக்கக் கலாச்சாரம் தமிழ் சினிமா மூலம் தமிழ்க்குழந்தைகளுக்குச் சென்று சேர்கிறது. சமீப காலத்திய இன்னொரு போக்கையும் நாம் இங்கு கவனம்கொள்ள வேண்டும். தமிழ் சினிமா வியாபார ரீதியில் உலகமயமாகிவிட்டது. தமிழ்த் தொலைக் காட்சியும் உலக மயமாகிவிட்டது. தமிழ் கதாபாத்திரங்களும் உலக மயமாகி வருகிறார்கள். இதன் கலாச்சாரம் அர்த்தம் இது தான். உலக மயமாதல் செயல் போக்கினால் தமிழர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தமது பூகோளப்பரப்பையும் தனித்த பண்புகளையும், கலாச்சார அடிப்படைகளையும் இழந்து வருகிறார்கள். டயானா தமிழனின் காதல் தேவதையாகிறார். தமிழன் டயானாவுக்கு மகனாகிறான். தமிழ்ப் பாட்டி நியூயோர்க்கில் தெருவில் நடனமாடுகிறாள். ரம்பாவும் விஜய்யும் லண்டனின் புல்வெளிகளில் காதல் செய்கிறார்கள். இவையெல்லாம் கலாச்சாரக் குப்பைகள் (காதல் கவிதை, ஜீன்ஸ், என்றென்றும் காதல்) என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இம்மாதிரிப் படங்கள் அசலான மேற்கத்தியக் கலாச்சாரத்தின் ஆக்க அம்சங்களையும் சொல்வதில்லை, தமிழ்க் கலாச்சாரத்தின் பிரச்சினைகளையும் சொல்வதில்லை. தமிழ்க் கனவு இன்று உலகக் கனவாகி விட்டிருப்பது மட்டுமே வித்தியாசம். இத்தகையதொரு சூழலிருந்துதான் புகலிட தமிழ் சினிமா உருவாக வேண்டியிருக்கிறது.






இத்தகைய அகண்ட பின்னணியிலிருந்துதான் 1997-98 என இரண்டு ஆண்டுகளில் கலை பண்பாட்டுக்கழகம் நடத்திய குறும்படப் போட்டியில் பங்கு. பற்றிய 10 ஐரோப்பிய குறும்படங்கள் பற்றியும் பேசவேண்டியிருக்கிறது. பத்துப்படங்களில் ஆறு படங்கள் சுவிட்சர்லாந்திலிருந்தும், மூன்று படங்கள் பிரான்சிலிருந்தும் ஒரு படம் ஜேர்மனியில் இருந்தும் பங்குபற்றியிருக்கின்றன.

இந்தக் குறும்படங்களில் பட்டியலிடும் அளவு ஒரு படைப்பாளர் அணிவகுப்பே இருக்கிறது. கதை / இசை / கலை / காவியம் / ஒளிப்பதிவு / ஒலிப்பதிவு / நடிப்பு பேன்றவற்றில் பங்களிப்புச் செய்த சிறப்பான கலைஞர்கள் இவைகளில் பங்கு பெற்றிருக்கிறார்கள். இந்தக் குறும் படங்களின் சாதக/ பாதக அம்சங்களை மட்டுமே நான் அவதானிக்க நினைப்பதால், அடையாளப்படுத்துவதன்பொருட்டு இயக்குநர்களை மட்டுமே நான் இங்கு குறிப்பிட நேர்வதால், பங்களிப்புச் செய்த அனைத்துக் கலைஞர்களையும் நான் இங்கு தனித்தனியே கூறிவிடவில்லை. புகலிட சினிமா வரலாறு எழுத நேரும்போது இவர்களின் பங்களிப்பு நிச்சயம் பதியப்படும் அளவு ஆற்றலுள்ளவர்கள் இவர்களில் உண்டு என்று மட்டும் தற்பொழுது சொல்லிக்கொண்டு நகர்கிறேன்.



சுவிட்சர்லாந்திலிருந்து வந்த ஆறு படங்களில் மூன்று படங்களை ஜீவன் இயக்கியிருக்கிறார். எச்சில் போர்வை, நிழல்யுத்தம், யாத்திரை என்பன அப்படங்கள். ஜெகாதரன் தனியே நல்லதோர் வீணை செய்து படத்தை இயக்கியிருப்பதோடு, கஜேந்திரா சர்மா தேவன் போன்றவர்களோடு இணைந்து 'முடிவல்ல' படத்தை ஆக்கியிருக்கிறார். இன்னொருபடமான 'தாப்பு' படத்தை ச.ப. கிருஷ்ணன் இயக்கியிருக்கிறார்.

பிரான்சிலிருந்து மூன்று படங்கள் பங்குபற்றியிருக்கின்றன. றூபன் இயக்கிய தாகம், சுகந்தன் இயக்கிய எச்சரிக்கை, சுதன்ராஜா இயக்கிய அலைகள் போன்றன அந்த மூன்று படங்கள். ஜேர்மனியில் இருந்துவந்த ஒரே ஒரு படமான 'மீண்டும் வருவோம்' கதைப் படத்தை பால்ராஜா இயக்கியிருக்கிறார்.

இந்தப் பத்துப் படங்களும் தேர்ந்து கொண்ட கதைகள் அசலானவை. புகலிட வாழ்விற்கே உரியவை என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. ஆயினும் இக் கதைகள் புகலிட வாழ்வையும் பிரச்சினைகளையும் ஆழமாகவும் விரிவாகவும் சென்று பார்த்திருக்கிறதா என மாறுபாடு கொள்வதற்கான காரணங்களும் உண்டு. இங்கு பேசவிருக்கும் 10 குறும்படங்களும் இயங்கும் கதைத்தளம் என்னவாக இருக்கிறது?

புலம்பெயர்ந்து வந்த இடத்தில் நேரும் கலாச்சார அதிர்ச்சியும் தம்பதியர்களிடையில் ஏற்படும் புதிய மனோ அவஸ்தைகளும் எவ்வாறாய் அவசியமற்ற நிழல் யுத்தமாய் நீள்கிறது என்று சொல்கிறது ஜீவனின் நிழல்யுத்தம் குறும்படம். சுவிற்சர்லாந்தில் அகதி அந்தஸ்த்து மறுக்கப்பட்ட ஒருவன் நாடுகடத்தப்பட இருக்கிறான். சிங்களத் தமிழ் கலப்புத் திருமணம் பாதுகாப்பில்லா நிலையில் எரியுண்டுபோகிறது. அவனது சகோதரியின் குடும்பம் வந்த நாட்டிலும் இருக்க முடியாது, பிறந்த நாட்டிற்கும் திரும்பிப்போய் உயிர் வாழ முடியாது, தற்கொலையைத் தேர்ந்துகொள்கிற கதை நாயகன் பற்றிச் சொல்கிறது, ஜீவனின் பிறிதொரு படமான யாத்திரை, கேமசிறீ லியனகேவின் குறும்படம் ஒன்றின் அடிப்படையில் வளர்ந்திருக்கிற இப்படைப்பை லியனகே ஜீவன் கூட்டுப்படைப்பாகக் கொள்ள முடியும். எச்சில்போர்வை அகதிக் கலைஞனின் நிலையற்ற வாழ்வின் நிரந்தரப் பதட்டங்களைச் சொல்லும் படம். (இப்படம் பற்றின விரிவான எனது கட்டுரை ஏப்ரல் 9 —15 —16 —22 ஆகிய இரண்டு ஈழமுரசு இதழ்களில் வெளியாகியுள்ளன.) ஏஜெண்டுகள் பற்றியதும் எல்லை கடந்து ஐரோப்பிய நாடுகளுக்குள் நகரும் அகதிகள் பற்றியதுமான சோகச் சித்திரம் 'முடிவல்ல' படம். சிங்கள இராணுவத்தினரால் பாலியல் பாலாத்காரத்திற்கு உள்ளாகும் ஒரு பெண்ணின் மனப்போராட்டங்களை சித்தரிக்கும் கதை நல்லதோர் வீணை செய்து. ஜெகாதரன் கஜேந்திர சர்மா தேவன் போன்றவர்கள் உருவாக்கிய படங்கள் இவை. சீரழிந்து போகிற இளைஞர்கள் அரசியல் துரோகிகள் விமர்சனம் பற்றியது. பாலகிருஷ்ணனின் தாப்புப் படம். சீதனத்தோடு பெண் கிடைத்தும் மணம்முடிக்க முடியாது போகும் எயிட்ஸ் பற்றிக்கொண்ட இளைஞனைச் சித்தரிக்கிறது சுகந்தனின் எச்சரிக்கை. நாட்டின் துயரமான நினைவுகளால் துர்சொற்பனம் கண்டு, இனம்புரியாத கொலைக் கரமொன்று தன்னைத் துரத்துவதாய் நிலைகுலையும் புகலிட மனிதன் பற்றிய படமாக இருக்கிறது சுதன் ராஜாவின் அலைகள் படம். புலம் பெயர்ந்தவனுக்கு தனது நாட்டின் மீது, தனது மக்களின் மீது இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சியை சொந்த நாட்டு நிலைகளை ஒப்பிட்டு கவிதை வழி கதை சொல்கிறார் ரூபன்.

(தொடரும்)

**யமுனாராஜேந்திரன்**




# வணிகத்துறையில் அதிகரிக்கும் பெண்களின் ஆர்வம்

இன்று உலகின் வணிகத்துறையில் பெண்களின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. முன்பு இத்துறையில் அதிகளவில் ஆண்களே ஈடுபடலாம் என்ற நிலைப்பாடே இருந்தது. ஆனால் தற்போது ஏராளமான நிறுவனங்களும் தொழிற்சாலைகளும் பெண்களின் மேற்பார்வையாலேயே இயங்கிவரும் சூழ்நிலைகள் அதிகரித்துள்ளன.

துறையில் பெண்களின் தலையீடு அதிகரித்துக் காணப்படுகிறது. இதற்குதாரணமாக பிரிட்டனின் வர்த்தகத்துறையை நோக்கினால் நான்கு வருடங்களிற்கு முன் 100 பெண்கள் மட்டுமே பெரிய நிறுவனங்களின் இயக்குநர்களாக இருந்தார்கள். ஆனால் இன்று 200 பேருக்கும் அதிகமானோர் இவ் இயக்குநர் பதவியில்



THE MOST POWERFUL BUSINESSWOMEN

| IN ASIA | | IN EUROPE | |
|---|---|---|---|
| EIKO KONO<br>President | Recruit | SARI BALDAUF<br>President | Nokia Telecommunications |
| POTJAMAN SHINAWATRA<br>Co-founder | Shinawatra Group | ANA PATRICIA BOTIN<br>Chief Executive | Santander Bank |
| RINI SOEWANDI<br>Director | Astra International | JUNE DE MOLLER<br>Managing Director | Carlton Communications |
| CHIYONO TERADA<br>President | Art Corp. | KAREN DE SEGUNDO<br>Chief Executive | Shell Gas & Power |
| NINA WANG-KUNG<br>Chairman | Chinachem | CAROL GALLEY<br>Co-head | Merrill Lynch Mercury Asset Management |

'Fortune' பத்திரிகை வெளியிட்ட
வணிகத்துறையில் உயர்பதவி வகிக்கும் பெண்களின் பட்டியல்

'Fortune' என்ற பிரபல ஆங்கிலச் சஞ்சிகை, இது சம்பந்தமாக எடுத்த கணக்கெடுப்பின் பேரிலேயே இத் தகவலை வெளியிட்டுள்ளது. அதாவது பெண்கள் அதிகளவு அடக்குமுறைக்குள்ளாக்கப்படும் ஆசியப் பகுதிகளில் கூட இவ்வாறு வணிகத்துறையில் ஈடுபடும் பெண்களின் தொகை தற்போது அதிகரித்துவிட்டது. உதாரணமாக ஆசியப் பகுதிகளில் மட்டும் இன்று முன்னணியில் உள்ள ஐந்து பிரபலமான நிறுவனங்களில் பெண்களே தலைமைப் பீடத்தில் கடமையாற்றி வருகிறார்கள். அடுத்து ஐரோப்பிய நாடுகளை எடுத்துக்கொண்டாலும் கூட இங்கும் வணிகத்

மற்றும் வணிகத்துறை சம்பந்தமான உயர் பதவிகளில் இருக்கிறார்கள் என்று இப்பத்திரிகை கணக்கிட்டுள்ளது.

# புகலிட வாழ்க்கைத் துணைநலவம்

சாதாரணமாக எம் தாய் நாட்டில் உள்ள பெண்களைவிட இங்கு புலம்பெயர்ந்து வாழும் குடும்பப் பெண்கள் மத்தியில் பல புதிய பிரச்சினைகள் தோன்றுகின்றன. இங்கு நாம் இவர்களுக்குத் தோன்றும் பிரச்சினைகள் என்று குறிப்பிடுவது சாதாரணமாக நடைமுறை வாழ்க்கையில் குடும்பத்தில் தோன்றும் சிறிய பிரச்சினைகள் அல்ல, மாறாக கணவன் மனைவி உறவையே நிரந்தர பிரிவுக்குள்ளாக்கக்கூடிய உளவியல் ரீதியான பிரச்சினையைத்தான்.

அதாவது இங்கு வாழும் குடும்பப் பெண்களில் அநேகர் பெரும்பாலும் திருமணம் செய்வதற்காக என்றே எமது தாயகத்தில் இருந்து இங்கு வந்திருப்பவர்களாவர். இவர்களுக்கு பெரும்பாலுமே கணவன் தவிர பிற உறவுகள் இங்கு பெரிதாக இருப்பதில்லை. அவ்வாறே இருந்தாலும் அவ்வுறவுகளும்கூட இங்குள்ள வெளிநாட்டு வாழ்க்கைச் சூழ்நிலைக்கேற்ப இவர்களின் இன்ப துன்பங்களில் பங்குபற்ற முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். இதனால் அங்கிருந்து இங்குவந்து திருமணம் செய்துகொண்டுள்ள பெண்களுக்கோ பெரிதளவில் தம்மைச் சூழவுள்ள புதிதான தனிமையையும், பழக்கப்படாத வாழ்க்கைச் சூழ்நிலையையும் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கவேண்டிய நிலை இருக்கிறது.

இவற்றில் 'தனிமை' என்ற நிலை என்பது இவர்களைப் பொறுத்தவரை பெரியளவில் உளவியல் ரீதியிலாக பல பிரச்சினைகளை உண்டுபண்ணுகிறது. அதாவது திருமணத்திற்கு முந்திய நிலையில் எவ்வாறு பல உறவுகளாலும் அரவணைக்கப்பட்டு தம் குடும்பத்தில் மகிழ்ச்சிகரமாக இருந்தார்களோ அதே ஒரு நிலைமையை இங்கு எதிர்பார்க்குமிடத்து இவர்களுக்குக் கிடைப்பது ஏமாற்றம்தான். எனவே இவர்கள் தமக்குவேண்டிய முழு அன்பு ஆதரவு அனைத்தையுமே தம் கணவன்மாரிடத்தில் இருந்தே எதிர்நோக்குகிறார்கள்.

இதற்கு இங்குள்ள முழு கணவன்மார்களும் ஒத்திசைவாக அமைவதில்லை. அதற்குக் காரணம் சிலருக்கு இங்குள்ள அதிகூடிய வேலைப்பழுவும், குடும்பச்சுமைகளை தனித்து எதிர்கொள்ளவேண்டிய கட்டாயம் இருப்பதுமாகும். இவை தவிர்ந்த மற்றவர்களுக்கு தம் மனைவிமார்களுக்கு இவ்வாறான ஒரு தனிமையான நிலையை எதிர்கொள்ள முடியாத உளவியல் ரீதியான பிரச்சினைகள் தோன்றுகிறதா என்பதை புரிந்துகொள்ள முடியாமல் இருப்பது தான் காரணம். எனவே இத்தனிமை என்பது எவ்வாறு இவர்களைப் பாதிக்கிறதென்பதைப் பார்த்தால் இவர்கள் இங்கு வாழும் வெளிப்புறச் சூழ்நிலையோ புதிதாக இருக்கும். அத்தோடு தம் உறவுகளை சிறிது கால இடைவெளிக்குள்ளேயே பிரிந்திருப்பதால் அவர்கள் அனைவரிடத்தில் இருந்தும் தாம் அனுபவித்துக்கொண்ட அன்பு அரவணைப்புகளை முழுக்க முழுக்க இங்கு தம் கணவனிடத்தேயே எதிர்பார்ப்பார்கள். அவர்கள் எதிர்பார்ப்பது போல் தம் கணவர்கள் இருக்கவில்லை என்னுமிடத்து தம் கணவர்மார் வெளிப்புறச் சூழ்நிலையில் என்ன நிலைமைகளில் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள் என்றோ, அல்லது தம் தேவைகளை அவர்கள் புரிந்துகொள்ள இன்னும் சிறிது அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்றோ நினைப்பதில்லை. மாறாக, தம்மேல் இவர்கள் அன்பு காட்டவில்லையென்றே நினைத்துக் கொள்கிறார்கள். இதனால் தாம் திருமணப் பந்தத்தில் ஏமாற்றப்பட்டதாக ஒரு தவறான சிந்தனையை தமக்குள்ளே ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இவ்வாறு தவறான சிந்தனைகளை ஏற்படுத்துவது மட்டுமல்லாது தாமும் அவர்கள் மேல் அன்பு செலுத்துவது ஒரு தேவையற்ற விடயமாக எண்ணிக்கொண்டு தமக்கும் தம் கணவருக்குமிடையே தம்மை அறியாமலே ஒரு பாரிய இடைவெளியை உருவாக்கிக்கொள்ளத் தொடங்குகிறார்கள்.

எனவே இப் பெண்களின் இப்பிரச்சினையை கணவன்மார்கள் சரியான முறையில் புரிந்துகொள்ளாவிட்டால் பின் இவர்களுக்கிடையே நிரந்தரப் பிரிவே ஏற்படுகிறது. அல்லது வெளிச்சமுதாயத்திற்காக ஒரு போலியான குடும்ப வாழ்க்கையையே இவர்களுக்கிடையே நடைபெறுகிறது. ஆகவே இவ்வாறான மனநிலையுள்ள பெண்கள் சிறிது இது.விடயமாக ஆழமாகச் சிந்திக்கவேண்டும். ஏனெனில் உங்கள் தேவைகளை உங்கள் கணவர்மார் சரியான முறையில் புரிந்துகொள்ளும்படி மனம் விட்டு பேசவேண்டும். அல்லது உங்களிடம் அதிக நேரம் தனித்திருந்து அன்புகாட்ட முடியாதளவிற்கு உங்கள் கணவரை அழுத்தும் வெளிப்புற அல்லது குடும்பச் சுமைகளில் நீங்களும் பங்கெடுத்துக்கொள்ளும்போது இருவருக்குமிடையேயான இடைவெளி குறைந்து நெருக்கம் உருவாகும். அடுத்து அதிகவேலைச் சுமையால் பொருளாதாரத் தேடலால்தான் இவ்வாறான நிலைகள் இருக்கும் என்பது உங்களுக்குத் தெரிந்தால் அவ்விடயங்களிலும் உங்களின் ஒத்துழைப்பை வழங்கவேண்டும். அத்தோடு உங்களைச் சூழவுள்ள வெளிப்புறச் சூழ்நிலையையும் முழுவதுமாக நீங்கள் தெரிந்துகொண்டு உங்களை நீங்களே உறுதியான மனநிலையில் வைத்திருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இவர்கள் தவிர இவர்களின் கணவன்மார்களும் சற்று இதுவிடயமாக சிந்திக்க வேண்டும். அதாவது இங்கு வசித்து வந்த பெண்ணல்லாது வேறு இடத்தில் இருந்து புதிதாக இங்கு அழைத்துவந்து நீங்கள் மணம் முடித்தவராக இருந்தாலும்சரி அல்லது இங்கு ஏற்கனவே வசித்து வந்த பெண்களாக இருந்தாலும் சரி அவர்கள் தம் குடும்பத்தவர்களிடத்திலிருந்து அனுபவித்த அன்பு அரவணைப்புகளை உங்களிடத்தேயிருந்தே எதிர்பார்ப்பார்கள். ஏனெனில் இங்கு அவர்களைச் சார்ந்த உறவுகளின் ஆதரவு என்பது திருமணத்திற்குப் பின் பெரிதளவில் கிடைக்காது. காரணம் இங்குள்ள வெளிநாட்டு வாழ்க்கைமுறை எல்லோரையுமே சுயநலமாக வாழவே கட்டாயப்படுத்தியுள்ள ஒரு சூழ்நிலை இருக்கிறது.

எனவே உங்கள் மனைவியை உங்கள் குடும்பத்தின் சுமைதாங்கியாக நோக்காது உங்கள் வாழ்கையுடன் இணைந்துகொள்ள வந்திருக்கும் ஒரு வாழ்க்கைத் துணைதான் என்பதை புரிந்துணர்வுடன் விளங்கிக்கொள்ள வேண்டும்.

# மறைந்த ஹிரோஹிடோவின் மகள் என தன்னை அறிமுகப்படுத்திய இகேதா!

மேற்கு ஜப்பான் பகுதியில் உள்ள அகிகோ இகேதா என்ற 59 வயதுப் பெண் காலஞ்சென்ற பேரரசர் ஹிரோஹிடோவின் மகள் என்று தன்னை இப்போது அங்கு அறிமுகம் செய்துள்ளார். இவ்வாறு அறிமுகம் செய்தது மட்டுமல்லாது, அங்குள்ள பெண்மணியொருவரிடம் தான் மறைந்த பேரரசருக்கு முறை தவறி பிறந்த பெண்ணெனவும் தனக்குவெகு விரைவில் அவ் அரசரின் சொத்துக்களில் இருந்து, பெருந்தொகைப் பணம் வரவுள்ளது என்றும் கூறி அங்குள்ள பல்கலைக்கழகம் ஒன்றிற்கு நன்கொடை கொடுக்கவென பெருந்தொகையான பணத்தையும் தனக்குக் கடனாகத் தரும்படியும் கேட்டுள்ளாராம் என்று தற்போது பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஆனால் தற்போது இவரிடம் பொலிசார் மேற்கொண்ட விசாரணையின்போது மேற்சொன்ன இவையாவும் தன் மீது சுமத்தப்பட்ட ஒரு தவறான செய்தி என்று இகேதா தெரிவித்துள்ளார்.

# குதிக்கால் வலியுள்ள பெண்களின் கவனத்திற்கு

இவ்வாறு மேற்சொன்ன குதிக்கால் வலி உள்ளவர்கள் முதலில் அதிக உயரமுள்ள- காலணிகளைப் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும். அடுத்து மிருதுவான உட்பகுதியைக்கொண்ட பாத அணிகளையே தெரிவு செய்ய வேண்டும். அத்தோடு இத்தகைய வலி உள்ளவர்கள் கூடியளவு உடற்பருமன் உள்ளவர்களாக இருந்தால் எடையைக் குறைக்கமுயல வேண்டும். மற்றும் நீரிழிவு நோய் இருக்கிறதா என வைத்தியரிடம் சென்று பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

மேலும் இவ்வாறான வலி தோன்றும் பொழுது கால்கள் இரண்டையும் முதலில் சற்று சூடான வென்னீருக்குள் வைத்திருந்துவிட்டு பின் சாதாரண நிலையில் உள்ள நீருக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு மாற்றி மாற்றி 30 நிமிடங்கள் தொடர்ந்து செய்தால் வலி கூடியளவிற்குக் குறைந்துவிடும். இதையும் மீறி கூடுதலாக இருக்குமிடத்து வைத்திய ஆலோசனையின் பேரில் ஊசி மூலம் மருந்து செலுத்தியோ, அல்லது தேவையேற்படின் சத்திரசிகிச்சையோ செய்துகொள்ளலாம்.

பிரித்தானியாவில் ஆரம்பமாகிவிட்டது

# GNANAM Telecom Centers




| | | |
|---|---|---|
| *சிறீலங்கா | - 1min - | 0.35p |
| *இந்தியா | - 1min - | 0.30p |
| கனடா | - 1min - | 0.05p |
| அமெரிக்கா | - 1min - | 0.05p |
| ஜேர்மனி | - 1min - | 6p |
| பிரான்ஸ் | - 1min - | 0.06p |

| | | |
|---|---|---|
| லண்டன் Mobile | - 1min- | 0.15p |
| லண்டன் National | - 1min- | 0.03p |
| அவுஸ்திரேலியா | - 1min- | 0.08p |
| சிங்கப்பூர் | - 1min- | 0.20p |
| சுவிற்சர்லாந்து | - 1min- | 0.08p |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

## GNANAM Telecom Centers

180 High Street North,
East Ham, London E6, U.K.
Tel: 0181-4708844 Fax: 0181-4708777

* இரவு 6 மணி முதல் காலை 7 மணி வரை

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சக்ல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.


ஈழமுரசு நடாத்தும்

# இசை முரசு 99

## சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

**போட்டிக்கான விண்ணப்ப முடிவுநாள் 02.03.1999**

### விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர்: ..........
2. பிறந்த நாள்: ..........
3. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர்: ..........
4. முகவரி (பிரஞ்சு மொழியில்): ..........
..........
5. தொலைபேசி எண்: ..........
6. பங்குபற்றும் போட்டி: **தனிக்குரல் பாடற்போட்டி / இணைகுரல் பாடற்போட்டி**
7. தனிக்குரல் பாடற்போட்டியாயின்
   I பங்குபற்றும் பிரிவு: **மேற்பிரிவு / கீழ்ப்பிரிவு**
   II பாடவிரும்பும் பாடலின்பெயர்: 1 ..........
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..........
   ..........
   III பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ..........
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..........
   ..........
8. இணைகுரல் போட்டியாயின்,
   I இணைந்து பாடுபவர் பெயர்: ..........
   முகவரி: ..........
   II பாடவிரும்பும் பாடலின் பெயர்: 1 ..........
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..........
   ..........
   III பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ..........
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர் ..........
   ..........

*நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் அதனை முழுமனதுடன் ஏற்பேன் என்றும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.*

பாதுகாவலரின் ஒப்பம் விண்ணப்பதாரரின் ஒப்பம்

### பங்குபற்றுவோருக்கான விதிகள்:

1. இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப்பாடல் தொகுப்புக்களில் இருந்து மாத்திரமே போட்டிக்கான பாடல் தெரிவு செய்யப்பட வேண்டும்.
2. போட்டியாளரின் தெரிவுக்காக இரண்டு பாடல்கள் அனு மதிக்கப்படும்.
3. இணைகுரல்பாடற்போட்டி, தனிக்குரல்பாடற்போட்டி என இருவகைப் போட்டிகள் நடாத்தப்படும்.
4. தனிக்குரல் பாடல்போட்டி, 14 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு எனவும், 14 வயதிற்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு எனவும் இரு பிரிவுகளாக பிரித்து நடாத்தப்படும்.
   **மேற்பிரிவு: 31.05.85 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.**
   **கீழ்ப்பிரிவு: 01.06.85 அன்றும் அதற்கு பின்னரும் பிறந்தவர்கள்.**
5. இணைகுரல் பாடற்போட்டிக்கு வயதெல்லை இல்லை. தெரிவு செய்யும் பாடல் இணைகுரல் பாடல்களாக இருத்தல் வேண்டும்.
6. முதற்சுற்றுப்போட்டியில் தெரிவான பாடகர்கள் இறுதிப் போட்டிக்கு அழைக்கப் படுவர்.
7. இறுதிச் சுற்றின்போது, மேற்பிரிவிலும், கீழ்ப்பிரிவிலும், 1ம், 2ம், 3ம் இடத்திற்குரியோரும், இணைகுரல் போட்டியில் சிறந்த ஒரு இணையும் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.
8. மேற்பிரிவு முதலாம் இடத்தைப் பெறுபவர் சிறந்த பாடகராக தெரிவு செய்யப்பட்டு 'இசை முரசு 99' இற்கான விருது வழங்கி சிறப்பிக்கப்படுவார்.
9. விண்ணப்பக் கட்டணமாக 100FF செலுத்தப்பட வேண்டும்.
10. விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி: 28.02.99
11. விண்ணப்பம் செய்ய வேண்டிய முகவரி:
    கடித உறையின் மேல்மூலையில் 'ISAI MURASU 99' எனக் குறிப்பிடவும்.

EELAMURASU - 22 Rue Perdonnet, 75010 Paris.
Tel: 01 40 37 63 63 Fax: 01 40 37 64 64

# கலைந்த சொற்கள் எண்: 24

கீழ் உள்ளவற்றில் 115 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர்கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச் சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். இச் சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ப | ந | ம் | க | ண் | ம | ணி | ம | ம் | ம் | ப | ம் | கு | இ |
| ண் | ச | ர | ர | ய | வ | ன் | ஆ | ம | ய | க | க | க | ல் | த |
| ணா | ப் | ம் | பு | ல் | வ | ள | ம் | வி | ள | க் | கு | த | ல் | ம் |
| ள | பு | பு | ரி | ய | ரு | சி | ம் | க | ள | க | கு | ங் | வ | த |
| ர் | வ | ய | தி | பு | ட | ப | ல | இ | ச | க் | ம் | த | ளி | வா |
| ல் | த | பு | ம் | ந | ம் | ப | ல் | ம் | ஆ | க் | க | ம் | ல் | ப |
| ம் | க | ர | ன | க | வ | ல | து | த | பி | து | ல | ம் | க | ம் |
| ல் | ந | ஆ | வ | ர | க | ம் | வ | று | த் | த | ல் | ம் | ண | க |
| ப | னை | ச | ம் | ம் | ன | ன் | பி | ரு | ளி | கை | எ | ர | க் | ன |
| வி | ம் | ச | ம் | தி | ய | க | கு | ந | ப | மு | ப | பா | கு | ம் |
| ம் | ம் | ள | வா | டி | க | ளை | ள் | பி | ம் | ஆ | ஆ | ட | ர | கு |
| வ | வ | ப | த | ங் | வ | ழ் | பா | பு | க | பி | க | கி | க் | ம் |
| ப | ரு | வ | ம் | த | க | ல் | த | த் | ரி | ச | க் | ம | க | ப |
| ம் | பு | ல | மை | த | ல் | ல் | க | ல் | ந | உ | க | கை | ன் | ம் |
| ச | ல் | த | த் | ழ் | வி | அ | ர் | ன் | ல் | ப | ம் | சா | ட | சி |
| சி | ட | த | மி | ழ | ன் | த் | ன் | வ | ள் | க | ந் | ப | ன் | மு |
| ம் | ம் | த | த் | மி | நி | தா | த | ல | ல | தி | ம் | ன | ன் | சி |
| ம | வ | மா | ம் | ளை | டு | ன் | டு | ல் | பு | பு | வ | ன | ன | து |
| ம் | ம் | ன | ச | ன | இ | ட் | அ | ந | ப் | ன் | ம் | ன | ன் | அ |
| து | வ | ள | ல் | ன | க | க | ப | னை | ளை | ம் | ச | ச் | ம | க |
| து | ன் | ப | ம் | ப | ம் | வி | நி | த | க | ர | ம் | ப | ன் | இ |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதவன் | விளக்கம் | புதல்வி | நம்பல் | புதியவர் | இளைத்தல் | பருவம் | பாதகர் | தடியன் |
| நிமித்தம் | வருடம் | கம்பளி | தமிழன் | நம்பிக்கை | சின்னம் | சாம்பல் | வம்சம் | உக்கிரம் |
| கும்பம் | பகைத்தல் | குருத்து | தவம் | ஆக்கம் | இளக்கம் | சரித்தல் | நகரம் | தவித்தல் |
| கடிவாளம் | புலமை | நம்புதல் | புதியவன் | சிம்மாசனம் | கணக்கு | கனரகம் | நல்லவன் | விம்பம் |
| புலன் | முன்னம் | மன்னன் | நினைப்பு | கவளம் | கண்மணி | பளிங்கு | துவளல் | பாடகி |
| மச்சம் | பட்டு | பாரம் | வறுத்தல் | எழும்புதல் | கக்கம் | வலம்புரி | தமிழ் | திரிபுரம் |
| பவளம் | அத்தான் | இனசனம் | சிம்மம் | துன்பம் | கன்னம் | அன்னம் | களைப்பு | பசப்பு |
| நரம்பு | கனம் | அகம் | தவளை | படம் | ஆபரணம் | வாசனை | திகழ்தல் | ஆக்குதல் |
| கம்பம் | வலது | மயக்குதல் | தத்தம் | புருவம் | வாங்கல் | இனம் | புலவர் | கள்வன் |
| தடம் | கரம்பு | பின்னம் | சின்னவன் | இன்பம் | சாந்தி | குரக்கன் | மக்கு | இதம் |
| கவசம் | சம்பவம் | பகட்டு | தகரம் | கயல் | கசம் | எல்லகம் | களகம் | சில்லம் |
| துவனம் | துல்லம் | ஆவரகம் | அல்லகம் | சிலம்பி | ஆகமன் | நல்கல் | பாளையம் | தளம் |
| கமம் | வளம் | பகல் | விளக்குதல் | கண்ணாளர் | அவிழ்த்தல் | கம்பவாதம் | ஆம்பிள்ளை | |

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

பிறந்த நாள்: ..............................

சந்தாதாரராயின் சந்தா எண்: ..........


கலைந்த சொற்கள் எண்–24 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 12.02.1999

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet, 75010
Paris, France.

# கலைந்த சொற்கள் எண் - 23 விடைகள்



ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு 220 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.
அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.

1) சுபாஜினி குலசேகரம்
6900 Lugano,
Swiss.
2) ஸ்ரீ. லிவிங்ஸ்ரன்
77340 Pontaultcombault.
France.
3) சுஜீவா துரைராஜா
3628 Uttigen,
Swiss.
4) T. ஜெயலட்சுமி
0959 Oslo - 9,
Norway.
5) ராஜினி நாகராஜா
21629 Neuwulmstorf,
Germany.

இவர்களுக்கு
**Lune International Paris**
நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-24 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-25ம், 18 - 24 பெப்ரவரி 99 ஈழமுரசில் வெளிவரும்.

**தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா**

10வது ஆண்டில் காலடிபதிக்கும்
இமாலயாவின்
தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்
100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே
உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....
கடுகதி பார்சல் சேவை
❀ பிரியாணி ❀ கொத்துறொட்டி ❀ இடியப்பப்பிரியாணி ❀ தண்டூரி வகைகள் ❀ நாண் ❀ சீஸ்நாண் ❀ சப்பாத்தி ❀ சமுசா ❀ றோள்ஸ் ❀ சோறு - கறி
இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51
றெஸ்ரோறன் இமாலயா
9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)
Pub

சாந்தினி உணவகம்
14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
Tel: 01 42 09 37 99
காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை
உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு
காலை: இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
இரவு: நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு
மகிழ்ந்திட நாடவேண்டியது
சாந்தினி உணவகம்
Pub

# மக்களின் தேவையில் கணினியின் சேவை

கணினிப்பாவனை இன்றைய மனித வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து வளர்ந்து வருவதை அதன்பயன்பாடும் தேவையும் நன்கு உணர்த்தி நிற்கின்றது. இதன் வளர்ச்சி வேகத்தையும், மக்களின் தேவையையும், சென்றாண்டின் கணினிவிற்பனை உணர்த்தி நிற்கிறது. சென்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரக் கணக்கெடுப்பின்படி பிரான்சியக் குடும்பங்களின் மொத்தத்தொகையில் 23%மான குடும்பங்கள் தமது சொந்தத் தேவைக்கென கணினிகளைக் கொண்டுள்ளனர். இத்தொகையானது அயல் நாடுகளான ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் 97-ம் ஆண்டில் குறைவாக இருந்த பாவனை, சென்றாண்டில் சமநிலையை அடைந்துள்ளது. சென்றாண்டில் மட்டும் பத்து லட்சம் கணினிகள் விற்பனையாக்கப்பட்டுள்ளன என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்விற்பனையாவது கணினிச் சந்தையின் போட்டியால் ஏற்பட்ட கணினி விலை வீட்சியால் ஏற்பட்டதெனக் கூறப்பட்டாலும், கணினிப் பாவனையின் முக்கியத்துவமும், அதன் தேவையும் வேறுஇரு காரணங்களெனக் கூறலாம். வளர்ந்து செல்லும் இக் கணினிப்பாவனையானது 2001-ம் ஆண்டில் பிரான்சியக் குடும்பங்களின் மொத்தத் தொகையில் 33%மான குடும்பங்களை கணினியின் சொந்தக்காரர்களாக்கும் என வேறோர் கணிப்பீடு கணித்துள்ளது. இவ் எதிர்பார்ப்பானது, எதிர்காலத்தில் கணினிப் பாவ்னையானது எவ்வளவு முக்கியத்துவம் பெறப்போகிறது என்பதையும், இதுபற்றியே சிந்திக்காமல் இருப்போரின் நிலையை எச்சரிப்பதாகவும் உள்ளது.



கணினியின் பயன்பாடு பல துறைகளையும் இணைத்து வளர்ச்சிகண்டு வருவதால் அதன்தேவை எல்லா வயதினருக்குமா்னதாக உருவாகியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கணினித்துறையுடன் இணைந்து பல துறைகளில் முன்னேற்றம் கண்டு வரும் கணினியியக்கத் தரவுகள், தொழில்நுட்பங்கள், வெவ்வேறு துறைகளைச் சாந்தோர்க்கு ஏற்றாற்போல் வளர்ச்சிகண்டு வருகின்றது. இவற்றின் பயன்பாடுகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் எமக்கு, கணினிக்கும் அதன் இயக்கத் தரவுகளுக்குமிடையில் எவ்வாறு தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும். எனவே கணினியைக் கற்றுக்கொள்வதன் மூலமே அதன் பயன்பாடுகள் எம்மை வந்தடையக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டாகும். எனவே கணினியைக் கற்கவேண்டிய அவசியமும் தேவையும் உருவாகியுள்ள இக் காலகட்டத்தில், தமிழர்கள் கணினிக் கல்வியில் கவனம் செலுத்தல் புலம்பெயர்வாழ்வின் முன்னேற்றத்துக்கும், எமக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதற்கும் அவசியமாகின்றது.

கணினியைக் கற்பதற்கு எம்மவர்க்கு சாதகமான நிலைமைகள் நிறையவுண்டு. கணினிக் கல்வியை மொழிப்பிரச்சினையின்றி தமிழில் கற்றுக்கொடுக்கும் தமிழ்ப் பாடசாலைகள் இருப்பதும், விடுமுறைநாட்களில் வேறுபட்ட நேரங்களில் வகுப்புகள் நடைபெறுதலும் கணினியைக் கற்கவிரும்புவோர்க்கு சில சாதகநிலைகளாகும். இவ்வாறான சாதகநிலைமைகளை எல்லாவயதிலுமுள்ள தமிழர்கள் பயன்படுத்துதல் எதிர்காலத்தில் பெரும்பயனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## வேலைவாய்ப்பு

ஏற்கனவே இலங்கையில் கணினியைக் கற்றுக்கொண்ட சிலரும், இங்குவந்தபின் கற்றுக்கொண்ட சிலரும் ஓரளவு பிரெஞ்சு மொழியறிவுடன் கணினி சம்பந்தமான வேலைவாய்ப்புக்களைப் பெற்று வேலைசெய்து வருகின்றனர். அவ்வாறு பெரிதாகக் கற்றுத்தெளிய முடியாதவர்கள் கணினி கல்வியுடன் சில தொழிற் கல்விகளைத் தெரிவு செய்து கற்கச் செல்கையில் எமக்குள்ள கணினி சம்பந்தமான அறிவும், சான்றிதழும் எமக்கு அங்கு முன்னுரிமை பெற்றுத்தரும். (உ+ம்: Magasinier, Polyvalent போன்ற தொழில் கல்விகளாகும்.)

## கல்வி - அறிவு

கல்வி எனும்போது பிரான்சியப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பிலிருந்து உயர் வகுப்புகள் வரை கல்வி கற்றுவரும் அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் பயிலும் பாடத்திட்டத்திற்கமைய அவர்களின் கல்வி வளர்ச்சிக்குதவும் ஏராளமான Cédérom கள் வெளியாகி சந்தைப்படுத்தப்பட்டுள்ளன. இதை மொழிப்பிரச்சினை காரணமாக தங்கள் பிள்ளைகளுக்கு கல்வியில் உதவிபுரிய முடியவில்லையே என தவிக்கும் பெற்றோர்கள் வாங்கிக்கொடுப்பதன் மூலம் அக் குறையை நிவர்த்தி செய்யலாம்.

இச் Cédérom கள், கல்வி கற்பதில் நாட்டம் குறைந்த் பிள்ளைகளைக்கூட கவர்ந்திழுக்கும் தன்மையை தம்மகத்தே கொண்டுள்ளன. விளையாட்டாக அவர்கள் பொழுதைப் போக்கும் பாவனையில் அமைந்த இவை அவர்களை அறியாமலே பாடத்திட்டங்களை மனதில் ஆழமாகப் பதிக்கும் தன்மையைக் கொண்டுள்ளன. அத்துடன் பெரிய தொகையான விடயங்களை ஒரு சிறுதட்டில் பதியப்பட்டுள்ளமை அதன் விலைக்கப்பாற்பட்ட பெறுமதியை எமக்களிக்கிறது. உதாரணமாக Qdivou, Qdi (Cédérom) இவை இரண்டும் நான்கு வயதிலிருந்து 3-ம் தரம்வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு பிரெஞ்சு, கணிதம், ஆங்கிலம், புவியியல் ஆகிய பாடங்களுக்கு உதவி புரிகின்றது. இதில் 150 பயிற்சிகளும், 3000 வினாக்களும் வேறுபட்ட அறிவியல் சம்பந்தமான விடயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரெஞ்சு மொழியை வாசிக்கத்தெரிந்த அனைவருக்கும் உதவக்கூடியதாக சகலகலாநூலென அழைக்கப்படும் (Encyclopédie) நூல்கள் பல Cédérom களில் வெளிவந்துள்ளன எனினும் Encyclopédie Hachette multimédia 99: Encyclopédie encarta 99 ஆகிய இரண்டும் ஒரு குடும்பத்தின் பாவனைக்கு மிக உகந்ததென கணிப்பிடப்பட்டுள்ளது. இதில் முதலாவதாக உள்ளதில் 20 பாகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் 150,000 விடயங்களும், விளக்கங்களும் 6000 புகைப்படங்களும் அவைக்கான விளக்கங்களும், 200 ஒலியுடனான விடயங்களும் புவியியல் வரைபடங்களும், வரலாறுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

## பயன்பாட்டுடனான பொழுதுபோக்கு

கடிதங்கள் எழுதுதல், கடிதங்கள் கட்டுரைகள் எழுதிப்பாதுகாத்தல், சிறு கைநூல்கள் உருவாக்குதல், சிறு விளம்பரங்கள் அடித்தல், சிறு துண்டுப்பிரசுரங்கள் அடித்தல், அழைப்பிதழ்கள் உருவாக்குதல், வாழ்த்துமடல்கள் அடித்தல் புகைப்படங்களை

**இச் Cédérom கள், கல்வி கற்பதில் நாட்டம் குறைந்த பிள்ளைகளைக்கூட கவர்ந்திழுக்கும் தன்மையை தம்மகத்தே கொண்டுள்ளன. விளையாட்டாக அவர்கள் பொழுதைப் போக்கும் பாவனையில் அமைந்த இவை அவர்களை அறியாமலே பாடத்திட்டங்களை மனதில் ஆழமாகப் பதிக்கும் தன்மையைக் கொண்டுள்ளன.**

CD யில் அல்லது Disqutte இல் பதிவு செய்து பாதுகாத்தல், புகைப்படங்களை எமது விருப்பப்படி மாற்றி அமைத்தல் அவற்றைத் திருத்தி அமைத்தல், சித்திரம் கீறுதல் வீட்டுக் கணக்குகள் எழுதுதல், வீட்டிலுள்ளவர்கள் சம்பந்தமான விபரங்கள், தொலைபேசி இலக்கங்கள், முகவரிகள் பதிந்துவைத்தல், இவற்றுடன் வேறுபட்ட விலையுயர்ந்த Cédérom களைப் பாவித்து Video க்களில் எடுக்கும் நிகழ்ச்சிகளை, சிறிய சினிமாப்படங்கள் போன்ற அமைப்பில் மெருகுபடுத்தலாம். அத்துடன் தனிப்பாடல்களையோ, சினிமாப்பாடல்களையோ எமது கற்பனைப்படி இசையமைத்து CD யில் பதிந்து கேட்டுமகிழலாம். இவ்வாறான பல்வேறுபட்ட துறைகளில் ஈடுபாடுள்ள அனைவருக்குமான பயன்பாட்டுப் பொழுதுபோக்குகள் கணினியுடன் இணைந்து வளர்ச்சிகண்டு வருகிறது.


விளையாட்டுகள், விளையாட்டுக்களுக்கான பெருந்தொகை Cédérom கள் வெளியாகியுள்ளன. எ்னினும் எல்லா விளையாட்டுக்களும் பயனற்றவை எனக்கூறிவிட முடியாது. காரணம் சில விளையாட்டுக்கள் மூளைக்கு சிறந்த பயிற்சி அளிப்பனவாகவும், மூளை வேலை செய்யும் வேகத்தைக் கூட்டும் பயிற்சியைக் கொண்டனவாகவுமுள்ளன. சந்தோசமாக பொழுதைக்கழிக்க உதவும் இவை மனதுக்கு இதமான இன்பமளிக்கும் வல்லமை கொண்டவையாகும். சகலவயதினருக்குமென இவற்றில் வெவ்வேறுவிளையாட்டுக்கள் உருவாக்கப்பட்டிருப்பினும் சில விளையாட்டுக்கள் எல்லாவயதினருக்கும் ஏற்றாற்போல் உருவாக்கப்பட்டுள்ளன. கணினியுடன் போட்டி போட்டுக்கொண்டு விளையாடும் விளையாட்டுக்கள் பிரமிப்பை ஏற்படுத்துவனவாகவுள்ளன.

## வலைப்பின்னல் (Internet) தொடர்புகள்:

இது உலகின் எல்லாப்பாகங்களையும் எமது கணினியுடன் இணைத்து செயற்படும் திறன் கொண்டது. இச்சேவையானது மனிதனின் அன்றாட வாழ்க்கையுடன் இணைந்து வளர்ந்து வருகிறது. இதன்மூலம் உலகின் பிரதான பத்திரிகைகளுடன் தொடர்புகொண்டு அன்றாடச் செய்திகளை அவைநடைபெற்ற சிறிது நேரத்திலேயே பெற்றுக் கொள்ளலாம். இச் சேவையானது வர்த்தகர்களுக்கும், பாவனையாளருக்கும் பெரும்பயனளித்து வருகிறது. உலகின் எந்த மூலையிலோ இருக்கின்ற ஒரு வர்த்தகர் தனது பொருட்களை இச் சேவைமூலம் விளம்பரம் செய்கிறார். அப்பொருட்களை வாங்கநினைக்கும் ஒருவர் உலகின் எந்த மூலையில் அது மலிவாகவுள்ளதோ அங்கே வங்கியட்டை மூலம் அதைவாங்குகிறார். தபால் மூலம் அனுப்பப்படும்போது குறைந்த தொகைப் பொருட்களுக்கு சுங்கவரிவிலக்குண்டு. உ+ம் : உலகின் பிரபலமான பாடல்களடங்கிய இசை. CD க்களை மூன்றுக்குக் குறைவான தொகையில் அமெரிக்காவிலிருந்து சுங்கவரியின்றி மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இவற்றைவிட பங்குச் சந்தையுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி ஒவ்வொருநாட்டினதும் பொருளாதார நிலைமைகளை நாடிபிடித்துப் பார்த்து நிலைமைக்கேற்ப பங்குகளை வாங்கலாம், விற்கலாம். அத்துடன் உலகின் பிரதான நூலகங்களுடன் தொடர்புகொண்டு நூல்கள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளலாம். இதனூடாக தொலைநகல்கள் அனுப்புதல், வேறுநாட்டுடனான தொலைபேசி தொடர்புகளை குறைந்த செலவில் ஏற்படுத்தல், பிரான்சிலுள்ள தனியாரின் அல்லது நிறுவனங்களின் முகவரி, தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றைத் தேடுதல், தேவையான மதிய, இரவு உணவுவகைகளைத் தெரிவுசெய்து வீட்டுக்கு வரவழைத்தல், மலர்க்கொத்து வரவழைத்தல், அனுப்புவித்தல், தொடருந்துக்கான பிரயாண இருக்கைகளைப் பதிவு செய்தல், நேர அட்டவணை பார்த்தல் போன்ற நடவடிக்கைகளை சிரமமின்றி மேற்கொள்ளலாம்.

அத்துடன் விமான பிரயாண சிட்டுக்களை எமது விருப்பப்படி மலிவாக, அலைச்சலின்றி, வங்கி அட்டைமூலம் வாங்கலாம். உ+ம்: அதாவது எழுபதுக்கும் மேற்பட்ட விமான நிறுவனங்கள் மேற்கொள்ளவுள்ள உலக நாடுகளுக்கிடையிலான போக்குவரத்து சேவைகளையும் அச் சேவைகளுக்கான பிரயாணச் சீட்டு விலைகளையும், பிரயாணமாகப்போகும் திகதி, நேரங்களையும் La compagnie des voyagest. (Travel Information System) எனும் வலைத்தொடர்பு நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். நாம் ஒரு சீட்டை வாங்க வேண்டுமெனில், வங்கியட்டை மூலம் எட்டு நாட்களுக்கு முன்பே பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம். இதைவிட குறிப்பிட்ட திகதி நேரத்தில் குறிப்பிட்ட நகரத்துக்கு செல்லவுள்ள விமானங்களின் விற்கப்படாத விமானச் சீட்டுக்களை விமானம் புறப்படவுள்ள சிலநாட்களுக்கு முன்பு பிரான்சின் ஒரு முகவர் நிலையம் ஏலத்தில் விற்கும் நடவடிக்கையை இச்சேவை மூலம் மேற்கொள்ளுகிறது. இதன்படி Paris இலிருந்து Portoவுக்கு போய் வருவதற்கான பிரயாணச்சீட்டு 180Fr க்கும், Toulose-Pont-a-Pitre க்கானது (போய்—வர) 680Fr க்கும் விற்கப்பட்டது.



இவ்வாறான அதிசயங்களை நடாத்தும் வலைத்தொடர்பானது விரைவில் தொலைக்காட்சிப் பெட்டியின் மூலமும் இயக்கப்படவுள்ளது என்பது இச் சேவையின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கிறது. எனினும் கணினிமூலம் இச்சேவை இயக்கப்படுவதன் மூலமே பாவனையாளர்களால் உச்சப்பயனை அடையமுடியும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறான பயன்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படும் கணினியை யாவரும் பயன்படுத்தி நற்பயனடைவது சாலச் சிறந்ததாகும். எனவே கணினியை படிக்கச்சந்தர்ப்பமுள்ள அனைவரும் அதைக் கற்க வேண்டியது நாளையதேவைக்கான இன்றைய நடவடிக்கையாகும்.

- இராசி


# தமிழ் இளைஞர்களை வீறுகொண்டெழவைத்த தமிழாராய்ச்சி மாநாடு

(சென்றவாரத் தொடர்ச்சி)

மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் படிப்பதற்காக வருகை புரிந்த அயல்நாட்டு ஆய்வாளர் சிலர் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் வைத்தே அவரவர் நாடுகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர். அவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்கள் தத்தமது நாடுகளில் வைத்து சர்வதேச தொடர்பு ஊடகங்களுக்கு அளித்த பேட்டிகள் மாநாட்டு நிர்வாகிகளுக்கும் பலத்த பிரசாரமாகவும், அரசுக்கோ பெரும் தலைக்குனிவாகவும் அமைந்துவிட்டது.

எனவே, விருப்பமின்றி மாநாடு ஆரம்பமாவதற்கு மூன்றே மூன்று நாட்கள் எஞ்சியிருந்த வேளையிலேயே மாநாட்டை நடத்துவதற்கான அனுமதி மாநாட்டு நிர்வாகிகளுக்குக் கிடைத்திருந்தது. அரசு அனுமதி கிடைத்ததும், மாநாட்டு உபயோகத்திற்கு முன்னர் அனுமதி மறுக்கப்பட்ட வீரசிங்கம் மண்டபமும், யாழ். திறந்த வெளியரங்கும் மாநாட்டு நிர்வாகிகளுக்கு, பின்னர் வழங்கப்பட்டன.

பிரான்சில் நடைபெற்ற மூன்றாம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடும் முன்னைய இரு மாநாடுகளையும்போன்று அந்நாட்டு ராஜாங்கத் தலைவரினால் திறந்து வைக்கப்படாது, பாரிஸ் நகரைத் தலைமையகமாகக் கொண்ட யுனெஸ்கோ நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஆதிசேஷையாவினால் திறந்து வைக்கப்பட்டது. இதுபோன்றே



நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடும், மேற்படி வரிசையின் தொடராக மாநாடுகளை நடத்தி வரக்கூடிய அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தோற்றுநரான வணபிதா டாக்டர் சேவியர் தனிநாயகம் அடிகளாரால் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைபவ முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாநாட்டு அமர்வுகள் வீரசிங்கம் மண்டபத்திலும், றிம்மர் மண்டபத்திலும் இடம்பெற கலை நிகழ்ச்சிகள் யாழ். திறந்த வெளியரங்கிலும், பண்பாட்டுப் பொருட்காட்சி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் வெகு சிறப்பாக நடைபெற்று முடிவடைந்தன.

1974 ஜனவரி 10 ஆம் திகதி மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டு நல்லறிஞர்களுக்கு வழியனுப்புவிழா சிறப்பாக நடைபெற, யாழ். திறந்த வெளியரங்கு பதிவு செய்யப்பட்டு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டது. ஆயினும், மாநகர முதல்வர் துரையப்பா சொன்னால் மட்டுமே அவை திறக்கப்படும் என்றுசொல்லி திறந்த வெளியரங்கின் புறப்படலைகள் மட்டும் பூட்டப்பட்டு இருந்தன. வழமையாக மேயர் தெரிவின் போது ஒளிந்துகொள்ளும் உறுப்பினர்களைக் கண்டுபிடிக்க முயல்வது போன்றே முதல்வரின் இருப்பிடத்தைத் தெரிந்துகொள்ள மேற்கொள்ளப்பட்ட தேடல்கள் பயனளிக்காது போகவே, வழியனுப்பு விழாவுக்கு மாற்று ஒழுங்குகளைச் செய்யவேண்டிய நிற்பந்தம் எழுந்தது. விழாக் காண்பதற்கு அங்கு திரண்டிருந்த ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை வீரசிங்கம் மண்டபத்தில் உள்ளடக்குதல் இயலாது என்பதால் மண்டபம் முன்பாக தெருவின் வடக்கே அமைக்கப்பட்ட திடீர் மேடையில் பேச்சாளர்களும், மறுபுறம் தெருவின் தெற்கே வெறும் புற்றரையில் மக்களும் அமர்ந்திருக்க வழியனுப்பு விழா அமைதியாக ஆரம்பமாகிறது.

அப்பொழுது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு போக்குவரத்துப் பரிசோதகர், சேனாதிராசா வீதியின் ஒரு புறம் இருந்த மேடைக்கும் மறுபுறம் புற்றரையில் அமர்ந்திருந்த அவையினருக்கும், இடையேயிருந்த காங்கேசன்துறை வீதியின் பொலிஸ் நிலையம் நோக்கிச்செல்ல முயன்ற வேளையில், அங்கு பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் அவ்வாறு செய்யாது இருக்கும்படி அவரிடம் இதமாக எடுத்துச்சொன்னார்கள். போக்குவரத்துப் பரிசோதகரும் சுற்று வீதி வழியே கோட்டையைச்சுற்றியே பொலிஸ்

**சா. ஆ. தருமரத்தினம்**

நிலையம் சென்றடைந்தார். அவ்வாறிருக்க எந்த நோக்கமும் இல்லாது அமைதியாக வீற்றிருந்து தமிழின்பத்தை பரிமாறிக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தின் நடுவே திடீரெனப் புகுந்த கலகமடக்கும் பொலிசார் மக்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகம் செய்து கண்ணீர் குண்டுகளையும் பொழிந்திருந்ததுடன், மின் கம்பிகள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் நிகழ்த்தினர். அப்போது அங்கு அறுந்துவிழுந்த மின் கம்பிகளில் சிக்கி ஒன்பது தமிழர் பரிதாப மரணத்தைத் தழுவினர். பெண்கள் அவமானப் படுத்தப்பட்டனர். பல நூற்றுக் கணக்கானோர் காயங்களுக்கு உள்ளாகினர். அத்துடன் முடிவு பெறாத இத்தாக்குதலுக்கு பயந்து ஓடிய மக்களை பொலிசார் விரட்டியவாறு யாழ். மத்திய பஸ் நிலையம்வரை தொடர்ந்தனர். அடைக்கலம் நாடி இராணி படமாளிகையில் புகுந்தோர் மீதும் கண்ணீர்க் குண்டுகள் பொழியப்பட்டன.

> **அதனைச் சகித்துக்கொள்ள முடியாதவர்கள் ஒரு நள்ளிரவில் அச் சூழலில் யாரையும் அனுமதியாது காத்துக்கொண்டு, கனரக வாகனத்தின் துணையுடன் மேற்படி நினைவுத்தூணை மூன்று துண்டாகத் தகர்த்திருந்தார்கள்.**

இந்திர விழாவால் சோபிதம் கொண்டிருந்த யாழ்நகரம் மேற்படி படுபாதகச் செயலால் நொடிப்பொழுதில் சோக வீடாயிற்று. 1974-ம் ஆண்டு உழவர் பெருநாளாம் தை முதல் நாளில் யாழ். குடாநாட்டில் எந்த தமிழன் வீட்டிலும் பால் பொங்கவில்லை. மாறாக தமிழ் இளைஞர்களின் உள்ளங்கள்தாம் பொங்கி எழுந்தன. அதன் பலாபலனையே சிங்கள அரசு இன்றும் அனுபவித்து வருகின்றது.

அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையார்தான். சம்பவித்த படுகொலைகளை விசாரிப்பதற்கு தீவிர விசாரணைக்குழு நியமிக்கப்பட வேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கைகள் பலனளிக்காத போது, யாழ்ப்பாணப் பொது மக்கள் சார்பில் யாழ்ப்பாணம் பொது அலுவல்கள் குழு, ஒரு பொது விசாரணைக் குழுவை ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்கள் கிறெஸ்டர், எஸ். மாணிக்கவாசகர் இருவரையும், தென் இந்தியத் திருச்சபையின் ஓய்வு பெற்ற யாழ்ப்பாணம் பேராயர் அதி. வண சபாபதி குலேந்திரனையும் உள்ளடக்கிய மூவர் கொண்ட குழுவிற்கு உறுப்பினர்களாக நியமித்திருந்தது. டாக்டர் பசுபதி குழுவின் தலைவராக இருந்தார்.

மேற்படி பொது விசாரணைக் குழுவின் விசாரணைகளில் சம்பந்தப்படும் ஒருவரான சட்டத்துறை நாயகம், சிவாபசுபதி, இருந்தமையால் அவரது தந்தையாருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தாது இருக்கும் பொருட்டாக யாழ்ப்பாணப் பொது அலுவல்கள் குழுவின் தலைமையை டாக்டர். பசுபதியிடம் இருந்து பேராசிரியர் கு.நேசையா பொறுப்பேற்றார்.

மேற்படி பொது விசாரணை அமர்வுகள் சுண்டிக்குளி 'பாம் கோட்'டில் இடம்பெற்றன. அதன் செயலகமாக சோமசுந்தரம் வீதியில் சேனாதிராசாவின் இல்லம் பயன்பட்டது. பதிவாளராக வேற்பிள்ளையும் வழக்குத் தொடுனராக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி தம்பித்துரையும் 'தொலுக்கரிப்பாளராக' அரசரத்தினமும் செயல்பட, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற அறிவிப்பாளர்களே விசாரணை அமர்வுகளின்போது நடவடிக்கைகளைப் பதிவு செய்திருந்தனர்.

மேற்படி பொது விசாரணைக் குழு கிறெஸ்டர் விசாரணைக் குழுவாகவும், விசாரணையின் பின் அது சமர்ப்பித்திருந்த அறிக்கை கிறெஸ்டர் விசாரணை அறிக்கையாகவும் கூறப்பட்டது.

தமிழாராய்ச்சி மாநாட்டின் போது மரித்த தியாகிகள் ஞாபகார்த்தமாக முதலாம் ஆண்டு நினைவு தினத்தின்போது (1975) ஒன்பது சிறு தூண்கள் நிறுவப்பட்டு அவ்விடத்தில் காலையில் சர்வமத வழிபாடுகளும், மாலையில் வீரசிங்கம் மண்டபத்தில் அஞ்சலிக்கூட்டமும் நடைபெற்றன. நினைவுத்தூண்கள் ஒன்பதும் 'அறியப்படாதவர்களால்' விரைவில் அப்புறப்படுத்தப்பட்டு இருந்தன.

ஆகவே இரண்டாவது நினைவு தினத்தின் போது (1976) இளைஞர்களால் வலுவூட்டப்பட்ட ஒரு பெரிய கொங்கிறீற்றுத் தூண் தியாகிகள் நினைவாக எழுப்பப்பட்டு மதவழிபாடுகளும், அஞ்சலிக்கூட்டமும் நடைபெற்றிருந்தன. அதனைச் சகித்துக்கொள்ள முடியாதவர்கள் ஒரு நள்ளிரவில் அச் சூழலில் யாரையும் அனுமதியாது காத்துக்கொண்டு, கனரக வாகனத்தின் துணையுடன் மேற்படி நினைவுத்தூணை மூன்று துண்டாகத் தகர்த்திருந்தார்கள். இளைஞர்களோ அடுத்த ஆண்டில் மேற்படி சிதைவுகளை தொடர்ந்தும் நினைவுச் சின்னங்களே இருக்க அனுமதித்து அவற்றைச் சூழ ஒன்பது வேறு தூண்களையும் எழுப்பியிருந்தனர்.

> *1974-ம் ஆண்டு உழவர் பெருநாளாம் தை முதல் நாளில் யாழ். குடாநாட்டில் எந்த தமிழன் வீட்டிலும் பால் பொங்கவில்லை. மாறாக தமிழ் இளைஞர்களின் உள்ளங்கள்தாம் பொங்கி எழுந்தன. அதன் பலாபலனையே சிங்கள அரசு இன்றும் அனுபவித்து வருகின்றது.*

சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டரசாங்க காலத்தில் நிகழ்த்தப்பட்ட பண்பாட்டுப் படுகொலையின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது 1981 இல் யாழ்.பொது நூலகம்எரியூட்டப்பட்டது.

நடைபெற்ற இரு பண்பாட்டுப் படுகொலைகளும் தமிழர் நெஞ்சங்களில் இன்னும் கனன்று கொண்டுள்ளது.

*நன்றி: தினக்குரல்*

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை முன்பாக)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை

60, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

Pub

# பிரெஞ்சுப் புரட்சி

## இரண்டாம் பகுதி: புரட்சி

## 1789ம் ஆண்டுப் புரட்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஜூலை 17-ல், லூய் மன்னர் பாரிஸ் எல்லையை அடைகிறார். தலை நகரின் நுழை வாயிலில், நகரத் தலைவர் அவரை வரவேற்று, அவரிடம் நகரின் சாவிகளை அளிக்கிறார். பின்னர் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே, நகர் மன்றம் செல்கிறார்.

அங்கும், அவருக்கு நல்வரவேற்பு கிடைக்கிறது.

'நம் நல்லரசர் பதினாறாம் லூய் வாழ்க' என்று மக்கள் முழக்கமிடுகிறார்கள். அரசர், புதிய நகர மன்றத்தையும், அதன் தலைவரையும் அங்கீகரிக்கிறார். அதுபோலவே, புதிய தேசிய காவல் படையையும் (National Guard) புகழ் மிக்க அதன் தலைவர் லஃபெயத்தையும் (Lafayette அமெரிக்க மக்கள் இங்கிலாந்துக்கெதிராக நடத்திய சுதந்திரப்போரில், அமெரிக்க மக்களுக்காதரவாகப் போரிட அனுப்பப்பட்ட் பிரெஞ்சுப் படைக்குத் தலைமை தாங்கியவர் என்பது நினைவிருக்கும். 1789-ல், இவர் மிகப்புகழ் பெற்ற பிரெஞ்சுக்காரர்.) அவர் அங்கீகரிக்கிறார்.

மேலும், அரசரின் கொடியான வெள்ளை நிறத்தையும், பாரிஸ் நகரின் வண்ணங்களான சிவப்பையும், நீலத்தையுஞ்சேர்த்து மூவண்ணச் 'சோடனை' (பட்ஜ்) ஒன்றை அரசருக்குக் கொடுக்கிறார்கள். அதை அவர் மறுக்காது பெற்று, தன் தொப்பியில் சொருகிக்கொள்கிறார்.

அவரது இச் செயல், பாரிஸ் மக்களுக்குப் பெரிதும் திருப்தியையும், மகிழ்ச்சியையுந்தருகிறது. இம் மூவண்ணச் 'சோடனை'யில், பாரிஸ் மாநகருக்கும், அரசருக்கும் இடையே உள்ள பலமான தொடர்பை, ஐக்கியத்தை அவர்கள் பார்க்கிறார்கள்.

மாலையில், மன்னர் பாரிசிடமிருந்து விடைபெற்று, வெர்செய்ல்ஸ் கிளம்புகிறார். அங்கே இரவு ஆரம்பிக்கிறது. அரசர் இன்னும்வந்து சேரவில்லை. ராணி கவலைகொண்டிருக்கிறார். தன் கணவருக்கு, பாரிஸ் மக்கள் ஏதோ தீமை செய்துவிட்டார்கள் என்று அவர் நிச்சயமாக நம்புகிறார். பின்னர், அரசர் வெர்செய்ல்சு அரச மாளிகை வந்து சேருகிறார். அரசி, கணவரை மகிழ்வுடன் வரவேற்கிறார். அரசரின் தொப்பியில் சொருகியிருந்த மூவண்ணச் 'சோடனை' யைக் கவனிக்கிறார்.

'இது என்ன?' என்று வினவுகிறார்.

அரசர்; 'இது பாரிஸ் மாநகர மன்றமும், தலைவரும், மக்களும் அளித்த மூவண்ணச் சின்னம். இதில், மன்னரிடம், மக்களுக்குள்ள விசுவாசத்தைப் பார்க்கலாம்' என்ற விளக்கங்கொடுக்கிறார்.

அரசியாருக்கு இவ்விளக்கம் கோபத்தைக் கொடுக்கிறது.

### பிரெஞ்சு நகரங்களிலும், கிராமங்களிலும் புரட்சித் தீ எரிகிறது

பாஸ்டில் கோட்டை தகர்க்கப்பட்ட செய்தி ஃபிரான்சின் பெருநகரங்களுக்குக் கிடைக்கிறது. அந்தந்த நகர மக்கள், அந்தந்த இடத்தில் இருந்த, பாஸ்டில் கோட்டைக்குச் சமமான சிறிய கோட்டைகளைத் தகர்க்கின்றனர். அந்தந்தப் பகுதிகளில் —காரணமின்றி, எதேச்சாதிகாரமான முறையில் அக்கோட்டைகளில் வாடிக்கொண்டிருந்தவர்களை விடுதலை செய்கின்றனர்.

மேலும், பாரிசில் நடந்தது போலவே தேசியக் காவல் படையையும் உருவாக்குகிறார்கள். அங்கங்கே புதிய நகர மன்றங்கள் தோன்றுகின்றன. காவல் படையில் வீரர்களாக, சாதாரண, எளிய மக்கள் இருந்தாலும், தலைவர்களாக நகரத் தந்தைகளாக பூர்சுவா வகுப்பினரே வருகின்றனர்.

(ஆகவேதான், பிரெஞ்சு சரித்திர ஆசிரியர்கள் 1789 பிரெஞ்சுப்புரட்சி எதேச்சாதிகாரத்தை வீழ்த்தினாலும், பிரபுக்களின், மதத் தலைவர்களின் ஆதிக்கத்தைக் குறைத்தாலும், அது பூர்சுவா வகுப்புக்குத்தான் பெரிய வெற்றியைத் தேடித்தந்தது என்கிறார்கள்.) ஏழை-எளியவர்கள், பிரெஞ்சுப் புரட்சியால் நன்மை பெற்றார்கள். ஆனால், அவர்கள் அல்ல முதல் பலன் பெற்றவர்கள். மிகப் பெரிய பலன் பெற்றவர்கள் பூர்சுவாக்களே.)

நகரங்களுக்கடுத்து, பிரெஞ்சுக் கிராமங்களையும் புரட்சித்தீ பற்றுகிறது. ஜூலை ஆரம்பம் முதலே, கிராமங்களில் பதட்ட நிலைமை நிலவுகிறது. 1789 அறுவடை சிறப்பானதல்ல. ஆகவே, விவசாயிகள் மிட்டா—மிராசுகளுக்கு வழக்க



பேராசிரியர் செவலியே
சுகிர்தராஜ்

மாய்க் கொடுக்கும் பங்கில் சிறிது குறைக்க விரும்புகிறார்கள். பிரபுக்கள் இத் திட்டத்தை ஏற்க மறுக்கிறார்கள்.

விவசாயிகளுக்குப் பாடம் புகட்ட, தீய சக்திகளை அவர்கள் திரட்டுவதாக வதந்தி பரவுகிறது.

பசி—பட்டினியால் வீடு—வாசலை இழந்து, பல்லாயிரக்கணக்கில் மக்கள் சாலைகளில் திரிகிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், பாரிஸ் பாஸ்டில் கோட்டை தகர்க்கப்பட்ட செய்தியும், ஆங்காங்கு புதிய ஆட்கள் அதிகாரத்துக்கு வந்திருக்கும் செய்தியும் கிராமங்களுக்குக் கிடைக்கின்றன.

பல நூற்றாண்டுகளாக நிலவி வரும் அநீதிகளை ஒழிக்க இதுதான் சமயம் என்று கிராம் மக்கள் புரட்சியில் குதிக்கிறார்கள். தடிகள், அறுவடைக்குப், புல் வெட்டப் பயன்படும் கத்திகள் இவற்றோடு ஆண்களும், பெண்களும் உள்ளூர்ப் பிரபுவின் மாளிகைக்குச் செல்கின்றனர்.

பிரவு, வழக்கமான திமிருடனும் அகங்காரத்துடனும், அவர்களைப் பார்க்கிறார்.

'என்ன ! ஏன் இப்படி ஊர்வலமாக வருகிறீர்கள்?

- பிரவு ஐயா! எங்களைப் பல வகைகளிலும் நீங்கள் வாட்டி வதைக்கிறீர்கள். பட்டினி போடுகிறீர்கள். அபராதம் விதிக்கிறீர்கள். அறுவடையைப் பிடுங்குகிறீர்கள். உங்களுக்கு எல்லா அதிகாரங்களும், அதேபோல் எங்களுக்கிருப்பதெல்லாம் கடமைகளே.

தயவுசெய்து, எங்கிருந்து உங்கள் அதிகாரங்கள் வருகின்றன என்பதையும், கிராமத்தில் உங்களுக்குச் சொந்தமான நிலங்கள், வரப்புகள், புல்வெளிகளின் உரிமைப்பட்டயங்களையும் எங்களுக்கு நீங்கள் காட்டவேண்டும்.

- முதலில், அவற்றையெல்லாம் உடனே தேடி எடுக்கமுடியாது.

இரண்டாவதாக, அவற்றை உங்களுக்குப் படிக்கத்தெரியாது.

மூன்றாவதாக, உங்களைப்போலன்றி, எனக்கு வேறு முக்கிய வேலைகள் உள்ளன. போய்வாருங்கள்.

- இல்லை. போகமுடியாது. அவற்றை நீங்கள் காட்டினால்தான், நாங்கள் இங்கிருந்து போவோம்.

- போகப் பேர்கிறீர்களா? அல்லது ஆடு. மாடு, குருவியைப் போல உங்களைச் சுட்டுத் தள்ளவா?

- ஆ! சுடுவீர்களா? எங்கே சுடுங்கள், பார்க்கலாம்!

அவ்வளவுதான்; இதுவரை பயந்து, நடுங்கி வாழ்ந்த கூட்டம் கோபத்துடன் பிரபுவை நோக்கி முன்னேறுகிறது. பிரபு, சுடப்போவதுபோல் பாவனை செய்கிறார்.

(தொடரும்)

# தென்னாசியாவின் அணுகுண்டு



## பரீட்சைகளும் - போட்டிகளும்

**கடந்த இதழிலே அணுக்குண்டுகள் தயாரிப்புமுறை அவற்றைக் கொண்டிருக்கும் நாடுகள் ஆகியவற்றின் விபரங்களைப் பார்த்தோம். இவ்தழிலே அணுக்குண்டுகளின் கட்டுப்பாட்டினையும் அதிகாரத்தினையும் கொண்டிருப்பது யார்? என்பதனைச் சுருக்கமாகப்பார்ப்போம்.**

இந்தியாவையும், பாகிஸ்தானையும் எடுத்துக்கொண்டால் பிரதமமந்திரி தலைமையிலான குடிசார் அரசே அணு ஆயுதத் துறையின் அபிவிருத்திக்கு பொறுப்பு வகிக்கிறது. அணுத்துறை சம்பந்தமாக அரசு எடுக்கும் முடிவுகள் பொதுமக்களின் கருத்தாடலுக்கப்பால்பட்ட வகையில் மிக விரைவாக எடுக்கப்படுகின்றன. அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே கூட மிகச் சிறிய அளவிலான கலந்துரையாடல்களே மேற்கொள்ளப்படுகின்றன. அணுத்துறையின் முடிவுகள் வெளியே கசியாதவாறு இருப்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அணு ஆயுதங்கள் மிகப் பாரியளவு விளைவுகளைக் கொடுப்பதால் அது சம்பந்தமான விபரங்கள் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது அமைப்பு சார்ந்த ரீதியிலோ வெளிப்படுத்தப்படுவதில்லை. இந்திய பாதுகாப்பமைச்சர் ஜோர்ச் பெர்னான்டஸ்சின் அண்மைய அறிக்கையின் படி, இந்தியாவிடமுள்ள அணு ஆயுதங்க



பேராசிரியர் இலகுப்பிள்ளை

ளின் கட்டுப்பாடும் தலைமைத்துவமும் நாட்டின் தேசிய பாதுகாப்புக் கருதி தேசிய பாதுகாப்புச் சபையிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த சபையிலே பாதுகாப்பமைச்சர், முப்படைத் தளபதிகள், பாதுகாப்புத் துறையின் ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான பொறுப்பாளர்கள் ஆகியோர் அங்கம் வகித்தாலும் சபையின் முழுமையான அதிகாரங்கள் பிரதம மந்திரியிடமும் சபையிடமுமே இருக்கும். மறுபுறத்தே பாகிஸ்தானை எடுத்துக் கொண்டால் பாகிஸ்தானின் இராணுவம் அந்நாட்டின் அணுஆயுதத் துறையிலே அதிகளவு பங்களிப்பினைச் செலுத்திவருகிறது. இராணுவத்தின் தீர்மானத்தின்படியே முடிவுகள் எடுக்கப்படுவதற்கேதுவாகிறது. இராணுவத்தினர் உள்ளடக்கியதாக அமைக்கப்படும் பாதுகாப்புச் சபையிலே பிரதமமந்திரியும் அங்கம் வகிப்பார். இவர்தான் அணு ஆயுதங்களின் சோதனை போன்ற விடயங்களில் இறுதி முடிவு எடுப்பதாகக் கருதப்படுகிறது.

நாசகார ஆயுதங்கள் எதனைத் தயாரித்தாலும் அவற்றை எவ்வாறு பாவிப்பது என்ற விடயத்தில் நாடுகள் தெளிவினைக் கொண்டிருக்கவேண்டும். பலவிதமான வடிவங்களில், பலவிதமான வகைகளில் இருக்கும் ஆயுதங்கள் பிரயோகிப்பு ரீதியில் சிலவேளை சில சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம். யுத்தம் தொடர்பான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டால் இவ் ஆயுதங்களின் இலக்குகள் எவை என்பதும் தீர்மானிக்கப்பட வேண்டும். அமெரிக்காவிடமும் ரஷ்யாவிடமும் அணு ஆயுதங்கள் தொடர்பான யுத்த திட்டத்தில் இருவகையான இலக்குகள் உண்டு. ஒன்று நடைமுறைச்சாத்தியமான இலக்கு. அடுத்தது பதில் தாக்குதல் இலக்கு என்பனவாக அவை அமையும். 1950 களிலும், 60 களிலும் வான் கலங்களால் அல்லது ஏவுகணைகளால் செலுத்தப்படும் ஆயுதங்களின் துல்லிய கணிப்பீடு திருப்திகரமாக அமையாத காரணத்தால் எதிரியினுடைய அணுத்துறைப் பலத்தினை அழிக்கக் கூடியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டதுடன், அணுத்துறைப் பலத்தினை அழித்த பின்புதான் எதிரி நாட்டின் மீது தாக்குதல்களைத் தொடுப்பதும் இத்திட்டத்தின் ஒரு வடிவமாகும். ஆனாலும் இலக்குகளும், அணு ஆயுதங்களின் பொருத்துதல்களும் ஒரு இடத்தினை வெறுமையாக்கி விடுவதில்லை. பனிப்போரின் வரலாற்றிலே இது முக்கியமானதாகும்.

இந்தியாவையும் பாகிஸ்தானையும் எடுத்துக்கொண்டால் அணு ஆயுதங்களை வீசக்கூடிய வகையில் பலவகையான வான் கலங்கள் இருந்தாலும் இந்த வான்கலங்களிலே ஏற்றிச் செல்லக்கூடிய அணு ஆயுதங்களின் தொகையிலே பார்த்தால் ஓரிரு வான்கலங்களே மிக உபயோகமானதாகக் கருதப்படுகிறது. இந்தியாவிடம் உள்ள மிக் 27 ரக வான்கலமும் ஜகுவார் ரக யுத்த விமானங்களும் இந்தவகையிலே சிறப்பான இடத்தை வகிக்கின்றன. 1970–களில் இருந்து 80–கள் வரை உருவாக்கப்பட்ட ரஷ்ய தயாரிப்பான மிக்-27 ரக வான்கலங்கள் இந்தியாவிற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டன. இந்தியா

**முதல் தொகுதியாக 40 விமானங்களும் பின்னர் 91 விமானங்களுமாக இவை இந்தியாவிடம் இணைந்துகொண்டன. இவ்விமானங்கள் 34,000 இறாத்தல் எடையுள்ளன. 10,500 இறாத்தல் எடையுள்ள ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு சுமார் 1000 மைல்கள் பறக்கக்கூடியன.**

இவற்றினை பகதூர் என்ற பெயரில் அழைக்கிறது. இவ்வாறான 165 வான் கலங்கள் இந்தியாவிடம் உண்டு. நாற்பதினாயிரம் இறாத்தல் எடையுள்ள இக் கலங்கள் 6600 இறாத்தல் எடையுள்ள குண்டுகளைத் தாங்கிக் கொண்டு சுமார் 500 மைல் தூரம் பறக்கக் கூடியன. டெல்லியின் வடக்குப் புறமாக உள்ள கின்டன் 'அணுஆயுத விமானத்தளத்திலே' இவ் வகை விமானங்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனைவிட பாகிஸ்தானின் எல்லைப்புறத்திலுள்ள தளமொன்றிலும் இவ்வகை விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிடம் உள்ள அணுஆயுத வான்கலமான ஜகுவரை எடுத்துக்கொண்டால் இவ் வான்கலம் பிரித்தானிய பிரெஞ்சு நுட்பத்தில் உருவானது. பிரித்தானிய விமானப்படையிடமும் பிரெஞ்சு விமானப்படையிடமும் இவ்வகை விமானங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிடமும் இவ்வகையான விமானங்கள் பிரிட்டிஸ் ஏரோ ஸ்பெஸ் நிறுவனத்தினால் இந்துஸ்தான் எரோநியூற்றிக்ஸ் நிறுவனத்தில் பொருத்தப்பட்டன. முதல் தொகுதியாக 40 விமானங்களும் பின்னர் 91 விமானங்களுமாக இவை இந்தியாவிடம் இணைந்துகொண்டன. இவ்விமானங்கள் 34,000 இறாத்தல் எடையுள்ளன. 10,500 இறாத்தல் எடையுள்ள ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு சுமார் 1000 மைல்கள் பறக்கக்கூடியன. இவ்வகை விமானங்கள் இந்தியாவின் அம்பாலா விமானத் தளத்தில் (இஸ்லாமாபாத் நகரிலிருந்து சுமார் 325 மைல் தூரத்தில்) நிறுத்தப்பட்டுள்ளன. கின்டன் அம்பாலா ஆகிய விமானத்தளங்கள் இந்திய விமானப்படையின் மேற்கு கட்டளைப் பணியகத்தின் அதிகாரத்துள் அடங்குபவர். இப் பணியகத்தின் தலைமை அலுவலகம் சன்டிகார் நகரில் அமைந்துள்ளது. இவ் அலுவலகமானது புதுடெல்லியில் உள்ள தலைமையகத்தின் கட்டளைக்கு ஏற்றவாறு தனது பணிகளை மேற்கொள்ளும். இத் தலைமை அலுவலகத்தில் இருந்து தாக்குதலுக்கான உத்தரவு வழங்கப்பட்டால் அதனை இப்பணியகமே நடாத்தி முடிக்கும்.

(வளரும்)

# 'புதிய வேலை விதிகளும் தொழிலாளர் நலன்களும்'

புகலிட நாடுகளில் எம்மக்கள் எதிர்கொள்ளும் புகலிட மொழி தொடர்பான பிரச்சினைகள் காரணமாக சில சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். தாம் வதியும் நாடுகளில் உள்ள தொழிலாளர் நல சட்ட விதிகள் என்பவற்றை கூட இவர்கள் சரிவர அறிந்து கொள்ளமுடியாமைக்கு இந்த மொழி தொடர்பான சிக்கல்கள் ஒரு முக்கிய காரணமாகவும் அமைந்துவிடுகின்றது.

எனவே இவ்வாறான நிலைமைகள் சமூக அக்கறைகொண்ட பலரினால் ஈழமுரசிற்குச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், இவை தொடர்பான விளக்கங்களை ஏன் ஈழமுரசு வழங்கக்கூடாது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. ஆகையால் இதனை நாடுவாரியான தொடராக பிரசுரிக்க ஈழமுரசு முடிவுசெய்துள்ளது. முதலில் சுவிற்சலாந்து நாட்டிலுள்ள புதிய விதிமுறைகள் பற்றிய விளக்கம் தொடராக வருகிறது.

## சுகவீனக் காப்புறுதி

வேலை வழங்குனர்களினால், சுகவீன காலப் பகுதிக்கான சம்பளக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் அவசியம். நிரந்தர சுகவீனமாகும்போது 720 நாட்களுக்கு சம்பளம் பெற உரிமையுண்டு.

வேலைக்குச் செல்லாத முதல் 60 நாட்களுக்கு மாதச் சம்பளத்தில் 88% மும், தொடர்ந்து வரும் நாட்களுக்கு 80% மும் பெற முடியும்.

## தாய்மையடைதல்/ குழந்தைப்பேறு

பெண் தொழிலாளர்களுக்கு, வேலை வழங்குனர்கள், தாய்மை/குழந்தைப் பேறுக்'காப்புறுதி செய்திருத்தல் அவசியம்.

தாய்மைப் பேற்றுக் காலத்தில், 10 வாரங்கள், சம்பளம் பெற முடியும். இதில் குறைந்தது 6 வாரங்கள் அதாவது 42 நாட்கள், குழந்தை பிறந்த பின்னராக இருத்தல் வேண்டும்.

இதில் முதற்பகுதியில் மாதச் சம்பளத்தில் 88% மும், பின்னர் 80% மும் சம்பளமாகப் பெற முடியும்.

குறிப்பு: குழந்தை பிறப்பதற்கு 270 நாட்களுக்கு முன்னதாக, வேலை வழங்குனர்களால், மேற்படி காப்புறுதி செய்யப்பட்டிருந்தால், மாத்திரமே காப்புறுதி நிறுவனம் சம்பளம் வழங்கும். இல்லையென்றால், 323a OR என்னும் சட்டத்தின் அடிப்படையில் வேலை வழங்குனரே சம்பளம் வழங்க வேண்டும்.

## வேலை நீக்கமும், பாதுகாப்பும்

தாய்மைப்பேற்றுக் காலத்திலும், அதன் பின்னராக வரும், 16 வாரங்கள் வரையிலும், வேலையில் இருந்து நீக்குவதில் 336 C OR என்னும் சட்டம் பாதுகாப்பு தருகின்றது. அதாவது இந்தக் காலத்தில் வேலை நீக்கம் செய்யமுடியாது.

## விபத்துக் காப்புறுதி

வேலை வழங்குனர்களால், இந்தக் காப்புறுதி செய்யப்பட்டிருப்பது அவசியம். விபத்து ஏற்பட்டு முதல் இரண்டு நாட்களும், 88% சம்பளமும், தொடர்ந்து வரும் நாட்களுக்கு 80% சம்பளமும். பெற்றுக்கொள்ளமுடியும்.

★ குடும்ப பொறுப்பாளராக, இருந்து வேலையின்போது விபத்து ஏற்பட்டிருந்தால், 100% முழுமையான சம்பளம் வழங்கப்பட வேண்டும். இதில் 20% வேலை வழங்குனரால் வழங்கப்படுவதாக இருக்கும்.

## வைத்திய அத்தாட்சி

சுகவீனம் காரணமாக 3 நாட்களுக்கு மேலாக வேலைக்கு செல்லாவிடின் நான்காம் நாளில் இருந்து வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். மிகவிரைவாக, வேலை வழங்குனரிடம் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிப்பது அவசியமாகும்.

சுகவீனக் காப்புறுதி நிறுவனம், ஒருநாள் சுகவீனத்திற்கும், வைத்திய அத்தாட்சிப் பத்திரம் கோருமானால், அதனை சமர்ப்பித்தல் அவசியமாகும்.

## வேலைக்கான ஆடைகள்

சமையற்காரரின் ஆடைகள் மற்றும் அவற்றின் பராமரிப்பு என்பன வேலை வழங்குனரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆனாலும் மாதாந்தம் 50SFR சம்பளத்துடன் வழங்கப்படும்.

உணவு பரிமாறும் தொழிலாளர்களின் மேலங்கி மற்றும் முன்பக்கம் கட்டும்துணி என்பவற்றின் பராமரிப்பு வேலை வழங்குனர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும். அல்லது 70SFR மாதாந்தம் வழங்கப்படும்.

விசேட வேலை ஆடைகள் வேலை வழங்குனரால் வழங்கப்படும். அல்லது அதற்குரிய கட்டணம் வழங்கப்படும்.

## தங்குமிடமும் பராமரிப்பும்

பொதுவேலை விதிமுறைகளில், தங்கும் இடம், மற்றும் பராமரிப்பு தொடர்பாக, எழுத்துமூலமான ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

## ஓய்வூதியம் *(Pension)*

வேலையில் இருந்து விலகும்போது ஓய்வூதியக் காப்புறுதியின் தொடர்புகள், வேறு ஒப்பந்தங்கள் செய்யப்படாதவிடத்து நிறுத்தப்படும்.

ஓய்வூதியம் பற்றிய விரிவான விபரங்களை இன்னுமொரு கட்டுரையில் பார்ப்போம்.

மேலதிக ஆலோசனைகள் பெற்றிடவிரும்பின் தொடர்பு கொள்ள வேண்டியது

தமிழர் இல்லம்
சட்ட ஆலோசனை மையம் - சுவிஸ்

---

காலத்தைப் பதிவுசெய்து
மாலயோன் எழுதுவது

# கேட்டிருப்பாய் காற்றே

**'கேட்டிருப்பாய் காற்றே -துன்பக் கேணியிலே பெண்களழுத சொல்'**

பாரதியின் வார்த்தை இது. எப்போது பாரதியின் வார்த்தைகட்கு பஞ்சமிராது எதைப் பற்றித்தான் அவன் எடுத்தியம்பவில்லை.

எனினும் நாம் சொல்ல வருவது அதனையல்ல.

நமது துன்பத்தையும், துயரத்தையும் காற்றிடம் தூது விடுகின்ற காலத்தை நாம் சற்று மறப்போமா?

நாம் ஒப்பாரி வைப்போம்; ஓலமிடுவோம். அத்தனையையும் காற்றினால் அள்ளிச் செல்ல இயலுமா?

இந்தப் பரந்த வெளியெங்கும் காற்று பறந்து திரிகின்றதே. நாம் ஒப்பாரி வைப்போம்; ஓலமிடுவோம். காற்றினால் அதனைத் தாங்கிட ஏது கடினம் என்ற கேள்வியும் இருக்கின்றது.

ஒன்றினை உணர்வோம். நம் ஒப்பாரிகளும், ஓலங்களும், அலறல்களும் ஐயோ என்ற கத்தல்களும் ஒரு சிறிதா இருக்கின்றது? காற்றையும் மீறி வானிலும் எழுந்து ஓங்கி ஒலிக்கின்றதல்லவா?

காற்றினால் அதிகம் என்ன செய்து விடமுடியும்? நமது ஒப்பாரிகளையும்

ஓலங்களையும் ஏந்தி எடுத்து இன்னொருவர் காதில் ஓதிடச் செய்யும். அவ்வளவே செய்யமுடியும்.

அதற்கும் மிஞ்சி காற்றினால் எம்துயர் துடைக்க ஏதும்வழியுண்டா?

நாம் காற்றிடம் சொல்ல வேறு என்ன இருக்கின்றது? ஒப்பாரியையும் ஓலத்தையும் துயரத்தைவும் தூதுவிடுவதை நாமாகவே நிறுத்துவோம்.

நாம் செய்வதற்கு வேறு சோலிகள் இருக்கின்றன. சொல்வதற்கும் அதுவே தேவையாக இருக்கின்றது.

நம் வெற்றிகளைக் கூறுவோம். நம் சாதனைகளைச் சொல்வோம். நம் செயற்கரிய செயல்களை அதனிடம் செப்புவோம்.

நாம் செய்து முடித்ததை, இன்னும் செய்ய இருப்பதை அதனிடம் சொல்வோம். நம் அத்தனை தகைமைகளையும் அதனிடம் கூறுவோம்.

நம் செயலைக் காற்று சகலருக்கும் எடுத்தோதட்டும். நம் வெற்றிகளைச் சொல்லட்டும். சாதனைகளைச் செப்பட்டும்.

நாம் எடுத்துக்கொண்ட சபதங்களை கூறட்டும். நாம் தொடுத்துக்கொண்ட போர்களை இயம்பட்டும்.

விண்ணிலே நாம் வலம் வருவதை வெற்றி வீரராய் உலாப்போவதை எட்டுத்திக்கும் காற்று எடுத்தோதட்டும்.

காற்றிலேறி அந்த விண்ணையும் சாடுவோம். அது காற்றுக்குத் தெரியும். அதனையும் காற்றுத் தெரிவிக்கட்டும். நம் சகலதையும் காற்று சகலருக்கும் கூறட்டும்.

காற்று நமக்குச் செய்யக் கடினமான பணிகளும் உள்ளன.

நம் தாய்த்தேசத்தில் கேட்கும் வெற்றி முழக்கங்களை நம் காதில் வந்தும் காற்று ஓதட்டும்.

**வெடித்தன வன்மம்**
**வெளிக் கிளம்பின வீரம்**
**முடித்தன கொடுமை**
**முரசறைந்தன கொடுமை**
**முரசறைந்தன வெற்றி**
**துடித்ததும் துவண்டெழுந்ததும்**
**துப்பாக்கி பிடித்ததும்**
**பீரங்கி வெடித்ததும்**
**எடுத்த காரியம் அனைத்தையும்**
**காற்று, எம் காதில் வந்து ஓதட்டும்.**

வீரசபதம் எடுத்த குரலை, வெற்றி முழக்கம் இட்ட வகையை, முடித்துவிட்ட எக்காளத்தொனியை அறைகூவி அழைத்த போர் முரசினை யாவற்றையும் காற்று இங்கு வந்து நம் காதில் ஒலித்திடச் செய்யட்டும்.

நம் உறவுகள் படும்துயரை, பொங்கியெழும் கண்ணீரை அடக்க முடியாமல் வெம்பி விம்மல் ஒலி எழுப்புவதனை பசியால் வயிறு துடித்து ஒலிக்கும் அழுகுரலை அவற்றையும் காற்று வந்து நம் காதில் வந்து போடட்டும்.

இயலாது ஒன்றில்லை-காற்றினால் அது ஏலும். பாருங்கள் எத்தனை பறவைகள் எல்லாம் நாடுவிட்டு நாடுதாவி, ஏன் கண்டம் விட்டு கண்டம் தாவிப் பறக்கின்றன.

அப்போ நாம் ஊரியான் பாதையில் போவோம். வினோதமான பறவைகளைப் பார்ப்போம்-கேட்போம்

'இவை எங்கிருந்து வந்தன?

பதில் சொல்வார் யாருமில்லையெனில் பறவைகளிடமே கேட்போம்.

'எங்கிருந்து வந்தீர்கள்?'

ஆசையாகப் பார்த்து அவை சொல்லும் 'பசுபிக் கடலின் மேலால் பறந்து வந்தோம்'

அப்படியிருக்கென்று ஆச்சரியப்பட்டுப்போவோம்.

ஏலும். பறவைகளுக்கே இப்படி பறந்து வரமுடியுமென்றால், காற்றுக்கு இது கட்டாயம் முடியும்.

கனக்கும் துயரை, கடும்போர்முரசை, சமைத்த வெற்றியை, சண்டையிட்ட வீறாப்பை காற்றினால் காவிவரமுடியும்.

**'தூரத்து மல்லிகை மணத்தை**
**துவழாத செண்பக நிறத்தை**
**ஓரத்தே கொணர்ந்து வந்து**
**உயிர்ப்புடன் தந்திடுவாய்.**
**தூரத்து துப்பாக்கி முழக்கை**
**துன்பத்தில் துடித்திடும் குரலை**
**ஓரத்தே கொணர்ந்து தருதலுக்கு**
**ஓர வஞ்சனை ஏன்தான் சொல்'**

கேட்கலாம்தான். எனினும் வேதனை ஒன்றுளதே வேதனைக்கா குறைவில்லை? நம் வேலையே அதுதானே? வேதனைப்படுதல்.

துன்பம் எப்போதும் தொடரத்தானே செய்கிறது. பிரிவு துக்கத்தைத்தானே அள்ளி அள்ளி வழங்குகின்றது.

நாம் ஒருவரையா பிரிந்தோம்?

இருவரையா பிரிந்தோம்?

நம் உறவுகளைப் பிரிந்தோம்.

நம் உணர்வுகளைப் பிரிந்தோம்

நம் ஊரையே பிரிந்தோம்.

வேரோடு வெட்டி நாம் வீழ்த்தப்பட்டோம். வேரோடு மட்டுமல்ல, வேரடி மண்ணுடனும் நாம் தூக்கி எறிபட்டோம்.

எறிபட்டதில் வந்ததோ இன்னும் எம்மை வருத்தத்தான் செய்கின்றது.

துக்கமெனில் சாதாரணமான ஒன்றா? இன்று அழுதுவிட்டு, நாளை அதனை மறந்து விடுகின்ற மாதிரியான துக்கமா?

துயரிலேயே மகாதுயர் மரணமல்லவா? மரணத்திலும் இயற்கையான சாவு என்றால் இனி என்ன செய்வது என்றிருக்கலாம்.

அகால மரணங்கள்தானே இப்பவெல்லாம் அதிகம். அந்த மரணத்தின் துயரை அழுவதனால் மாத்திரமே தீர்த்துவிடமுடியுமா? அழுவதனால் ஆறிவிடுமா அந்தக்காயம்?

மரணத்துயர்தான் என்றில்லை. வேற மனதை நெகிழ வைக்கின்ற துயர்களும் இருக்கின்றன.

எம் கண்முன்னால் எம் குழந்தை பசியால் துடித்துப்போகிற துயரம் மரணத்தின் துயரிலும் மகாதுயரல்லவா?

அது நினைத்து நினைத்து நெஞ்சு நெகிழ்கின்ற துயர். எந்த வாழ்வு வந்தாலும் விட்டுப்போகாத்துயர்.

**'அம்மா நான் செத்துப்போவனா?** என்று ஒரு குழந்தை கேட்கின்றது.

அப்படி ஒரு வார்த்தையை உங்கள் குழந்தை கேட்பதாக உணர்ந்து பாருங்கள்.

**'அம்மா நான் செத்துப்போவனா?'**

அம்மா என்னபதில் சொல்லியிருப்பார் அது எதிரிகளுக்குத் தெரிந்ததுதான்.

ஆனால் கேட்ட அந்தக் குழந்தை செத்துப்போனது.

செத்துப்போன துயரிலும் பார்க்க, அந்தப் பிள்ளைகேட்ட அந்த வார்த்தை ஆளைக்கொல்லும் அல்லவா?

அப்படித்தான் இன்னுமொன்று கிபீர் குண்டுகள் பொழிகின்றன. மக்கள் பதுங்கு குழிக்குள் புகுந்தனர். பதை பதைத்துத் திரிந்தனர்.

குண்டுகள் பொழிந்தன; குழந்தைகளும் இறந்தனர்.

ஓர் அம்மா **'இது ஆருடைய குழந்தை?'** என்று புரட்டிப் பார்த்தாள். ஐயோ அது அவளுடைய குழந்தையேதான்.

அந்தத்துயர் எந்த அகராதியில் அடங்கும்? எழுத்தில் அடங்க முடியுமா? என்னவென்று உணர்த்திடல் கூடும்?

இந்த மனத்துயரின் கொடுமையை நாம் காற்றுக்காவது சொல்லாதிருக்க முடியுமா?

துக்கம் தொடர்தல் நம் இயற்கையாக இருக்கிறது. அதற்காக அப்படியே நாம் இருந்துவிடுவதோ, இறந்து போவதோ உவப்பான விசயமல்லவே! அழுது ஆற்றாமையைத் தீர்க்கலாம். ஆனால் அழுதுகொண்டே காலத்தை ஓட்டிவிடமுடியுமா? காலம் நம்மை விட்டு ஓடிவிடுமல்லவா?

பெரிதான துக்கமென்றால்

காற்றில் எம் கவலை சொல்வதை விடுத்து காவியம் பாடுவோம். நமது வெற்றியையும், வீரத்தையும், வீறாப்பையும் காற்றுக்குச் சாற்றுவோம்.


# தமிழ்ப் பெண்களாலும் சர்வதேச விருதுகளைத் தட்டிக்கொள்ள முடியும்

கராட்டிக் கலையைப் போன்றே பல சிறப்புக்களுடன், மற்றொரு தற்காப்புக் கலையான 'தைக்வொ–ண்டோ' (Taekwondo) திகழுகிறது. கொரியாவில் பிறந்த இக்கலை, தற்போது சர்வதேசமெங்கும் பிரபல்யமான விளையாட்டாக விரிவடைந்துள்ளது. ஆயினும் இக்கலையைப்பயிலும் தமிழர்கள் மிகக்குறைவு. குறிப்பாகப் பெண்கள் அந்தப்பக்கம் எட்டியும் பார்ப்பதில்லை.

இந்நிலையில், இளம் தமிழ்ப் பெண் ஒருவர் இக்கலையில், சர்வதேச அளவில் புகழடைந்து வருவதை அறிந்து, 'புகலிட ஊற்றுக்கள்' பகுதிக்காக அவரை அணுகினோம்.

'உங்களைப்பற்றிச் சொல்லுங்களேன்?'

'என்ர பெயர் தர்சினி தேவதாசன், வயசு 22. யாழ்ப்பாணம் கொக்குவில் எங்கட இடம். இப்ப ஜேர்மனில Hildesheim எண்ட இடத்தில அப்பா, அம்மாவோட இருக்கிறன்.'



1996 இல் உலகக்கோப்பைக்கான போட்டியில் 4வது இடம்

## சாதனைப் பட்டியல்

| | |
|---|---|
| 1985 | ஆரம்பம் |
| 1989–1998 | நீடாசிக்ஸன் மாநிலத்தில் முதலாமிடம் |
| 1993–1998 | வட ஜேர்மனில் முதலாமிடம் |
| 1993–1998 | ஜேர்மன் சர்வதேசப் போட்டியில் முதலாமிடம் |
| 1994–1995 | கொங்ஹொங் சர்வதேசப் போட்டியில் இரண்டாமிடம் |
| 1994–1998 | ஆஸ்திரியாப் போட்டியில் முதலாமிடம் |
| 1994–1997 | ஜேர்மனியில் முதலாமிடம் |
| 1994 | ஜேர்மன் சர்வதேசத் தைக்வொண்தோ குழுவிற்குத் தெரிவு. |
| 1994 | ஒக்டோபர் – ஜேர்மன் முதல்தர தைக்வொண்தோ வீராங்கனையாகத் தெரிவு |
| 1994, 1996 | ஐரோப்பியப் போட்டியில் மூன்றாமிடம் |
| 1995 | மணிலாவில் நடைபெற்ற சர்வதேசப் போட்டியில் நான்காமிடம் |
| 1996 | தைக்வொண்தோ சர்வதேச சம்பியன் வெற்றிக்கிண்ணப்போட்டியில் நான்காமிடம். |
| 1996 | இளவயதினர்க்கான ஜேர்மன் போட்டியில் முதலாமிடம் |
| 1997 | கொங்ஹொங்கில் நடைபெற்ற சர்வதேசச் சம்பியன் போட்டியில் நான்காமிடம் |
| 1996–1998 | கொங்ஹொங் சர்வதேசப் போட்டியில் முதலாமிடம் |
| 1998 | ஒக்டோபர் இத்தாலியில் நடைபெற்ற சர்வதேசப் போட்டியில் இரண்டாமிடம் |

'பெண் பிள்ளையாக இருந்தும் எப்படி இக்கலையைத் தேர்ந்தெடுத்தீர்கள்?' எனக் கேட்க, அவளது தந்தை தேவதாசன் பதிலளித்தார். 'நான் ஊரில கராத்தே, குங்




1995 இல் தர்சினி ஐரோப்பிய சம்பியனாகத் தெரிவு

பூவில 'பிளக் பெல்ட்' எடுத்தனான். என்ர பிள்ளையளும் இப்பிடியான துறையளில படிக்க வேணும். முன்னுக்கு வரவேணும் எண்டது என்ர விருப்பம். அதால தான் இந்தத் துறையளில இவைய ஈடுபட வைச்சன். அவவும் இதில நல்ல ஆர்வமாயிருந்தா. உண்மையிலேயே என்ர விருப்பத்த என்ர மகள் செய்து காட்டிறது சந்தோசம்.'

பிலிப்பைன்ஸ், கொங்கொங், நெதர்லாந்து, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டு பலபரிசுகளைப் பெற்றதாகக்கூறும் தர்சினியிடம், 'உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத நிகழ்ச்சிகளைப பற்றிச் சொல்லுங்களேன்' என்றதும் உற்சாகமாகத் தொடங்கினார்.

'யூகோஸ்லாவியாவின் சாகரப் நகரில நடந்த போட்டி நிகழ்ச்சியில நான் ஜேர்மன் தேசியக்கொடியை ஏந்திக்கொண்டு முன்னுக்குப்போக, எனக்குப் பின்னால ஜேர்மன் விளையாட்டு வீரர்கள் அணிவகுத்து வந்தவை. என்ர வாழ்நாளிலேயே மறக்க முடியாத நிகழ்ச்சியளில இது முக்கியமானது. எல்லாருக்கும் இப்பிடியான அதிஸ்டமான சந்தர்ப்பங்கள் லேசில கிடைக்காது. அதோட ஜேர்மனுக்கு வெளியால, நான் கலந்து கொண்ட முதல் போட்டி அது. அண்டைக்கு நடந்த போட்டியில ஜேர்மன் விளையாட்டுக் கழகத்தின்ர சார்பில மூண்டாவது இடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டன். என்ர கோச்சரும் சரியான சந்தோசப் பட்டார். அண்டைக்கு முழுவதும் உண்மையாவே நான் சரியான உற்சாகமா, சந்தோசமாயிருந்தன்.' கூறும் போதே முகத்தில் பூரிப்புத் தெரிந்தது. தொடர்ந்து, 'பிலிப்பைன்ஸ் நாட்டின்ர தலைநகரான மணிலாவில 1995ம் ஆண்டு சர்வதேசப்போட்டியளில கலந்து கொள்ளேக்க, என்ர வலது காலில அடிபட்டுப் போச்சு. காலின்ர நரம்புகள் தாக்குப்பட்டிட்டுதெண்டு டொக்டர்மார் சொல்லி, இறுதிப் போட்டிகளில பங்குபற்ற வேண்டாம் எண்டு சொல்ல கவலையா இருந்தது. ஆனாலும் புள்ளியளின்ர அடிப்படையில நான் அந்தப் போட்டியில நாலாம் இடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டன். போட்டியளில காயப்பட்டது இது தான் முதல் தரம்' எனக் கூறுபவர், சில மாதங்கள் மருத்துவ சிகிச்சை பெற்றதன் பின், மீண்டும் உறுதியுடன் பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிகளையும் குவித்துள்ளதாகக் கூறுகின்றார்.

'யூகோஸ்லாவியாவில நடைபெற்ற போட்டியில நீங்க ஜேர்மன் தேசியக்கொடிய முன்னுக்குக் கொண்டு போனதாகச் சொன்னனீங்க. அப்ப உங்களோட வந்த ஜேர்மன் வீரர்களின்ர நிலை எப்படி இருந்தது?'

'அவையளும் சந்தோசப்பட்டினம். ஜேர்மனியர் எல்லாரும் வெள்ளை ஆக்கள் எண்டது எல்லாருக்கும் தெரியும். நான் ஜேர்மனியர் இல்லை எண்டத எண்ட நிறமே காட்டிக்கொடுத்திடும். ஆனா அந்த இடத்தில நானும் ஒரு ஜேர்மனியரா தான் உணர்றன், அவையளும் என்னை அப்பிடித்தான் பாக்கினம். இன்னும் சொன்னா அவையள் அதை விரும்பிச்சினம்' என்கின்றார்.

'தொடக்கத்தில இது கொரியாவில பிறந்த கலை எண்டு சொல்லியிருந்தீங்கள். கொரியப் போட்டியாளர்கள் பற்றிச்சொல்ல முடியுமா?' என்ற போது 'மனிலாவில நடந்த போட்டியில கொரியர்களும் கலந்து கொண்டவை. அவையளின்ர கலை எண்டதால, கூடுதலா சர்வதேசப் போட்டியளில அவைதான் முதலாவதா வருவினம். இன்னொண்டு, போட்டியின்ர தொடக்கத்தில கொரியரோட விளையாடுறத மற்ற நாட்டுக்காரர் விரும்பிறதில்ல. போட்டியினர தொடக்கத்திலேயே தோத்திடுவமோ எண்ட பயம் தான் இதுக்குக் காரணம்.' என்பவர் கொரியர்களுடனும் விளையாடியுள்ளாராம்.

### போராட்டம் பற்றி...

"தமிழாக்களுக்கு எண்டு ஒரு நாடு கட்டாயம் வேணும். அப்பதான், எங்கட ஆக்கள் அமைதியா வாழ ஏலும். எங்கட போராளியளுக்கு கெதியா வெற்றி கிடைக்க வேணும். அப்பதான் தமிழாக்களிண்ட கஷ்டங்கள் எல்லாம் கெதியாத் தீரும்."

'நாங்க இருக்கிற இடத்தில 'Victory Sports Club', 'Sports School Schühardt' எண்ட பேரில ரெண்டு விளையாட்டுக் கழகங்கள நடத்திக் கொண்டிருக்கிறன. இங்க Taekwondo (தைக்வோண்டோ), Strefen Fight (குழுப்பயிற்சி), Aerobic Lauftreff (ஆடற்பயிற்சி), Selbstverteidigungs kurse (பாதுகாப் புக்கலை) Gymnastic (ஜிம்னாஸ்டிக்), Indischertqnz (பரத நாட்டியம்), Fahrradtreff (சைக்கிளில் ஒன்று கூடல்) எல்லாம் பழக்கிறம்' என்பவள், சர்வதேச ரீதியில் தமிழர்கள், குறிப்பாகப் பெண்கள் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும். பரிசுகளைத் தட்டிக் கொள்ள வேண்டும். தமிழர்களாலும் முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டே தான் இயங்கி வருவதாகக் கூறுகின்றார்.



97-ம் ஆண்டு டென்மார்க்கில் கிடைத்த வெற்றியின்போது

## புகலிட ஊற்றுக்கள்

இவ்வருடம் இவர் கலந்து கொள்ள வேண்டிய போட்டிகள் பற்றி விசாரிக்க, 'வாற மே மாதம் கனடாவில நடக்க இருக்கிற சர்வதேச சம்பியன் போட்டிக்கு கூடின புள்ளிகள் பெற்றுதெரிவாகியிருக்கிறன், ஜேர்மன் வீராங்கனையா பங்குபற்றுறன். இத விட ஜேர்மனியிலும் முக்கியமான ரெண்டு போட்டியளில பங்குபற்ற இருக்கிறன். அதோட முக்கியமா 2000-ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடக்க இருக்கிற ஒலிம்பிக் போட்டிக்கும் ஜேர்மன் நாட்டின் சார்பாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறன்' எனக்கூறுபவள், பலரையும், குறிப்பாகச் சிறுவர்களை இவ்விளையாட்டில் ஈடுபடுத்துவதற்காகவும், போட்டிகளுக்குத் தயார் படுத்துவதற்காகவும் விளையாட்டுக்கழகங்களை ஆரம்பித்து நடாத்தி வருவதாகக் கூறுகின்றாள்.



1994 இல் ஜேர்மன் சம்பியனாகத் தெரிவு – தனது பயிற்சியாளர், மெய்ப்பாதுகாவலர், மருத்துவர் குழு மற்றும் தன் சகாக்களுடன்

இவளது முயற்சிகள் வெற்றி பெற ஈழமுரசு வாழ்த்துகின்றது.

– வீ.ஆர்.வரதராஜா

# பனிமழையில் பணியக ஒளிவிழா

டென்மார்க்கில் 05.12.98 அன்று Holstebro நகரில் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தினால் நடாத்தப்பட்ட ஒளிவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பணியக இயக்குநர் அருட்திரு. ஜுட்குலாஸ் அடிகள் விடுத்த அழைப்பினை ஏற்று, விடாது கொட்டிய கடும் பனி மழையினையும் பொருட்படுத்தாது பெரும் தொகையான மக்கள் பங்குபற்றி விழாவைச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவின் பொழுது, உப்புவெளி, திருகோணமலையில் உள்ள யாழ் முதியோர் இல்லத்திற்கு உதவும் முகமாக, பணியக இயக்குநரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, பெரும் தொகையான மக்கள் தாமாகவே முன்வந்து நிதியுதவி வழங்கியதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. அத்துடன் அதிர்ஷ்டலாபச்சீட்டின் மூலம் பெறப்பட்ட பணமும் இம் முதியோர் இல்லத்திற்கே அனுப்பி வைக்கப்பட இருக்கின்றது.

இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த டென்மார்க் குரவர்கள் இருவராலும் மங்கல விளக்கேற்றிய பின்பு, ஜேர்மனி பணியக இயக்குநர் அருட்திரு. ஜெயசேகரம் அடிகள் அவர்களின் பிரதிநிதிகளாக வருகைதந்து சிறப்பித்த கலைமாமணி பாஷையூர் யேசுதாசன், தொடுவானம் பத்திரிகையின் செயலர் பிரான்சிஸ்சேவியர், பணியக உறுப்பினர் றூபன், நடன ஆசிரியை செல்வி கீதாஞ்சலி சேவியர் ஆகியோரால் தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டு விழா ஆரம்பமானது

*AALBORG* பங்குத் தந்தை அருட்திரு. *ALLEN COURTEAU* அவர்களின் சிறப்புரை விழாவிற்கு மகுடம் சூட்டியதாக அமைந்தது. இவ்விழாவில் பணியகத்தின் பன்னிரண்டு (நிர்வாகப்) பங்குகட்கிடையே சிறுவர் நிகழ்ச்சியும், மேற்படி பங்குகட்கிடையே போட்டி அடிப்படையில் விவிலியக்கேள்வி பதில், நடனம், நாடகம், கறோல் பாடல் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நடன நிகழ்ச்சியில் Aarhus-Randers பங்கும், நாடகத்தில் Herning பங்கும், கறோல் பாடல் நிகழ்ச்சியில் Frederikshavn பங்கும் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டன. அதிர்ஸ்டலாபச் சீட்டில் முதலாவது பரிசையும் Aarhus-Randers பங்கைச் சேர்ந்தவரே தட்டிக்கொண்டார்.

நாடகத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட Herning பங்கு மக்கள், தமது பரிசுத் தொகையை யாழ்.முதியோர் இல்லத்திற்கே அன்பளிப்புச் செய்தமையை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். இவ்விழாவிற்குரிய சகல ஏற்பாடுகளையும் பணியக இயக்குநரும், Holstebro -Struer தமிழ்மக்களும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தனர். இறுதியாக இவ்விழா சிறப்பாக நடைபெற உதவி வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் பணியக இயக்குநர் நன்றி கூறியதுடன் ஒளிவிழா இனிதே நிறைவுபெற்றது.

டென்மார்க்கில் தமிழ்க்கத்தோலிக்க மக்கள் மிக, மிகச் சிறுபான்மையினராக இருந்த போதிலும், தமிழ்க்கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் குறுகிய காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து பெரிய விழாக்களையும், நிகழ்ச்சிகளையும், திருவிழாக்களையும் நடாத்துவதோடு வருடந்தோறும் தாயக மக்களுக்கும் இயன்றளவு உதவி புரிவது பாராட்டுக்குரியதாகும்.

*– தோமஸ் இராசநாயகம்*

# புகலிட நிகழ்வுகள்

## 'சோதியா கலைக் கல்லூரியின் பொங்கல்விழா'

சோதியா கலைக்கல்லூரியின் பொங்கல்விழா 17.01.99 ஞாயிறன்று பிற்பகல் 14.00 மணிக்கு தமிழ்ச்சோலை மண்டபத்தில் நடைபெற்றது.



மாவீரர்கள், மக்களுக்கான அமைதி வணக்கத்துடன் கலைக் கல்லூரி மாணவிகளின் நடனங்கள், பாட்டுக்கள், பேச்சுபோன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இவ் விழாவிற்கு தமிழ்ச்சோலை தலைமை செயலகப் பொறுப்பாளர் திரு. முகுந்தன் கலந்துகொண்டு தமிழ் மொழியின் அவசியம் பற்றியும், எமது மொழி, கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், இதற்கு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தமிழ் மொழிஅறிவுள்ள பிள்ளைகளாக வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## ஈழநாதத்தின்

# சுதந்திர வீரர்

கடந்த 05.12.1998 அன்று சுவிஸ், பேர்ண் நகரில் நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்வுகளின்போது, சுவிஸ் நாட்டில் கடந்த ஏழு வருடங்களாக ஒலிபரப்பாகி வரும் ஈழநாதம் வானோசை தனது முதலாவது வெளியீடு ஒன்றினை வெளிக்கொண்டு வந்தது. தனது வாராந்த ஒலிபரப்பில் இடம்பெறும் மாவீரர்கள் நினைவுகள் நிகழ்ச்சியினைத் தொகுத்து சுதந்திரவீரர் எனும் மாவீரர் நினைவுப் பெட்டகமாக இந்நூல் வெளியீடு அமைந்திருந்தது. தமிழீழ தேசத்தின் விடுதலை வேண்டி, களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூருவது மட்டுமல்லாது அவர்களது வீரத்தை, தியாகசிந்தையை, அர்ப்பணிப்புணர்வை, தாயகம் மீது அவர்கள் கொண்ட மாறாத பற்றுறுதியை பதிவாக்கி வரலாற்றுக்குரியதாக்கும் இந்த முதல் முயற்சியில் 24 மாவீரர்களின் நினைவுகள் மீட்கப்பட்டுள்ளன. சங்கர் தொடங்கி, வேற்றுமண்ணிலே வித்தாகிப்போன கஜன், நாதன் உட்பட்ட மாவீரர்களின் நினைவுகளை, அவர்களுடன் உடனிருந்த நண்பர்கள், உறவினர்களின் பசுமையான உள்ளத்து நினைவாக உறுதிதரும், உணர்வுகளாகத் தாங்கி வெளிவந்துள்ளது, 'சுதந்திரவீரர்கள்'.

பிரதிகள் பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Radio eelanatham
Post fach-2257
8031-Zurich
Switzerland

குறிப்பு: இந்நூலில் லெப். கேணல் நவம் என்பது தவறுதலாக மேஜர்.நவம் என்று சில பிரதிகளில் அச்சிடப்பட்டுள்ளன. தவறினை திருத்தி வாசிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

## யாழ் மத்திய கல்லூரி

# பழைய மாணவர்களால் நடாத்தப்படும் நம் தாயகம் நோக்கிய இரண்டாவது பணி

சுவிஸ் வாழ் யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து நம்மண்ணில் போரினால் கால்களை இழந்த நம் உறவுகளுக்கு உதவுமுகமாக இருசக்கர நாற்காலிகளை வழங்குவதற்காக நிதி சேகரிப்புத்திட்டம் ஒன்றை நடாத்த முன்வந்துள்ளனர்.

1996-ம் ஆண்டின் இறுதியில் முதன்முதலாக . சுவிஸ் வாழ் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து தமிழீழத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உவுமுகமாக 21,000 SFR பணத்தினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் உதவிப்பணத்தில் ஒவ்வொரு சுவிஸ் வாழ் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களினதும், அபிமானிகளினதும் பங்களிப்பு இருந்தது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் 1998ம் ஆண்டின் இறுதியில், நம் தேசத்தில் போராட்டச் சூழலினால் கால்களை இழந்து பாதிக்கப்பட்டுள்ள நம் உறவுகளுக்கு, இரு சக்கர நாற்காலிகளை வழங்கத்திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்திற்கான நிதியை சுவிஸ் வாழ் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களிடமிருந்து மட்டுமே பெற விரும்புகிறோம்.

நன்றி

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| தர்மதாஸ் | 079 312 80 37 |
| ரகு | 032 652 02 66 |
| சுதா | 076 375 09 66 |
| அருள் | 079 408 36 56 |

உங்கள் உதவிக்கரங்களை
வேண்டிநிற்கும்
யாழ் மத்திய கல்லூரி
*பழைய மாணவர்கள் [சுவிஸ்]*


# NÆKØB -DKS Video

Danmark பதறேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குப்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு புதிய சேவைகள்

***February 10-ம் திகதி முதல்***

## *Nærkøb Travels*

உங்கள் பிரயாணத்துக்குரிய
விமானச்சீட்டுக்களை மலிவான
விலையில் உரிய நேரத்தில் இனி
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி: 75915840
தொலைநகல்: 75915004

*(நாள்தோறும் காலை 7.00 மணிதொடக்கம் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்)*

***ஆரம்பமாகிவிட்டது***

## *Nærkøb Money Exchange*

30 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை
அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த
இடத்துக்கும் கொடுக்கவோ/
பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம்
பெற்ற் ஒரு நிறுவனம் என்பதை மிக
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

*Nærkøb DK's Video*
*Korskærvei 104* (கோஸ்கர்வாய் 104)
*DK 7000 Fredericia*
*Tlf: 75915804.*



**தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி**
**பழையமாணவர் சங்கம் பிரெஞ்சுக் கிளையினர்**
**நடாத்தும்**

ஸ்தாபகர்
பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை அவர்களின் நினைவாக

## சிறுகதைப்போட்டி 1999

**படைப்பாளிகளே! பாரிற்சிறந்தவர்களே!**
**இனிக்கும் செந்தமிழ்கொண்டு சிறக்கின்ற சந்ததிக்காய் பிறக்கட்டும் சீர்மிக்க செய்திகொண்ட சிறுகதைகள்.**

★ எப்பொருளையும் கருவாக்கி எழுதலாம். பக்கக் கட்டுப்பாடு கிடையாது.
★ பிரசுரமாகாத படைப்பாக இருக்கவேண்டும்.
★ எவரும் எந்தநாட்டிலிருந்தும் பங்குபற்றலாம்.

**போட்டி முடிவு திகதி 24.06.1999**

அனுப்பவேண்டிய முகவரி: *Mahajana College O.S.A*
*P. Karunaivel*
*3 Square jodelet,*
*93420 Villepinte,*
*France.*

# பாரிசில் ஒளி விழா

கடந்த 24.01.99 ஞாயிறு மாலை, புனர்வாழ்வுக் கழகத்தினரின் பனியோலே, மொந்றோய் கிளையினரால் நடாத்தப்பட்ட ஒளி விழா அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகியது. மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து நடனங்கள், பேச்சுக்கள், தமிழீழத்தின் உண்மைநிகழ்வுகள் விபரணச் சித்திரம், வில்லுப்பாட்டு எழுச்சிப்பாடல்கள், நாடகம், பட்டிமன்றம் என பல நிகழ்ச்சிகள் நடந்தன.

திருமதி தனலட்சுமி பாலச்சந்திரன் அவர்களின் மாணவிகள் வரவேற்பு நடனத்தையும், கோலாட்டத்தையும் தந்திருந்தனர். கோலாட்டம் பலரினாலும் பாராட்டப்பட்டதை அவதானிக்க முடிந்தது. திரு.தயாளசிங்கம், திருமதி கௌசலா ஆனந்தராஜா ஆகியோரின் மாணவிகள் மரபுக்கமைந்த பரதநாட்டிய உருப்படிகளை வழங்கியிருந்தனர். நடனங்களுக்கான உடைகள் நகைகளில் ஆடம்பரத்தைக் குறைப்பதைப் பற்றியும், கவனம் செலுத்துவதைப் பற்றியும் ஏற்கனவே பலமுறை கூறியும் கவனத்திற்கொள்ளாதது தெரிந்தது. எழுச்சிப் பாடல்கள் எதற்கும் யாரும் அபிநயிக்காதது குறையாக இருந்தது.

பாரிஸ் முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குருக்கள் பகதீஸ்வர ஐயர் அவர்கள், வண.பிதா அல்போன்ஸ் மாணிக்கம் அடிகளார் ஆகியோர் தமது உரைகளில் 'இந்த ஒளிவிழா நாட்டில் வாழும் எமது சகோதரர்களுக்கு ஒளியை ஏற்றும் விழாவாக அமைய வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தனர்.

ஆசிரியை திருமதி லீலா சண்முகதாசனின் மாணவ மாணவிகள் இரண்டு எழுச்சிப்பாடல்களைப் பாடியிருந்தார்கள்.

தாயகத்தை மறந்து வெளிநாடுகளில் கேளிக்கைகளில் ஈடுபட்டவர்கள் திருந்துவதாக அமைந்திருந்தது 'அவலங்களின் மறுபக்கம்' செல்வி மதனா சபாரத்தினம் விடுதலைப் போராட்டமும் அதற்கு முந்திய அடக்குமுறைக்கால கட்டங்களையும் வருட ரீதியாக பிரெஞ்சு மொழியில் பிரெஞ்சு மக்களுக்கு எடுத்துக்கூறினார்.

யாழ்.நாச்சிமார் கோவிலடி ராஜன் குழுவினர் வழங்கிய 'மன மாற்றம்' வில்லுப்பாட்டு மக்களைக் கவர்ந்ததாகத் தெரியவில்லை. போதிய பயிற்சி இன்மையையும் அவதானிக்க முடிந்தது.

பிரெஞ்சுப் பணியகப் பொறுப்பாளர் சிறப்புரையைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திரு.விநாயகமூர்த்தி அவர்கள் உரையாற்றினார்கள். தொடர்ந்து மண்டபத்தில் சேகரிக்கப்பட்ட 'மடிப்பிச்சை'யின்போது 5300 பிரெஞ்சு பிராங்குகளும், சில மோதிரங்களும் திரட்டப்பட்டன.

பிரெஞ்சு வண.பிதா ரெனே அவர்களும் பசிக்கெதிரானதும் அபிவிருத்திக்கானதுமான சங்கத்தைச் (Comité Contre la Faim et Dévelopement) சேர்ந்த திருமதி ஆந்திரே அவர்களும் உரையாற்றினார்கள். 'உங்கள் கலைகளின் கதவுகளைத் திறந்து மற்றவர்களுடனும் உங்கள் கலைகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு சகோதரத்துவமான பூமி கிடைக்கும் வரை தொடர்ந்தும் போராடுங்கள்' என அவர்கள் கூறினார்கள்.

பாரிஸ் 'கலைக்கோவில்' வழங்கிய நாடகக்கூத்து கருவற்ற 'கூத்தாக' இருந்தது.

இறுதி நிகழ்ச்சியாக 'வெளிநாடுகளில் வாழும் இளம் தமிழ் சமுதாயத்திற்கு எதிர்காலத்தில் தமிழ்மொழி, கலை, கலாச்சாரம் அவசியமா?' எனும் தலைப்பிலான பட்டிமன்றம் இடம்பெற்றது. பட்டிமன்றங்களுக்கான தலைப்புகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? பல நிகழ்ச்சிகளை ஒரே மேடையில் திணித்ததுபோன்ற கனமான ஒரு தோற்றம் காணப்பட்டது.

மேடையின் பின்னணியில் வரையப்பட்டிருந்த வன்னி மண்ணின் நிலையும் குறிப்புக்களும் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. வன்னி மக்களுக்கு ஒளியேற்ற என நடாத்தப்பட்ட இந் நிகழ்ச்சியில் 51,000 பிரெஞ்சுப் பிராங்குகள் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

இவ்விழாவிற்கு மண்டபம் நிறைந்த மக்கள் வருகைதந்திருந்ததும், அதில் கணிசமான பகுதியினர் பிரெஞ்சு மக்களாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுற்றன.

# தமிழால் எதுவும் முடியும்

## - மணவை முஸ்தபா -

கடந்த 19.01.99 செவ்வாய் மாலை 7 மணியளவில் தமிழ்ச்சோலை தலைமைப் பணியகத்தின் ஏற்பாட்டினால் லாசப்பலில் அமைந்துள்ள பாரிஸ் தமிழ்ச்சோலை மண்டபத்தில் 'தமிழால் முடியும்' எனும் தலைப்பில் சொற்பொழிவொன்று ஆற்றப்பட்டது.

திரு. கி.பி. அரவிந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த தமிழறிஞர் திருமணவை முஸ்தபா அவர்கள் தமிழின் சிறப்புப் பற்றி விளக்கி சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

தமிழின் தொன்மை, அது பரந்து கடல்கடந்து சென்ற தன்மை, ஆழவேரோடியிருக்கும் அதன் பெருமை என வரலாற்று ரீதியாகத் தமிழ்பற்றியும், தமிழன் பற்றியும் விளக்கியவர், தமிழால் எதுவும் முடியும் எனக்கூறி தமிழனாய் பிறந்ததற்கு நாம் பெருமைப்படவேண்டும் எனவும் உணர்ச்சியுடன் கூறினார்.

இவர் UNESCO (ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டுக் கழகம்) வெளியிடும் 'யுனெஸ்கோ கூரியர்' தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராகக் கடந்த 32 வருடங்களாகப் பணியாற்றிவருகின்றார்.

30 மொழிகளில் வெளிவரும் இச் சர்வதேச சஞ்சிகையின் தமிழ்ப்பதிப்பு தரத்தில் 4ம் இடத்தில் இருப்பதாகப் பெருமையுடன் கூறிக்கொண்டதுடன், அதற்கான மொழிபெயர்ப்பின் போது தான் தமிழில் புதிதாகப் பல சொற்களை உருவாக்குவதாகவும் கூறினார்.

தமிழை அறிவியல் மொழியாக மாற்றுவதிலும் தமிழிற்கான புதுப்புதுச் சொற்களை உருவாக்குவதிலும் மிக ஆர்வமாகச் செயற்படும் இவர் சிறந்த ஒரு மொழிபெயர்ப்பாளன் என்பதுடன் அறிவியல் தமிழ் பெயர்ப்பாளர்கள் என்பதுடன் அறிவியல் தமிழ் அகராதிகள் பலவற்றை உருவாக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மலேசிய சட்டங்களை தமிழில் மொழிபெயர்த்து தந்துள்ளதாகச் கூறியவர் இதுவரை தமிழில் எட்டு லட்சம் சொற்களை உருவாக்கியுள்ளதாகவும் இன்னும் 2 லட்சம் சொற்களை உருவாக்குவதே தனது இலட்சியம் எனவும் கூறினார். ஒருசொல் உருவாக்கத்திற்கு அதன் வேர்களைத் தேடிச்செல்வதும், அதனை உருவாக்குவதும் ஒரு குழந்தைப் பிரசவத்துக்குச் சமனான வேதனை எனக் கூறும் இவர், கணினி சம்பந்தமாக 26000 சொற்களை உருவாக்கியுள்ளார். இதில் பல சொற்கள் இன்னமும் ஆங்கிலத்திலேயே பாவனைக்கு வராத சொற்களாயினும், எதிர்காலத்தில் தமிழனுக்கு உள்ள தேவையை முன்னிட்டுத்தான் இவையை உருவாக்கியுள்ளதாகக் கூறுகின்றார். இவர் உருவாக்கியுள்ள சொற்களில் இதுவரை ஒரு இலட்சம் சொற்களே பதிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனவும் கூறினார். இறுதியில், பொங்கல் தமிழர் விழா என்பதற்கு விளக்கமளித்ததுடன் கூட்டம் நிறைவுள்ளது. இந்நிகழ்வு ஒளியிழை நாடாவில் வெளிவரவுள்ளது.



16.01.99 இல் சுவிஸ் லவுசானில் நடந்த நிகழ்வில் கவியரங்கம்

# கைசஸ் லவுட்டனில் புனர்வாழ்வு பொங்கல்

கடந்த 23.01.99 சனியன்று உலகத் தமிழர் இயக்க ஜேர்மனிக்கிளையின் கல்விப் பணியகத்தால் நடாத்தப்பட்டு வரும் தமிழாலயங்களில் நொயிஸ்ரட் (Neustadt), மன்கைம் (Manheim), கைசஸ்லவுட்டன் (Kaiseslautern), புறுக்சால் (Bruchal), சின்ஸ்கைம் (Sinsheim) ஆகிய ஐந்தும் இணைந்து பொங்கல் விழா மூலம் மண்ணின் நினைவுகளை மீட்டன.

அமைதி வணக்கத்துடன் ஆரம்பித்த விழா மாணவர், ஆசிரியர்களின் கலைப்படைப்புக்களுடன் தொடர்ந்தது. அத்துடன் பாடசாலைச் சீருடையில் மாணவர்கள் காட்சியளித்தமை பார்வையாளர்களிற்கு அவர்களின் கல்விப் பராயத்தை நினைவுக்குக்கொண்டுவந்திருக்கும். மண்டப மேடையை அலங்கரிக்க மாணவர்கள் எடுத்த முயற்சிக்கு ஓவியங்கள் சாட்சியமானது.



எமது பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான பரதக் கலையை, இன்றைய காலகட்டத்தின் தேவையை உணர்ந்து மக்கள் முன் எடுத்துச்செல்லும் வகையில் விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக்கழக நடன ஆசிரியைகளான வானதி தேசிங்குராஜா, சாவித்திரி இமானுவேல் அவர்களின் பாடல் தெரிவுகளுக்கு மாணவ, மாணவிகளின் முகபாவங்களுடன் கூடிய அபிநயங்கள் பார்வையாளர்களை நிச்சயம் சிந்திக்க வைத்திருக்கும்.

உதஇ. கல்விப்பணியின் ஆசிரியர்கள் ஆசிரியைகள் கௌரவிக்கப்பட்டனர்.

அரங்கத்தில் சேர்க்கப்பட்ட நிதி புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. நன்றியுரையிடன் விழா இனிதாக நிறைவடைந்தது.

Restaurant **Royal Tandoori**

**100 உணவுகளுக்கு மேல் ஓடர் செய்தால்**

★ கொத்துரொட்டி, மரக்கறி உணவு-18FF
★ அசைவ உணவு, புரியாணி, இடியப்பம் [கறியுடன்]- 20 FF
★ ஞாயிற்றுக் கிழமைகளில் 50 பேருக்கு உட்பட்ட கொண்டாட்டத்திற்கு [மண்டபத்துடன்] ஒருவருக்கு 50 பிராங்குகள் மட்டுமே.
[சிற்றுண்டி, உணவு, குளிர்பானத்துடன்]


*Specialite Indienne*

*66, Rue du Fg. Poissonniere,*
*75010 Paris*
*Mo: Poissonniere / Cadet*
*Tel: 01 42 46 00 72 - Mobil: 0603532297*

Pub


## பத்து வருடங்களின் பின் நடைபெற்ற போட்டி
# பாகிஸ்தான் அணி வெற்றி

1989ம் ஆண்டுக்குப் பின் டெஸ்ட் போட்டிகளை சந்திக்கும் இந்தியாவும் பாகிஸ்தானும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி 28.01.99 அன்று 3000க்கு மேற்பட்ட பொலிசார், இராணுவத்தினர் பாதுகாப்புக்கு மத்தியில் சென்னையில் ஆரம்பமானது. பூவா, தலையா தெரிவில் வெற்றி



ரமேஸ்

கொண்ட பாகிஸ்தான் முதலில் துடுப்பாட்டத்தை தேர்ந்தெடுத்தது. சிறிநாத்தின் வேகப் பந்துக்கு ஆரம்ப துடுப்பாட்டக்காரர்கள் இருவரும் ஆட்டமிழக்க இந்தியாவின் பக்கம் போட்டி திரும்பியது. ஆனாலும் இடைநிலை வீரர்கள் மொய்கான் 60 ஓட்டங்களையும் யூசப் 53 ஓட்டங்களையும் பெற்று பாகிஸ்தானை 238 வரை உயர்த்தினர். என்றுமே சுழல்பந்து வீச்சாளருக்கு கரம் கொடுக்கும் இந்த சென்னை சேப்பாக்கம் அரங்கு இந்திய சுழல்பந்துவீச்சாளர் கும்பிளேயின் கணக்கிற்கு 6 விக்கட்டுகளை கழற்றியது. சிறிய எண்ணிக்கையை கடப்பதற்காக துடுப்பாடிய இந்திய அணிக்கு தமிழகத்திலிருந்து ஒரு ஆரம்ப ஆட்டக்காரனாக சடகோபன் ரமேஸ் அறிமுகமானார். உலகை ஒரு கலக்கு கலக்கிய அதிரடி வீரன் கிருஷ்ணமாச்சாரி சிறிகாந்துக்கு பின் ஒரு தமிழக வீரன் ஆரம்ப ஆட்டக்காரனாக அறிமுகமாகியதில் சொந்த அரங்கம் ஆனந்த பரவசப்பட்டது. இந்த ஆனந்தத்திற்கு பதில் சொல்லவேண்டிய ராமேசும் தன் கன்னியாட்டத்தை அதிரடி ஆட்டமாகவே ஆரம்பித்து 43 ஓட்டங்களை குவித்தார். ரமேஸ் எல்லைக் கோட்டைத்தாண்டி பலமுறை நாலுகள் அடித்தபோது மீண்டும் ஒரு சிறிகாந் கிடைத்துவிட்ட உணர்வை மக்களின் கைதட்டல் சொல்லியது. 1989-ம் ஆண்டு சிறிகாந் தலமையில் பாகிஸ்தான் சென்ற இந்திய அணியிலிருந்து புதிய பிரட்மனான டென்டூல்கர் அறிமுகமானதும் குறிப்பிடத்தக்கது. மறுபடியும் பாகிஸ்தானுக்கெதிராக புதிய ஒரு வீரனை தமிழகம் கொடுத்திருப்பதும் பெருமையே. இடதுகை ஆட்டக்காரனான ரமேசின் ஆரம்பம் இந்திய அணிக்கு நல்ல ஆரம்பமாக்கிய போதும் (67/0) தொடர்ந்துவந்த அனுபவ வீரர்களான டெண்டுல்கர், அசாருதீன் ஆகியோர் சோபிக்கவில்லை. ஆனாலும் நுணுக்க வீரன் ட்ராவிட் கங்குலியுடன் இணைந்து நிதானமாக ஆடி முறையே 53, 54 ஓட்டங்களை பெற்றனர். இறுதியில் இந்தியா 16 ஓட்டங்கள் மேலதிகமாக 254 ஓட்டங்களையே பெற்றது. இந்த சுழல்பந்து மைதானம் பாகிஸ்தான் சுழல் பந்து வீச்சாளர் சலைன் முஸ்ராக்கிற்கும் கைகொடுக்க தவறாதவிதமாக 5 விக்கட்டுகள் வீழ்ந்தன. இரண்டாவது இனிங்சை ஆடிய பாகிஸ்தான் முன்னரைவிட நிதானமாக ஆட முற்பட்டது. ஆரம்பவீரன் அஃபறி ஆவேசமாக ஆடி 141 ஓட்டங்களையும் இசாம் உல்ஷக் 51 ஓட்டங்களையும் பெற்று பாகிஸ்தானுக்கு 286 ஓட்டங்களை தேடினர். ஒருகட்டத்தில் 275/4 என்ற நிலையிலிருந்த பாகிஸ்தானை மிக துல்லிமாக பந்துவீசி அசத்தியவர் பிரசாத். இவர் தனது இறுதி 18 பந்துகளில் ஓட்டமேதும் கொடுக்காமல் 5 விக்கட்டுகளை சாய்த்தார். அத்தோடு இவரின் சிறந்த பந்துவீச்சாக 33 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளும் கிடைத்தது. 271 ஓட்டங்கள் என்னும் வெற்றியின் இலக்கை நோக்கிய இந்தியா ஆரம்பத்தில் முன்னணி வீரர்களை இழந்து (82/5) மிகவும் சோதனையான நிலைக்கு ஆளானபோது டென்டுல்கர் மட்டும் ஆட்டமிழக்காமல் இருந்து தனிமனிதனாக மொங்கியாவுடன் ஓட்டத்தை குவிக்க



முஸ்ராக் அகமெட்

முனைந்தார். இருவரும் 6-வது விக்கட் இணைப்பாட்டமாக 136 ஓட்டங்களை பெற்றபோது 52 ஓட்டங்கள் பெற்ற மொங்கியா ஆட்டமிழக்க அடுத்து வந்த வீரர்களும் படபடவென்று கழன்றனர். கடும் முயற்சியெடுத்த டென்டூல்கரும் 136 ஓட்டங்களுடன் களம்விலக இந்தியா 258 ஓட்டங்களுடன் ஒதுங்கியதால் சரித்திரமுக்கியமான இப்போட்டியில் 12 ஓட்டங்களான வியக்கத்தக்க வெற்றி பாகிஸ்தானுக்கு கிடைத்தது. இரண்டாவது இனிங்சிலும் முஸ்ராக் 5 விக்கட்டுகள் சாய்த்தார்.

## சிறீலங்கா அணித்தலைவர் சிக்கியுள்ள
# விசித்திரமான தண்டனை

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் 'கார்ல்ரன் அன் யுனைற்றட்' ஒரு நாள் போட்டித்தொடரில் கலந்துகொள்ளும் சிறீலங்கா கிரிக்கட் அணி 23.01.99 நடைபெற்ற போட்டியொன்றில் இங்கிலாந்தை எதிர்கொண்டபோது, மைதானத்தில் சிறீலங்கா அணியை வழி நடத்திய தலைவர் அர்ச்சுனா ரணதுங்கா நடந்துகொண்ட



விதம் சர்வதேச கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையால் ஏற்கக் கூடியதாக இருக்கவில்லை. அது மட்டுமன்றி அவ்வாறான பிற்போக்கு நடவடிக்கைகளால் சர்வதேச போட்டிகளை அவமதிப்பதாகவும் அவமானப் படுத்துவதாகவும் கருதி ரணதுங்கா விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இவ் விசாரணையின் போது உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய அணித் தலைவருக்கு வித்தியாசமான ஒரு தண்டனை வழங்கப்பட்டது. அதாவது தொடர்ந்து வரும் ஒரு வருடகாலப் பகுதியில் இதுபோன்ற அநாகரிகமான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டால் தொடர்ந்து 6 போட்டிகளுக்கு இடைநிறுத்தப்படுவதுடன் தனது சம்பளப் பணத்திலிருந்தும் 75% தண்டனைப்பணமாகவும் கொடுக்க வேண்டும். இந்த விசித்திரமான ஒத்துவைக்கப்பட்ட தண்டனையானது சிறீலங்காவின் கிரிக்கட் விளையாட்டுக்கு உலகிலிருந்து கிடைத்த ஒரு அவமானச் சின்னமாகும். அத்துடன் உலகசம்பியனாக இருக்கும் சிறீலங்கா இத்தொடர் போட்டிகளில் பெரும்தோல்விகளையும் சந்தித்து இறுதியாட்டத்தில் பங்குகொள்ளும் தகுதியையும் இழந்துவிட்டது.

### கிரிக்கட்

1999ம் ஆண்டு கோடை காலத்தில் பிரித்தானியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படும் வீரர்கள் சிலரை வாரத்திற்கு ஒருவர் வீதம் அறிமுகம் செய்யும் வரிசையில் அடுத்து வருபவர் கென்யா அணித் தலைவர் மொறிஸ் ஒடும்பே.

## மொறிஸ் ஒடும்பே (Maurice Odumbe)



இதுவரை அறிமுகம் செய்யப்பட்ட வீரர்களை விட மிகவும் வித்தியாசமான ஒரு அயிணின் தலைவரை இம்முறை வெளிக்காட்டுகின்றேன். இதுவரை அதிகாரம்பெற்ற கிரிக்கெட் தேசங்களின் வீரர்களுக்கு இணையாக ஆடிவரும் கென்யா அணியின் தலைவரைப் பற்றியும் அவ்வணியைப் பற்றியும் பார்த்தால், 20 ஒருநாள் போட்டிகளை மட்டும் எதிர்கொண்டு முன்னாள் உலக சம்பியன்களான வேகபந்து வல்லவர்கள் மேற்கிந்திய தீவுகளையும், சுழல்பந்து சுப்பர் அணி இந்தியாவையும் மடக்கிப்போட்டு வெற்றியை கொண்டாடியவர்களே கென்யர்கள். இருண்ட கண்டத்திலிருந்து அடுத்த டெஸ்ட் அந்தஸ்து நாடாகத்துடிக்கும் கென்யாவுக்கு தலைமை ஏற்றிருக்கும் ஒடும்வ் ஒரு சகலதுறை ஆட்டக்காரனாவார். 1969-ம் ஆண்டு ஜுன் 15 நைறோபியில் பிறந்த இவர் கென்ஜியா ஆடிய 20 போட்டிகளில் பங்கெடுத்துள்ளார். துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை 3 அரைச்சதங்களுடன் 446 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அதிகூடிய இவரின் ஓட்டம் 83 ஆகும். வலதுகர துடுப்பாட்டக்காரனான ஒடும்வ் சுழல்பந்து வீசி எதிரணியை சுருட்டுவதிலும் கைதேர்ந்தவர். 124.5 ஓவர்கள் பந்துவீசி 17 விக்கட்டுகளை சாய்த்திருக்கிறார். 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளை சாய்த்ததே இவரின் சிறந்த பந்து வீச்சாகும். கென்ஜா சார்பில் கூடிய விக்கட்டுகளை சாய்த்த இருவரில் ஒருவர். உலகக்கிண்ணப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள டெஸ்ட் அந்தஸ்து அற்ற நாடுகளில் (கென்யா, பங்களாதேஷ், நெதர்லாந்து) முதன்மையானது கென்யா. சென்றமுறை உலகக்கிண்ண போட்டியிலேயே மேற்கிந்திய தீவுகளை கெலிகெலிக்க தோற்கடித்து தமது முதலாவது வெற்றிவாகையை சூடினர் கென்ய அணியினர். இம்முறை ஒன்றுக்கு மேற்பட்ட பல நாடுகளை தோற்கடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வளர்ந்துவரும் அணியை வழிநடத்தி வெற்றி காண்பதில் தலைவர் ஒடும்வ்வுக்கு பெரும் பொறுப்பு உண்டு. கென்யா அணியை பொறுத்தவரை அனுபவமும் முதிர்ச்சியும் பெற்றவராக மட்டுமன்றி துடுப்பாட்டக்காரனாகவும், பத்துவீச்சாளராகவும் பிரகாசிக்கவேண்டியுள்ளது. இங்கிலாந்து தலைகளில் ஆடியே பழக்கப்படாத கென்யா கன்னி ஆடுகளங்களில் எதிரணிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி வெற்றியை குவிப்பதற்கு அணியை எவ்வாறுதான் ஒடும்வ் நகர்த்தப்போகிறார்? கென்யாவின் கிரிக்கெட் சரித்திரத்தில் நாயகனாக வரவேண்டுமானால் வரவிருக்கும் உலகக்கிண்ண போட்டிகளை சரிவர பயன்படுத்த ஒடும்வ் தவறமாட்டார். அணியின் யூக அமைப்பு பந்துவீச்சு, துடுப்பாட்டம் என்பவற்றினூடாக மற்றைய முன்னணி நாட்டு தலைவர்களுக்கு ஈடாக ஒடும்வ் தனது திறமைகளை வெளிக்காட்டுவாரா? . அத்தோடு டெஸ்ட் தகுதிக்கான பரீட்சையாகவும் கொண்டு கென்யாவை சித்தியடைய வைப்பாரா? போட்டிகள்தான் பதில் கூறவேண்டும்.

**- பொன். தாமோதரம்**

# அவுஸ்ரேலியன் ஓப்பன் முடிவுகள்

31.01.99 மெல்போர்னில் முடிவுற்ற அவுஸ்ரேலியன் ஓப்பன் டென்னிஸ் போட்டிகளின் முடிவுகளை பார்க்கும்போது ஐரோப்பியர்களின் கைகளே வலுப்பெற்றிருப்பதாக தோன்றுகிறது. ஏற்கனவே எதிரிபார்த்தபடி ஆண்கள் ஒற்றையர் பட்டம் புதிய ஒரு வீரனுக்கே கிடைத்திருக்கிறது உலகத்தில் 10-ம் இடத்திலிருந்த ரசியவீரன் ஷப்னிகோவ் (KAFELNIKOW) சுவீடன் வீரன் எங்குவிஸ்ட்டை (Enqvist) 4:6, 6:0, 6:3, 7:6 புள்ளிகள் வரிசையில் வெற்றிகொண்டார். 1996-ம் ஆண்டு பிரான்ஸ் லூப்பனுக்கு பின் இரண்டாவது தடவையாக முக்கிய போட்டி ஒன்றில் வெற்றிபெறும் ஷிப்னிகோவ் தற்போது 3-ம் இடத்திற்கு உயர்ந்திருக்கிறார்.

பெண்கள் பட்டத்தை தொடர்ந்து மூன்றாவது தடவையாக சுவிசின் மாட்டீனா கிங்கிஸ் மிக எளிதாக வெற்றி



கொண்டார். இவர் பிரான்சின் மறிஸ்மோவை (Mauresmo) 6:2, 6:3 அடிப்படையில் வெற்றி. பெறுவதற்கு 24 மணித்தியாலங்கள் முன்னதாக பெண்கள் இரட்டையர் போட்டியையும் வெற்றிகொண்டது குறிப்பிடத்தக்கது.

முதல்தரசோடி டவன்போட், சுறிவா சோடியை கிங்கிஸ், குர்னிக்கோவா சோடி 7:5, 6:3 புள்ளிகள் ஒழுங்கில் வெற்றி கொண்டு இரட்டையர் பட்



டத்தை கைப்பற்றினர்.

ஆண்கள் இரட்டையர் பட்டம் ரப்ரர், பிஜோர்மன் சோடிக்கு கிடைத்தது. இவர்கள் முதல்தர சோடியான இந்தியாவின் பகபதி, பயஸ் சோடியை 6:3, 6:4, 4:6, 6:7, 6:3 என்று மிகவும் சிரமத்திலேயே வெற்றிபெற்றனர். நடைபெற்ற அனைத்துப் போட்டியிலும் விறுவிறுப்பாக இறுதிப் போட்டி இதுவாகும் அத்துடன் 3மணி 16 நிமிடங்கள் நடைபெற்ற நீண்ட போட்டியாகும்.

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.61 | 1.66 | 0.18 | 0.75 |
| பிராங்பேட் | 1.64 | – | 2.79 | 0.30 | 1.24 |
| லண்டன் | 0.59 | 0.35 | – | 0.11 | 0.44 |
| பாரிஸ் | 5.53 | 3.35 | 9.36 | – | 4.15 |
| சூரிச் | 1.32 | 0.81 | 2.28 | 0.24 | – |
| பம்பாய் | 42.60 | 25.88 | 70.71 | 7.57 | 32.12 |
| கொழும்பு | 68.15 | 41.41 | 113.12 | 12.33 | 51.39 |

# குற்றவாளியை தேடிய பொலிசார் சிறீலங்கா தூதுவர் வீட்டில் சோதனை

மேற்கு ஐரோப்பிய நாடு ஒன்றில் சிறீலங்கா தூதுவர் ஒருவரின் வாசஸ்தலத்திலுள் பாலியல் வல்லுறவு குற்றவாளி ஒருவரைத் தேடி பொலிசார் சென்றுள்ளனர்.

இத் தூதுவரின் வீட்டிற்கு நள்ளிரவு வேளையில் பிரவே சித்த பொலிசார் அவர் வசித்த அதே கட்டிடத் தொகுதியில் அன்றிரவு நடந்த பாலியல் வல்லுறவு பற்றித் தெரிவித்த துடன் அவரது வீட்டிலும் குற்றவாளியை தேடியுள்ளனர். வேறு வழியில்லாத தூதுவரும் அங்கு வசித்த தூதரக உயர் அதிகாரி ஒருவரும் பொலிசாரு டன் ஒத்துழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

அதே கட்டிடத் தொகுதி யில் வேறுசில நாடுகளின் தூது வர்களும் வசித்துவருகிறார்கள்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்காவிற்கு.....

வார்த்தை மூலம் நெருக்கடிக் குத் தீர்வுகாண்பது அரசினைச் சார்ந்தது. தென்னாபிரிக்கா உட்பட பல்வேறு தரப்பினர் மத்தியஸ்தம் வகிப்பதற்கு விருப் பங்களை வெளிப்படுத்தியிருக்கி றார்கள். ஆனால் மத்தியஸ்தம் என்பது ஒருபோதும் திணிக் கப்படக்கூடாது. இது இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோ ளின் பேரிலேயே செய்யப்பட வேண்டும். அமெரிக்காவை இந்த விடயத்தில் இலங்கை அரசு நாடினால் எந்த வகை யில் நாம் உதவமுடியுமென பரிசீலிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### குருநகர்...

டனர். பின்னர் இப்பகுதிக்கு வந்த மீனவர்கள் பலியானவ ரது சடலத்தையும் காயமடைந் தவர்களையும் மீட்டுச் சென் றனர். படகில் வந்தவர்கள் இத் தாக்குதல் பற்றித் தெரிவிக்கை யில், உலங்குவானூர்தி எமது படகை நோக்கி தாழப்பறந்து வருவதைக் கண்டதும் நாம் வெள்ளைக்கொடியை உயர்த் திப் பலதடவை காட்டினோம். ஆனால் உலங்குவானூர்தி தாக்குதலை நடாத்தத்தொடங் கியது. நாம் அவலமாகக் குரல் எழுப்பியபோதும் தாக்குதல் தொடர்ந்தும் நடைபெற்றது. அவ்வேளை தாக்குதலுக்கு இலக்கான போதகர் மண்டை சிதறிய நிலையில் அவ்விடத் திலே கொல்லப்பட்டார். பட கில் இருந்த நாம் கடலில் குதித் துத் தப்பிக்கொண்டோம். ஆனாலும் படகில் இருந்த இரு வருக்கு காயம் ஏற்பட்டது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### அவுஸ்திரேலிய....

என்ன சமிக்ஞை தேவைப்படுகி றது சில உதாரணங்களைக் கூற முடியுமா?

**கதிர்காமர்:** இல்லை அவர் கள் தான் முயற்சி மேற்கொள்ள வேண்டும். நான் உங்களுக்கு உதாரணங்களைச் சொல்லப் போவதில்லை வேறு ஏதாவது?

**மேயர்ஸ்:** ஆம் செம்மணி புதைகுழிகள் பற்றி ஏன் விசார ணைகள் மேற்கொள்ளப்பட வில்லை. எப்போது புதைகுழிகள் தோண்டப்படும்?

**கதிர்காமர்:** அதிகாரிகள் தயாராக இருக்கும்போது அந்த விவகாரம் இப்போது நீதிபதியின் கட்டுப்பாட்டிலுள்ளது. உங்களை யும் விட (அவுஸ்திரேலியா) சிறந்த நீதிமுறை எங்களிடமுள்ளது.

**மேயர்ஸ்:** ஆனால் ஆறு மாதங்கள் இப்போதே எடுத்து விட்டனவே?

**கதிர்காமர்:** பல்வேறு நட வடிக்கைகள் எடுக்கப்படவேண்டி இருந்தது.

**மேயர்ஸ்:** இது தொடர்பாக விசாரணை செய்ய அரச தரப்பி லிருந்து தடையேதுமில்லையே?

**கதிர்காமர்:** நிச்சயமாக இல்லை (சற்று சூடாக) புலிக ளுக்காக வேறு ஏதாவது?

**மேயர்ஸ்:** (வியப்புடன்) மன் னிக்கவும்?

**கதிர்காமர்:** புலிகளுக்காக ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

**மேயர்ஸ்:** அமைச்சரே நான் புலிகளுக்கான வாதத்தை முன் வைக்கவில்லை.

**கதிர்காமர்:** அந்தமாதிரி தொனியாகத்தான் உங்களது கேள்விகள் அமைந்தன

**மேயர்ஸ்:** நான் கேள்விக ளைத்தான் கேட்டேன்.

**கதிர்காமர்:** கேள்விகளைக் கேட்பதற்கு சில வழிமுறைகள் உள்ளன. நீங்கள் சகல கேள்வி களுக்கும் பதிலை வரவழைக்கக் கூடிய தந்திரத்தை கையாளுகிறீர் கள். வேறேதாவது?

இத்துடன் இருவருக்குமிடை யிலான உரையாடல் முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### செம்மணிப்....

ளாக இவை இருக்கலாமென வும் நம்பப்படுகிறது. இவற்றினை அடையாளம் கண்டுகொள்வ தற்காக காணாமல்போனோ ரின் உறவினர்கள் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு குற்றப் புலனாய்வுத்துறைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவது தொடர்பாக யாழ். நீதி மன்றத்தில் கடந்த 29-ம் திகதி நடைபெற்ற விசார ணைகளின்போதே இவ்விட யங்கள் வெளிப்படுத்தப்பட்டுள் ளன.


## சிவாசினி வாகன சேவை


## Chivashini Transport

**வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை**

தொடர்புகட்கு: ஜெயா

0614616984 / 0611289118 / 0614424117 / 01 42 05 44 04

டிஸ்னி ரெஸ்றோறன்ட்



Pub


## இரண்டாம் ஆண்டு நினைவுகள்



அமரர் கே.சி. விநாயகேந்திரன் (அப்பி) மறைவு: சுவிஸ்

அமரர் கே.சி. யோகேந்திரன் (பபி) மறைவு: தமிழீழம்

**24.01.1997**

தமிழீழ மண்ணின் மைந்தர்கள்
இரட்டையராயினர்!
இசையும் கலையும் இணைந்தே
இன்தமிழ் சுவையும் கலந்து
கவிதைச் சுரங்கள் தந்தீர்! - அதை
இன்றும் நினைக்க இனிக்குதே!
தமிழோடு ஈழமண் விடுதலை
இரையோடு தமிழீழத் தாகம்
வாழ்ந்திட்டீர்! இறையோடு
கலந்திட்டீர்! நாமும்
உங்கள் நினைவோடு
கலந்திட்டோம்! மறவோம்
உங்கள் நினைவுதனை!

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 05.09.1949

இறப்பு: 01.02.1993

### தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்

(விலாசம் மருதங்கேணி வடக்கு)

01.02.1999 இவரது 6ம் ஆண்டு நினைவாக இவரின் ஆத்மா சாந்தியடையவேண்டுமென இவரின்-மனைவி-மக்கள் தம்பிமார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத் துனிமார்கள், சகலன்மார்கள், பெறாமக்கள் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்

தகவல்: சு.ஜீவன்


## காயத்திரி

**210, Rue du Fbg. St. Denis, 75010 Paris.**

**Tel: 01 42 09 22 43 - Fax: 01 46 07 09 34**

அனைத்து மீன் வகைகளும் மரக்கறி வகைகளும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx. T.P: 0181 / 813 9126

# அவுஸ்திரேலிய செய்தியாளருடன் கதிர்காமர் சூடானவாதம்

**கதிர்காமர்:** '(கோபமாக) புலிகளுக்காக ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

**மேயர்ஸ்:** அமைச்சரே நான் புலிகளுக்கான வாதத்தை முன்வைக்கவில்லை கேள்விகளைத் தான் கேட்டேன்.

இது அவுஸ்திரேலிய தேசிய வானொலி செய்தியாளர் பீற்றர் மேயர்ஸ்சுக்கும் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமருக்கும் இடையில் நடந்த ஒரு சூடான விவாதத்தின் ஒரு கட்டமாகும்.

அவுஸ்திரேலியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் கதிர்காமரை 'அவுஸ்திரேலிய ரேடியோ நஷனல்) செவ்விகண்டது.

செம்மணி புதைகுழி விவகாரம், தீர்வுப்பொதி ஆகிய விடயங்களில் செய்தியாளர் பீற்றர் மேயர்ஸ் தொடர்ச்சியாக கேள்விகளை கேட்டபோது கதிர்காமர் உணர்ச்சிவசப்பட்டவராகி சூடான பதில்களையே கொடுத்துள்ளார்.

அரசின் தீர்வுப்பொதி ஸ்தம்பித நிலையை அடைந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொண்ட கதிர்காமர் புலிகளின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு வெளிப்பாசாங்கானது என குறிப்பிட்டார். அதற்கு பீற்றர் மேயர் 'அரச பேச்சுக்களுக்கு முயற்சிக்காமல் புலிகள் பேச்சுக்கு வரவில்லை என எவ்வாறு உங்களுக்குத் தெரியும்' என வினவியபோது "ஆம் எமக்கு தெரியும்' என்று கதிர்காமர் பதிலளிக்க

'எப்படி உங்களுக்குத் தெரியும்' என மீண்டும் மேயர்ஸ் கேட்க சூடாகிய கதிர்காமர் 'எமக்குத் தெரியுமென்று உங்களுக்கு நான் சொல்கிறேன் என்றார் கதிர்காமர்.

**மேயர்ஸ்:** எங்களுடைய அபிப்பிராயப்படி புலிகள் நம்பகத்தன்மையை வெளிப்படுத்த என்ன செய்யவேண்டும்.

**கதிர்காமர்:** எம்மை அவர்கள் திருப்திப்படுத்தவேண்டும். அதை செய்வதற்கு அவர்களுக்கு வழிவகைகள் இருந்தும் அவர்கள் அதை செய்கிறார்களில்லை.

**மேயர்ஸ்:** புலிகள் நல்லெண்ண அறிகுறியாக 9 சிறீலங்கா படையினரை விடுவித்தார்களே?

**கதிர்காமர்:** ஒன்பது பேர் என்ன, ஒன்பது பேர். நூற்றுக் கணக்கானவர்களைத் தொடர்ந்தும் புலிகள் தடுத்து வைத்துள்ளனரே...?

**மேயர்ஸ்:** சரி மேலதிகமாக புலிகளிடமிருந்து உங்களுக்கு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# குருநகர் கடற்பரப்பில் MI-24 தாக்குதல் மதகுரு பலி – அகதிகள் காயம்

கடந்த 28-ம் திகதி விடுதலைப் புலிகளுடனான மோதலில் இழப்பினைப் பெற்றுக் கொண்ட சிறீலங்கா வான் படையினர் தமது பழிவாங்கல் நடவடிக்கையை மறுநாள் காலை குருநகர் கடற்பரப்பில் மேற்கொண்டுள்ளனர்.

குருநகர் கடற்பகுதியில் கடந்த வெள்ளி(29.01.99) காலை சிறீலங்கா வான்படைக்குச் சொந்தமான MI-24 ரக உலங்கு வானூர்தி நடத்திய கடுமையான தாக்குதலில் வன்னியில் இருந்து படகொன்றின் மூலம் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த கிறீஸ்தவ போதகர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் படுகாயம்டைந்துள்ளனர்.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த 11 பேர்கள் அடங்கிய குழுவொன்று யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்தது. குருநகர் மண்பிட்டி பகுதியை நோக்கி இவர்களின் படகுகள் வந்தபோது அப்பகுதிக்கு வந்த MI-24 ரக உலங்குவானூர்தி அப்படகு மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டது. இதன் காரணமாக ஞானப்பிரகாசம் அலோசியஸ் என்ற சுவிஷேச சபைப் போதகர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர். மிகுதிப்பேர் தாக்குதல் நடைபெற்றவேளை கடலில் குதித்து தப்பிக்கொண்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# சிறீலங்காவிற்கு எவ்வழியிலாவது உதவமுடியுமானால் அவ்வாறு செய்வோம் – அமெரிக்க அமைச்சர்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குச் சாத்தியமான அளவு விரைவாக பேச்சுக்கள் மூலமாக தீர்வு ஒன்றைக் காண வேண்டியதே அரசாங்கத்தின் பொறுப்பானாலும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தம் ஒன்று திணிக்கப்படுவதை அமெரிக்கா எதிர்க்கின்றது. இவ்வாறு தெற்காசிய விவகாரங்களிற்குப் பொறுப்பான அமெரிக்க உதவி ராஜாங்க அமைசர் சாள்ஸ் இன்ரபேர்த் அண்மையில் தெரிவித்திருக்கிறார். பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு எந்த வழியிலாயினும் உதவி வழங்குவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறது. இந்தப் பணியைப் பூர்த்திசெய்ய முடியுமாக இருந்தால் அவ்வாறே செய்வோம். சிறீலங்கா ஆயுதப் படைகளுக்கு பயிற்சி அளிப்பதில் எந்த வகையிலும் அமெரிக்கத் துருப்புகள் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இந்த நெருக்கடி நிலையில் அமெரிக்காவிற்கு இராணுவ ஈடுபாடு எதுவும் கிடையாது. எதிர்காலத்திலும் அவ்வாறு ஈடுபாடு காட்டப்போவதில்லை. இந்த இன நெருக்கடியின் விளைவாகத் தொடரும் போரினால் ஏற்படும் மனித அவலங்கள் கவலை தருகின்றன. சாத்தியமான அளவு விரைவாக பேச்சு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# செம்மணிப் புதைகுழிப் பகுதியில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள்

செம்மணிப் புதைகுழிப் பகுதியில் சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டமை பற்றி யாழ். நீதிமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புதைகுழிகளில் புதைக்கப் பட்டவர்களுடைய சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்க

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# 'புலிகளின் குரலி'டம் தோற்ற 'ரூபவாஹினி'

(01.02.1999)

வன்னியல் இருந்து ஒலிபரப்பாகும் 'புலிகளின் குரல்' வானொலியின் சிங்கள சேவையான 'கொட்டிகந்த' ஒலிபரப்பை தடுப்பதற்காக மடுக்கந்தைப் பகுதியில் உள்ள ரூபவாஹினி ஒலிபரப்பு நிலையத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் அது தோல்வியில் முடிவடைந்துள்ளது. இந்த ஒலிபரப்பை குழப்புவதற்காக விசேட உபகரணங்கள் அமைக்கப்பட்டும், புலிகளின் குரலை தடுக்க முடியவில்லை. புலிகளின் குரல் சிற்றலைவரிசை மூலம் ஒலிபரப்பப்படுவதாலும், சடுதி சடுதியாக நிகழ்வு வரிசையை மாற்றிக்கொண்டிருப்பதாலேயுமே இதனை குழப்ப முடியவில்லை என ரூபவாஹினி தெரிவித்துள்ளது.

லண்டனில் புதுப் பொலிவுடன்
K.R.S. ENTERPRISES

உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள், மளிகைப் பொருட்கள்
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
537 HIGH ROAD, WEMBLEY
MIDDLESEY, HAO 2DJ
Tel: 0181-9024590